

# மாற்றத்தின் அறுவடை

நீதி, இறையாண்மை மற்றும் சுபீட்சத்திற்கான
முறைமை மாற்றத்திற்கு, உணவு
உற்பத்தியாளர்களின் அனுபவங்கள்



# மாற்றத்தின் அறுவடை:

## நீதி, இறையாண்மை மற்றும் சுபீட்சத்திற்கான முறைமை மாற்றத்திற்கு, உணவு உற்பத்தியாளர்களின் அனுபவங்கள்

மே 2026

**மாற்றத்தின் அறுவடை:**

**நீதி, இறையாண்மை மற்றும் சுபீட்சத்திற்கான முறைமை மாற்றத்திற்கு, உணவு உற்பத்தியாளர்களின் அனுபவங்கள்**

**மே 2026**

**அட்டை வடிவமைப்பு** - டசியானா ஹெண்டி

**வரைபட விளக்கம்** - சேம் வீரவர்தன


**இந்த அறிக்கையை எழுதியவர்கள்:**

சந்துன் துடுகல

அமலினி தி சேரா

நட்டாஷா வென்வொப்



**வெளியீடு:**

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST)
102/3, பான்ஸ் ப்லேஸ், கொழும்பு 07

காணி மற்றும் விவசாய மறுசீர் அமைப்பு (MONLAR)
இல. 57, முதலாம் ஒழுங்கை, மெத வெலிகட வீதி, ராஜகிரிய

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் (NAFSO)
இல. 10, மல்வத்த வீதி, நீர்கொழும்பு.

**சமர்ப்பணம்**

*நிமால் டி சில்வா*

விவசாயி, சமுதாயத் தலைவர், பாரம்பரிய விதைகளின் பாதுகாவலர், விவசாய வனவியல் கல்வியாளர்

மறைவு - 2025, நவம்பர் 21

*தானிகல மஹ பண்டலாகே சுதா வன்னில அத்தோ*

ரத்துகல ஆதிவாசிப் பழங்குடியினத் தலைவர்

மறைவு - 2026, மே 06

இந்தக் கருத்திட்டத்திற்கான மற்றும் அறிக்கைக்கான ஒன்றுகூடல்களில் இவர்கள் இருவரும் பங்குபற்றியமையும் இவர்களுடனும் இவர்களது சமுதாயங்களுடனும் நீண்டகாலத் தொடர்புகளை நாம் கொண்டிருந்தமையும் எமக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தருணமாகும். இவர்கள் இருவரும் தமது மக்களின் மேம்பாட்டிற்காகவும் இயற்கை உலகின் பாதுகாப்பிற்காகவும் அர்ப்பணிப்பைக் கொண்டிருந்த தலைவர்களாவர். இவர்களால் கட்டியெழுப்பப்பட்ட கூட்டிணைவுகளிலும் இவர்களால் அறிவூட்டப்பட்ட இளைஞர்களின் வழியாகவும் இவர்களின் விவேகம் நிலைத்து வாழ்கின்றது.

*சக்தியுடன் இளைப்பாறுக*

## நன்றி நவிலல்

இந்த ஆய்வினையும் அறிக்கையையும் சாத்தியமாக்கிய அனைவருக்கும் கருத்திட்டக் குழுவினர் தங்களின் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றனர்:

- கண்டி, ஹட்டன், தம்புள்ளை, மன்னார், யாழ்ப்பாணம், தங்காலை, தெனியாய, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய இடங்களில் நடைபெற்ற ஒன்றுகூடல்களுக்கு சமுகமளித்த விவசாயிகள், மீனவர்கள், பயிர்ச்செய்கையாளர்கள், உற்பத்தியாளர்கள், ஏற்பாட்டாளர்கள், மற்றும் சமுதாயத் தலைவர்கள்.

  சமூகங்கள், சங்கங்கள், கிராமங்கள் மற்றும் ஏனைய உள்ளூர் மட்டக் குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளாகச் செயற்படும் இவர்கள், தங்களின் பரந்த சமுதாயத்தின் அறிவையும் அனுபவங்களையும் தங்களிடத்தில் கொண்டுள்ளனர். நிலைமாற்றத்தை நோக்கிய இவர்களின் பணிக்காகவும் தங்களின் நிபுணத்துவத்தைப் பெருந்தன்மையுடன் பகிர்ந்து கொண்டமைக்காகவும் இந்தக் கூட்டிணைவுகளுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுகின்றன.

- அமர்வுகளை வசதி செய்வதற்கும் இந்த சிந்தனைகளை எதிர்காலத்திற்கு எவ்வாறு எடுத்துச் செல்லமுடியும் என்பதை வடிவமைப்பதற்கும் தங்களின் நேரத்தையும் நிபுணத்துவத்தையும் வழங்கிய ஆணையாளர்கள்:

  ஏ. சீ. ஆர். ஜோன்

  சத்துரிகா செவ்வந்தி

  சிந்தக ராஜபக்ஷ

  மஹேஷி பிரேமச்சந்திர

  மஹிந்த குணரத்ன

  பிரியங்கர கொஸ்தா

  சந்துன் துடுகல

  சரளா இம்மானுவேல்

  சுகன்யா காண்டீபன்

  விதுர முனசிங்க

  விமுக்தி டி சில்வா

- பங்குபற்றுநர்களால் பகிரப்பட்ட பெருமளவிலான தகவல்களை ஆவணப்படுத்தி அவற்றை வகையாக்கம் செய்தமைக்காக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் குறிப்புகள் எடுப்போர்.

  அமலினி டி சேரா

  அஞ்சன ஆரியரத்ன

  நிஷாந்தனி செல்வரத்னம்

  சுஹைனா ரஸாக்

- பிரதேசமட்ட அமர்வுகளின்போது விலைமதிப்பற்ற மொழிப்பெயர்ப்பு சேவைகளை வழங்கியமைக்காக ஜினாந்தனி பரமேஷ்வரம் (ஜெனி).

- இலங்கையின் ஏழு மாகாணங்களில் பரந்து இடம்பெற்ற அனைத்துக் கள அமர்வுகளுக்கும் கருத்திட்டக் குழுவினருக்குப் போக்குவரத்து சேவைகளை வழங்கியமைக்காக Global Travels (Pvt) Ltd.

## உள்ளடக்க அட்டவணை


| | | |
|---|---|---|
| சொற்களின் விளக்கங்கள் | | 11 |
| அறிமுகம் | | 13 |
| முறையியல் | | 20 |
| அறிக்கை கண்டுபிடிப்புகள் | | 21 |
| 1. | நெல் | 24 |
| 2. | மீன்வளம் | 31 |
| 3. | பிற பயிர்கள் | 34 |
| 4. | உணவு உற்பத்தியுடன் தொடர்புடைய பிற குடும்ப வாழ்வாதாரங்கள் | 40 |
| முறையான உணவுமுறை மாற்றத்திற்கான கட்டமைப்புத் தடைகள் | | 44 |
| விதப்புரைகள் | | 49 |
| இணைப்புகள் | | 52 |
| 1.ஆணையாளர்களுக்கான நேர்காணல் வழிகாட்டுதல்கள் | | 52 |
| 2. பங்கேற்பாளருக்கான கேள்வித்தாள் | | 53 |
| 3. விவசாய சூழலியல் கோட்பாடுகள். | | 54 |

## <u>சொற்களின் விளக்கங்கள்</u>

Agroecology (**சூழலியல்** விவசாயம் )

சூழலியல் விவசாயம் என்பது மக்களின் நலனையும் உயிரியல் பல்வகைமையின் பாதுகாப்பையும் மையமாகக் கொண்டு உணவு உற்பத்தி செய்யும் ஒரு அணுகுமுறையாகும். இது பல்வேறு விதங்களில் விளக்கப்படுகிறது:

-இயற்கை செயல்முறைகளைப் பின்பற்றும் விவசாய நடைமுறைகளின் தொகுப்பாக,

-இலாபத்தை விட மக்களையும் சுற்றுச்சூழலையும் முன்னிலைப்படுத்தும் உணவு உற்பத்தி மற்றும் பொருளாதார அணுகுமுறையாக,

-உணவு அமைப்புகளை மாற்றும் வழியாக உணவு இறையாண்மைக்காகப் போராடும் அரசியல் இயக்கமாகவும் இது கருதப்படுகிறது (War on Want, n.d.).

Food Sovereignty (**உணவு இறையாண்மை**)

உணவு இறையாண்மை என்பது மக்கள் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மற்றும் நிலைத்தன்மை கொண்ட முறைகளின் மூலம் தயாரிக்கப்படும் ஆரோக்கியமான மற்றும் கலாச்சாரத்திற்கு ஏற்ற உணவைப் பெற்றுக்கொள்ளும் உரிமையையும், தங்களது சொந்த உணவு மற்றும் விவசாய அமைப்புகளைத் தீர்மானிக்கும் உரிமையையும் குறிக்கிறது.

இது சந்தைகள் மற்றும் நிறுவனங்களின் தேவைகளை விட உணவை உற்பத்தி செய்பவர்கள், விநியோகிப்பவர்கள் மற்றும் நுகர்வோரின் தேவைகளையும் விருப்பங்களையும் உணவு அமைப்புக்கள் மற்றும் கொள்கைகளின் மையத்தில் கொண்டு வருகிறது.

மேலும், இது அடுத்த தலைமுறையின் நலன்களையும் பங்கேற்பையும் பாதுகாக்கிறது. தற்போதைய நிறுவன ஆதிக்கம் கொண்ட வர்த்தக மற்றும் உணவு அமைப்புகளை எதிர்த்து அவற்றை மாற்றுவதற்கான ஒரு செயல்திட்டத்தையும், உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் பயனாளர்களால் தீர்மானிக்கப்படும் உணவு, விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடி அமைப்புகளுக்கான வழிகாட்டுதல்களையும் இது வழங்குகிறது (Nyéléni, 2007).

UNDROP (கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகள் மற்றும் பிற உழைக்கும் மக்களின் உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் பிரகடனம் )

**விவசாயிகள் மற்றும் சிறு உணவு உற்பத்தியாளர்கள்:** விவசாயிகள், மீனவர்கள், நிலமற்ற தொழிலாளர்கள், பழங்குடி மக்கள், தோட்டத் தொழிலாளர்கள், கிராமப்புறப் பெண்கள் மற்றும் இளைஞர்கள், இவர்கள் பாரம்பரிய, சூழலியல் விவசாயம் மற்றும் சமூக அடிப்படையிலான முறைகளைப் பயன்படுத்தி உணவை உற்பத்தி செய்கிறார்கள், மேலும் இவர்களின் வாழ்வாதாரம் நிலம், நீர், விதைகள் மற்றும் இயற்கை வளங்களுக்கான அணுகலைச் சார்ந்துள்ளது. (La Via Campesina, 2018| U.N General Assembly , 2018).

## அறிமுகம்

உணவு ஓர் அடிப்படை மனித உரிமையாகும்.

முழுமையான கண்ணியத்துடன் ஓர் ஆரோக்கியமான வாழ்வை வாழ்வதற்கு அனைத்து மனிதர்களும் போதிய அளவிலான மற்றும் தரத்துடனான, பாதுகாப்பான, போஷாக்கு நிறைந்த மற்றும் கலாசாரரீதியாகப் பொருத்தமான உணவிற்கான அணுகலைக் கொண்டிருத்தல் வேண்டும். உணவு என்பது கலாசாரம், நினைவு, சடங்கு மற்றும் உறவுமுறை. மிகவும் பிரதானமாக, உணவு என்பது ஒரு வெற்றிடத்தில் நிலைப்பதில்லை. உணவு என்பது ஒரு முறைமை: உணவு என்பது அதனைப் பயிரிடுவோர், அதன் வளர்ச்சியை நிலைநிறுத்தும் நிலங்கள் மற்றும் நீர்நிலைகள், அதனை நகர்த்தும் சந்தைகள் மற்றும் நிறுவனங்கள், அத்துடன் அதனை உட்கொள்ளும் சமூகங்கள் ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்புகளின் அடர்த்தியான ஒரு வலைப்பின்னலாகும்.

உணவை வெறுமனே ஒரு பொருளாக மாத்திரம் மட்டுப்படுத்துதல் என்பது இவ்வகையான தொடர்புகளை செயற்கையாகத் துண்டித்தலாகும். மரக்கறி ஒன்றினை வெறுமனே ஒரு விலையாக, விதை ஒன்றினை வெறுமனே ஒரு காப்புரிமையாக, அத்துடன் விவசாயி ஒருவரை வெறுமனே தொழில் அலகு ஒன்றாகப் பாசாங்கு செய்வதே இதுவாகும். உணவு முறைமையை வடிவமைத்து அதில் செல்வாக்குச் செலுத்தும் பரந்த பொருளாதார, சமூக, மற்றும் அரசியல் முறைமைகளை மறந்து விடுதல் அல்லது புறக்கணித்தலே இதுவாகும். துரதிஷ்டவசமாக, தற்போதுள்ள சந்தை அடிப்படையிலான முதலாளித்துவ உணவு முறைமை வந்தடைந்துள்ள இடம் மிகத் துல்லியமாக இதுவேயாகும் என்பதுடன் இந்தப் பாசாங்கு நிலையின் விளைவுகளும் எம்மைச் சூழ்ந்துள்ளன. உலகளாவிய ரீதியில், 783 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடும் அதேவேளை 1.05 பில்லியன் தொன் உணவுக்கழிவுகள் உற்பத்தியாக்கப்படுகின்றன. இது தனிநபருக்குத் தலா 132 கிலோகிராம் என்பதுடன் நுகர்வோருக்குக் கிடைக்கப்பெறும் அனைத்து உணவுகளினதும் ஏறத்தாழ ஐந்திலொரு பங்குமாகும் (UNEP, 2024). மண்வளம் குறைவடைகின்றது, நீர்நிலைகள் வற்றியுள்ளன அத்துடன் சூழலியலும் முறிவடைந்துள்ளது.

**முறைமையியல் ஒன்றாக உணவு**

ஒவ்வொரு வேளை உணவும் காலத்தின் வழியாகப் பின்னோக்கி நீளுகின்ற உறவுகளின் சங்கிலியொன்றின் இறுதிப் புள்ளியாகும். பயிரிட்டு அறுவடை செய்யும் விவசாயிகள், வலைகளையும் தூண்டில்களையும் வீசும் மீனவர்கள், தங்கள் கால்நடைகளைப் பராமரிக்கும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் போன்றோர் முதல் பயிர் வளரும் நிலம், பாயும் நீர், மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடும் பூச்சியினங்கள், சேதனப் பொருட்களை ஊட்டச்சத்துக்களாக மாற்றும் மண்ணில் உள்ள நுண்ணுயிரிகள், வியாபாரிகள் மற்றும் அறுவடையைப் போக்குவரத்துச் செய்வோர், அதன் விலையை நிர்ணயிக்கும் சந்தைக் கட்டமைப்புகள், மற்றும் அந்தக் கட்டமைப்புகளை வடிவமைக்கும் அரசியல் தீர்மானங்கள் போன்றவை வரையான அனைத்தையும் இந்தச் சங்கிலி இணைக்கின்றது.

இந்தச் சங்கிலியை சுருக்கம் ஒன்றாக அல்லாது உறுதியான அரசியல் யதார்த்தம் ஒன்றாக ஆராய்ந்து அறியுமாறு Stuffed and Starved என்னும் நூலில் எழுத்தாளரும் உணவுக் கொள்கை நிபுணருமான ராஜ் படேல் எம்மிடம் கேட்டுக்கொள்கின்றார். உலகளாவிய உணவு முறைமையானது மணிநேரக் கருவி (ஈழரசபடயளள) ஒன்றினைப் போன்று வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் எடுத்துக் காட்டுகின்றார். மேற்பகுதியில், நூற்றுக்கணக்கான மில்லியன் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் ஒவ்வொரு வகையான உணவு உற்பத்தியாளர்கள் ஆகியோர் உள்ளனர். கீழ்ப்பகுதியில், அவர்கள் உற்பத்தி செய்யும் உணவை உண்ணும் பில்லியன் கணக்கான நுகர்வோர் உள்ளனர். மணிநேரக் கருவியின் குறுகிய கழுத்துப்பகுதியாக - கார்கில், மொன்சன்ட்டோ (தற்போது Bayer), ADM, நெஸ்லே, வோல்மார்ட் போன்ற - ஒரு சில நாடு கடந்த நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவற்றின் கைகளின் வழியாகவே ஏறத்தாழ அனைத்தும் கடந்து செல்கின்றன. இந்த மணிநேரக் கருவி என்பது ஒரு நடுநிலையான வழங்கல் ஏற்பாடு அல்ல. இது ஒரு அதிகாரக் கட்டமைப்பு. உணவை முறைமை ஒன்றாகப் புரிந்துக்கொள்வது என்பதன் பொருள் அதிகாரத்தை முறைமையின் ஒழுங்கமைக்கும் கோட்பாடாகப் புரிந்துக்கொள்ளுதல் என்பதாகும்.

உற்பத்தி என்பது உணவு முறைமையின் அடித்தளமாகும். இது வெறுமனே ஒரு பொருளாதார செயல் அல்ல, மாறாக ஆழமான சமூக மற்றும் சூழலியல் செயல் ஒன்றாகும். பாரம்பரிய நெல் வயலொன்றில் பயிரிடும் ஒரு விவசாயி வெறுமனே ஒரு பயிரை உற்பத்தி செய்வதில்லை. மண் வகைகள், மழைவீழ்ச்சிக் பருவக்காலங்கள், விதை வகைகள் மற்றும் ஊட்டச்சத்துக்கள் என்பவை பற்றித் தலைமுறைகளாகத் திரட்டப்பட்ட அறிவை அவள் மீள உற்பத்தி செய்கின்றாள். விவசாய சூழலியல் மொழியில், இயற்கையிலிருந்து வெறுமனே பிரித்தெடுப்பதை விட இயற்கையுடன் இணைந்து அவள் உற்பத்தி செய்கின்றாள். அதேபோன்று நீரோட்டங்களைப் படித்தறிகின்ற, இனப்பெருக்கக் காலங்களை அறிந்துள்ள, பல தலைமுறைகளின் பயன்பாட்டால் வடிவமைக்கப்பட்ட கரையோர சூழற்தொகுதி முறைமைகளின் ஊடாக வழிநடக்கும் மீனவர்களும் தொழிற்படுகின்றனர். வீட்டுத் தோட்டச்செய்கைகளில் ஈடுபடுவோர், விவசாய வனவியல் விவசாயி, சிறு அளவிலான கால்நடை வளர்ப்போர் ஆகியோரும் இவ்வாறே. இத்தகைய உற்பத்தியாளர்கள் ஒவ்வொருவரும் தொழிற்துறை உணவு முறைமைகளால் பிரதியீடு செய்யவோ அவற்றினால் மதிப்பளிக்கவோ முடியாத ஒரு உறவு முறையை இயற்கை உலகுடன் கொண்டுள்ளனர்.

உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையே சந்தைகள் நிற்கின்றன என்பதுடன் மணிநேரக் கருவியானது இங்கேயே மிகவும் கொடூரமான வகையில் இறுகுகின்றது. உற்பத்தி முனையில், சிறு விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் விலை ஒன்றை நிர்ணயிக்கும் அதிகாரம் வழங்கப்படுவதற்கு மாறாக ஒரே விதத்தில் சந்தையின் ஊடாக விலையொன்று ஒதுக்கப்படுகின்றது. அவர்களினதும் ஏனையோரினதும் உழைப்பு, மூலப்பொருள் உள்ளீடுகள், மற்றும் மாறும் வானிலை என்னும் அபாயம் போன்ற உற்பத்திச் செலவுகளை அவர்கள் உள்வாங்கிக் கொள்கின்றனர். அதேவேளையில், அவர்கள் பெறும் விலைகள் கூட்டாண்மை நிறுவனங்களின் கைகளில் குவிந்துள்ள கொள்வனவு சக்தியால் நிர்ணயிக்கப்படுகின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், புவியியல் ரீதியாக, இந்தக் கூட்டாண்மை நிறுவனங்கள் உற்பத்தியாளர்களுக்குத் தொலைவாக உள்ளன. நுகர்வு முனையில், நகர்ப்புறத்திலுள்ள ஏழைகள் தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியை உணவிற்காகச் செலவிடுவதுடன், விலைகள் உயரும்போது மிகவும் பாதிப்புறும் நிலைக்குள் தள்ளப்படுகின்றனர். விவசாயிக்கும் பட்டினியாக உள்ளவருக்கும் இடையேயான குறுகிய பகுதியில் உள்ள கூட்டாண்மை நிறுவனங்கள், சில்லறை வியாபாரிகள் மற்றும் நிதி உத்தேச வர்த்தகர்கள் ஆகியோரால் பாரிய பெறுமதி பிரித்தெடுக்கப்படுகின்றது

உணவு உற்பத்தியும் ஒரு சூழலியல் செயலாகும். இது மண்ணில், வானத்தின் கீழ், ஆறுகளுக்கு அருகே, காலநிலைகளின்போது, மற்றும் சமுத்திரங்களிடையே இடம்பெறுகின்றது. உணவு முறைமைகளின் ஆரோக்கியம் மற்றும் உயிருள்ள சூழற்தொகுதி முறைமைகளின் ஆரோக்கியம் என்பவை தனித்தனியான அக்கறைகள் அல்ல. இவைகளில் ஒன்று மற்றொன்றைப் பாதிக்கின்றது என்பதுடன் அவை ஆழமாக ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. ஆயினும், தற்போதுள்ள உணவு முறைமையானது சுற்றாடலை இலவச உள்ளீடு ஒன்றாகவும் இலவசக் குப்பைக் கிடங்கு ஒன்றாகவுமே கையாளுகின்றது. காலநிலை மாற்றம் எமது உலகில் தாக்கம் செலுத்தும் வேளையில், ஒவ்வொரு வருடமும் இதன் விளைவுகள் மிகவும் தெளிவாகப் புலப்படுகின்றன. உற்பத்தியாளர்கள் தங்களது அறுவடைகளுக்காகவும் தங்களது மீன்பிடிக்காகவும் தங்கியிருந்த காலங்கள் மாற்றமடைந்து வருகின்றன. இது அவர்களின் வாழ்வாதாரங்களையும் எமது உணவுகளையும் ஆபத்திற்கு உள்ளாக்குகின்றது.

**தற்போதைய உணவு முறைமையும் அதன் தோல்விகளும்**

தற்போதைய உணவு முறைமை பல தசாப்தங்கால வன்முறையின் ஊடாகக் கட்டியெழுப்பப்பட்டது. உடைமை பறிப்பு, காலனித்துவ சுரண்டல், பொதுக் காணிகளின் அடைப்பு, மற்றும் வாழ்வாதார விவசாயிகளை காணிகளற்ற கூலித் தொழிலாளர்களாக அல்லது ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியாளர்களாக வலுக்கட்டாயமாக மாற்றியமை ஆகியவை, மனிதப் போஷாக்கினை பற்றியதாக அல்லாது மூலதன குவிப்பின் தேவைகளைச் சுற்றியதாக உணவு உற்பத்தியை மாற்றியமைத்தது. இறுதியில், உலகளாவிய விதை விற்பனைகள், விவசாய இரசாயனச் சந்தைகள், தானிய வர்த்தகம், உணவு பதனிடல் மற்றும் உணவின் சில்லறை விற்பனை என்பவற்றின் பெரும்பான்மையை ஒரு சில கூட்டாண்மை நிறுவனங்களே கட்டுப்படுத்துகின்றன. பல பில்லியன் மக்கள் எதனை உட்கொள்கின்றனர் என்பதை வடிவமைக்கும் தீர்மானங்கள் விவசாயிகள், சமுதாயங்கள் அல்லது ஜனநாயக அரசாங்கங்களால்

மேற்கொள்ளப்படுவதில்லை, மாறாக, ஒரு சிறிய எண்ணிக்கையிலான நாடு கடந்த கூட்டாண்மை நிறுவனங்களின் பங்குதாரர்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரிகளினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

சந்தை அடிப்படையிலான முறைமை பெருமளவிலான பட்டினி நிலைமையையும் அளவிற்கதிகமான நுகர்வையும் சமகாலத்தில் உருவாக்கியுள்ளது. இது போஷாக்கை உறுதிப்படுத்துவதை விட இலாபத்தை உருவாக்குவதற்கெனவே வடிவமைக்கப்பட்ட முறைமை ஒன்றில் மாத்திரமே சாத்தியமான ஒரு முரணுரை ஆகும். உணவை ஓர் உரிமையாக, மனித நல்வாழ்வுக்காக உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட வேண்டிய ஒரு சமூக நன்மையாகப் புரிந்துக்கொண்டால், மிகையுடன் இணைந்த பட்டினியின் இருப்பு, அரசியல் ரீதியான நிவர்த்தி ஒன்றினைக் கோரும் ஓர் அரசியல் தோல்வியாக உடனடியாக அங்கீகரிக்கப்படும். மாறாக, பொருள் தர்க்கத்தின் கீழ், பட்டினி என்பது வறுமையின் தவிர்க்க முடியாத விளைவாக இயல்பாக்கப்படுகின்றது என்பதுடன் வறுமையும் ஓர் அரசியல் நிலைமையாக அல்லாது தனிப்பட்ட நிலைமை ஒன்றாகவே புரிந்துக்கொள்ளப்படுகின்றது. சந்தை விடுவிக்கப்படுகின்றது பட்டினியில் இருப்போரின் மீது குற்றம் சாட்டப்படுகின்றது.

தற்போதைய உணவு முறைமையின் மிகவும் அழிவேற்படுத்தும் விளைவுகளில் ஒன்றாக சிறு விவசாயிகள் பல தலைமுறைகளாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட காணிகளிலிருந்தான அவர்களின் முறைமைசார் இடப்பெயர்வு காணப்படுகின்றது. உலகளாவிய தெற்கு முழுவதும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனங்களால் விதிக்கப்பட்ட கட்டமைப்பு சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் சிறு விவசாயிகளின் பிழைப்பிற்கு ஒத்துழைப்பாக அமைந்த பொது விவசாய ஆதரவு முறைமைகள், விரிவாக்க சேவைகள், சந்தைப்படுத்தல் சபைகள், கடன் நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் இறக்குமதி பாதுகாப்புகள் ஆகியவற்றை அகற்றின. மில்லியன் கணக்கானோர் திடீரென விவசாயத்தை சாத்தியமற்றதாகக் கண்டதுடன், காணிகளிலிருந்து நகர்ப்புற சேரிகளுக்கும் வலுக்கட்டாயமாகத் தள்ளப்பட்டனர் இந்தப் போக்கு தொடர்கின்றது என்பதுடன் எம்மைப் போன்ற நாடுகளில் மிகவும் ஆழமாகவும் இடம்பெறுகின்றது. இந்த இடப்பெயர்வுடன் விவசாய உயிர்ப்பல்வகைமை, மற்றும் பல நூற்றாண்டுகளாக உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்ட பயிர்களின் வகைகள் மற்றும் விலங்கினங்கள் ஆகியவற்றின் இழப்பும் ஏற்பட்டுள்ளது. இந்த இழப்பு உணவு முறைமைகளின் மீண்டெழுந்தன்மையை குறைக்கின்றது என்பதுடன் நோய், வறட்சி மற்றும் காலநிலை சீர்குலைவு ஆகியவற்றிற்கான அவற்றின் பாதிப்புறுநிலையையும் அதிகரிக்கின்றது.

**இலங்கையின் விவசாய முறைமையில் நெருக்கடி**

நீண்ட காலமாக கிராமிய வாழ்வாதாரங்கள் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு என்பவற்றின் மையமாக காணப்படும் இலங்கையின் விவசாயப் பொருளாதாரம் தற்போது அதன் உப துறைகளில் ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ள நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. மாவட்டங்கள் முழுவதும் நடத்தப்பட்ட மையக் குழுக் கலந்துரையாடல்களிலிருந்து பெறப்பட்ட சான்றுகள், அத்துடன் இரண்டாம் நிலை இலக்கியங்கள் ஆகியவை கொள்கைப் புறக்கணிப்பு, சந்தைத் தாராளமயமாக்கல் மற்றும் அரச ஆதரவுப் பொறிமுறைகளின் படிப்படியான அழிவு ஆகியவற்றுடன் தொடர்புடைய முறைமைசார் சவால்களை உற்பத்தியாளர்கள் எதிர்கொள்கின்றனர் என்பதை வெளிப்படுத்துகின்றன.

இலங்கையின் உணவு உற்பத்தி முறைமையின் முதுகெலும்பாக நெல் காணப்படுகின்றபோதும், ஒற்றைப் பயிர்ச்செய்கை மற்றும் இரசாயன உரப் பயன்பாடு ஆகியவற்றில் அது அளவுக்கதிகமான தங்கியிருப்பதனால், குறிப்பாக விதைகள் மற்றும் மருந்துகள் ஆகியவை பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட வகைகளாக உள்ளமையால் பாதிப்பினை எதிர்கொள்கின்றது. பன்னாட்டு நிறுவனங்கள் உலகளவில் இரசாயன உரங்கள் மற்றும் கலப்பின விதைகளை ஊக்குவித்தமையினால் இது பசுமைப் புரட்சியின்போது உருவாக்கப்பட்ட ஒரு யதார்த்தமாக உள்ளது. உள்ளூர் விவசாய அதிகாரசபைகளும் அவற்றின் பயன்பாட்டை இயலச்செய்கின்றன. விவசாயிகளைப் பொறுத்தவரையில், இதன் பொருள் உள்ளீட்டு செலவுகள் அதிகரிக்கும் அதே நேரத்தில் மண் வளம் குறைவடைகின்றது என்பதாகும். முன்பு கிராமிய நிலைமாற்றத்தின் இயந்திரங்களாக செயற்படுமென எதிர்நோக்கப்பட்ட மகாவலி நீர்ப்பாசனத் திட்டங்கள், தற்போது மகாவலி அதிகாரசபையின் கீழ் சீரற்ற நீர் ஒதுக்கீட்டை எதிர்கொள்கின்றன. நெல் விளைச்சலை மேம்படுத்துவதில் தரமான விதைகள் ஒரு பிரதான வகிபங்கினைக் கொண்டுள்ளன என விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். ஆனால், விதை உற்பத்தியின் வரையறுக்கப்பட்ட நிறுவனரீதியான கொள்திறன் இந்த சாத்தியத்தை மட்டுப்படுத்துகின்றது (HARTI,

2013; IPS, 2021). நெல் சந்தைப்படுத்தல் சபையானது பெரும்பாலும் தாமதமான இடைவெளிகளில் அல்லது செலவு-மீட்பு விலைகளுக்குக் குறைவாகவே கொள்வனவு செய்வதன் மூலம் பெறுகைக்கான வரையறுக்கப்பட்ட ஆதரவை மாத்திரமே வழங்குகின்றது என்பதுடன் இதனால் விவசாயிகளின் பேரம் பேசும் சக்தியும் பலவீனமடைகின்றது.

மோசமான அறுவடைக்குப் பின்னரான களஞ்சியப்படுத்தல் மற்றும் உறைய வைப்பதற்கான இயல்திறன் ஆகியவற்றினால், குறிப்பாக மலைநாடு மற்றும் வறண்ட வலயத்தில், மரக்கறிப் பயிர்ச்செய்கை பாதிக்கப்படுவதுடன், இதன் விளைவாக மொத்த உற்பத்தியில் 25-40% கழிவுகள் உருவாகின்றது எனவும் மதிப்பிடப்படுகின்றது. (FAO, 2020). வரையறுக்கப்பட்ட சந்தை அணுகல், போக்குவரத்து வசதிகள் போதாமை மற்றும் உள்நாட்டில் பெறுமதி சேர்த்தல் வசதிகள் காணப்படாமை என்பவற்றின் காரணமாக விவசாயிகள் அறுவடைக்குப் பின்னரான பெரும் இழப்புகளை சுமக்கின்றனர். இந்த வினைத்திறனின்மைகள் இலங்கையின் விவசாய சந்தைப்படுத்தல் முறைமையில் காணப்படும் ஒரு கட்டமைப்புசார் இடைவெளியை பிரதிபலிக்கின்றன என்பதுடன் இந்த முறைமையானது தொடர்ந்தும் துண்டாடப்பட்ட நிலையில் உள்ளதுடன் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது உற்பத்தியாளர் அமைப்புகளை விட இடைத்தரகர்களால் ஆதிக்கம் செலுத்தப்படுவதாகவும் காணப்படுகின்றது (IPS, 2019).

பருப்பு வகைகள், சோளம், வெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியாளர்களும் முதலீடு, ஆராய்ச்சி மற்றும் விதை உற்பத்தி ஆகியவற்றில் இதேபோன்ற கடுமையான கட்டுப்பாடுகளை எதிர்கொள்கின்றனர். வரையறுக்கப்பட்ட பொது முதலீடு தொழில்நுட்பப் புத்தாக்கத்திற்குத் தடை ஏற்படுத்தும் அதேவேளை விதைக் கையிருப்புகளில் ஏற்படும் நுண்ணுயிர்க் கிருமித்தொற்றுகள் மற்றும் பூஞ்சைத் தொற்றுகள் ஆகியவை விதை முளைப்பு வீதங்களையும் விளைச்சலையும் குறைவடையச் செய்துள்ளன. இத்தகைய விவசாயிகளில் பெரும்பாலானோர் இறக்குமதிப் போட்டித்தன்மை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட சந்தைகள் இல்லாமை ஆகியவற்றின் காரணமாகக் குறைந்த ஆதாய அளவுகளிலேயே தொழிற்படுகின்றனர் (HARTI, 2015; CBSL வருடாந்த அறிக்கை, 2023).

அளவுக்கதிகமான மீன்பிடி, காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் மற்றும் பூகோள அரசியல் அழுத்தங்கள் ஆகியவற்றிலிருந்து எழும் பன்முக நெருக்கடி ஒன்றினை மீன்பிடித்துறை எதிர்கொள்கின்றது. வளங்கள் குறைவடைந்தமை, உயரும் எரிபொருள் செலவுகள் அத்துடன் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு நீர்ப்பரப்புகளில், இந்திய இழுவைப் படகுகளின் ஊடுருவல் ஆகியவற்றின் காரணமாக மீன்பிடி அறுவடை குறைவடைந்து வருவதாகக் கரையோர மீனவர்கள் தெரிவிக்கின்றனர் (FAO, 2021; NARA, 2022). கரையோர வலயங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா உட்கட்டமைப்பின் விரிவாக்கம் பாரம்பரிய மீன்பிடி இடங்களுக்கான அணுகலை மேலும் குறைத்துள்ள அதேவேளை கட்டுபடியாகும் கடன் அல்லது காப்புறுதிக்கான அணுகல் இல்லாத நிலையில், ஏற்றுமதி சார்ந்த மீன்வளப் பொருளாதாரத்தில் சிறிய அளவிலான மீனவர்கள் அதிகரித்த அளவில் ஓரங்கட்டப்படுகின்றனர்.

தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆகியவற்றினால் ஆதிக்கம் செலுத்தப்படும் பெருந்தோட்டப் பொருளாதாரம் ஏற்றுமதிகளில் பெருமளவில் தங்கியிருப்பதனால் உலகளாவிய விலைகளின் மாறும் இயல்பிற்கு வெளிப்படுத்தப்படுகின்றது. தொழிலாளர் சுரண்டல், சமமற்ற காணி உரிமை மற்றும் கடனுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் போன்ற கட்டமைப்புசார் பிரச்சினைகள் தோட்டத் தொழிலாளர்களின் நலனோம்புகையைத் தொடர்ந்தும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன (பஸ்டியன், 2022). தோட்டத் தொழிலாளர்கள், விசேடமாகப் பெண்கள், தேக்கமடைந்துள்ள ஊதியங்கள் மற்றும் பாதுகாப்பற்ற வீடமைப்பு என்பவற்றை எதிர்கொள்ளும் அதேவேளை சிறுபற்றுநில உரிமையாளர்கள், அரச அல்லது வணிக வங்கிகளிலிருந்து சலுகைக் கடன்களைப் பெறுவதற்காகப் போராடுகின்றனர். தோட்டங்களில் காணி உரிமை தொடர்பில் வளர்ந்து வரும் செறிவுநிலையானது தொழிலாளர்களுக்கான காணி மீள்பகிர்வு மற்றும் கிராமிய உற்பத்தியைப் பன்முகப்படுத்தல் ஆகியவற்றிற்கான வாய்ப்புகளை மேலும் மட்டுப்படுத்துகின்றது.

இலங்கையின் பாலுற்பத்தித் துறையும் இதேபோன்று துண்டாடப்பட்டுள்ளது. சிறிய அளவிலான விவசாயிகளிடையே உற்பத்தி பரவச் செய்யப்பட்டுள்ளதுடன் இத்துறையானது இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் மீது, ஏறத்தாழ மொத்த பால் நுகர்வில் கிட்டத்தட்ட 44% என்னும் அளவில், பெருமளவிற்குத் தங்கியுள்ளது (CBSL, 2023). பாலுற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள், கூட்டுறவுகள்

மற்றும் தனியார் பதனிடுவோருக்கு இடையேயான பலவீனமான இணைப்புகள் உள்நாட்டு பால் சேகரிப்பு மற்றும் பதனிடல் முறைமைகளை நசுக்கியுள்ளன. தன்னிறைவை நோக்கிய கொள்கை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், குளிரூட்டப்பட்ட களஞ்சியப்படுத்தல், கால்நடை வைத்திய ஆதரவு மற்றும் நிதி ஊக்குவிப்புகள் ஆகியவற்றில் காணப்படும் போதாமைகள் அதன் இயல்திறனை எட்டுவதற்கு இத்துறைக்குத் தடையாக அமைந்துள்ளன (FAO, 2020; IPS, 2022).

வீட்டுத் தோட்டங்கள் மற்றும் விவசாய வனவியல் மாதிரிகள் உள்ளடங்கலான ஒருங்கிணைந்த விவசாய முறைமைகள், உணவு உற்பத்தியை உயிர்ப்பல்வகைமையின் பேணுகையுடன் இணைக்கும் சூழலியல் ரீதியாக நிலைபேறான மாற்றீடுகளை வழங்குகின்றன. ஆயினும், அவையும் மட்டுப்படுத்தப்பட்ட நிறுவன ரீதியான ஆதரவையே பெறுகின்றன என்பதுடன் நகரமயமாக்கல், காணி துண்டாடப்படல் மற்றும் கொள்கை புறக்கணிப்பு ஆகியவற்றினாலும் அதிகரித்த வகையில் அச்சுறுத்தப்படுகின்றன. வரலாற்று ரீதியாக கிராமிய உணவுப் பாதுகாப்பிற்குப் பங்களிப்பு வழங்கிய இந்த முறைமைகள், தற்போது இலக்கு வைக்கப்பட்ட விரிவாக்க சேவைகள் அல்லது சலுகைக் கடனுக்கான அணுகல் ஆகியவை இல்லாத நிலையில் வாழ்வாதாரங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காகப் போராடுகின்றன.

அரச ஆதரவு மற்றும் உற்பத்தியாளர்களின் நிதி உள்ளடக்கம் ஆகியவற்றிலுள்ள குறைபாடுகள் அனைத்து உப துறைகளிலும் காணப்படும் ஒரு மீண்டெழும் அக்கறையாக உள்ளன. அரசுக்கு சொந்தமான வங்கிகள் கூட பிணை அடிப்படையிலான கடன் வழங்கலை கோருகின்றன என்பதுடன் சிறுபற்றுநில உரிமையாளர்கள், மீனவர்கள் மற்றும் பெண் உற்பத்தியாளர்கள் ஆகியோரை சலுகைக் கடன்களிலிருந்தும் விலக்குகின்றன. இந்த வங்கிகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) அபிவிருத்திப் பிரிவுகள் விவசாய உற்பத்தியாளர்களுடனான வரையறுக்கப்பட்ட வெளித்தொடர்பினைக் காட்டுகின்றன. இதேவேளை, குறிப்பாக வட மாகாணத்தில், காணிகளின் அபகரிப்பு அத்துடன் காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வலயங்களாக அரச காணிகளை மீள வகைப்படுத்துதல் ஆகியவை போருக்குப் பின்னரான விவசாயப் பாதுகாப்பின்மையை தீவிரப்படுத்தியுள்ளது. போருக்குப் பின்னரான குறுகிய காலத்தில் 32மூ காணிகள் மாத்திரமே காடுகள் அல்லது வனசீவராசிகள் ஒதுக்குகளாகக் குறித்தொதுக்கப்பட்டிருந்த அதேவேளை, 2025 ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை 72மூ ஆக விரிவாக்கமடைந்துள்ளதுடன், அந்நிலைமை பாரிய அளவிலான பயிரிடக்கூடிய காணிகளை சமுதாய அணுகலுக்கு அப்பால் வைத்துள்ளதாகவும் உத்தியோகபூர்வ தரவுகள் குறிப்பீடு செய்கின்றன (மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனம், 2024).

உள்நாட்டு விவசாயம், பெறுமதி அடிப்படையில், தற்போதும் இலங்கையின் உணவுத் தேவையில் அண்ணளவாக 80% இனை வழங்குகின்றது, உணவுப் பாதுகாப்பின் ஒரு பெரும்பகுதி சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களில் தங்கியுள்ளது என்பதை இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது (கொள்கைக் கற்கைகளுக்கான நிறுவனம், 2018). இந்த செயன்முறைகள், பலவீனமான சந்தை நிறுவனங்கள் மற்றும் சுருங்கும் கடன் அணுகல் ஆகியவற்றுடன் இணைந்து, கூட்டாக இலங்கையின் விவசாய நெருக்கடியைத் தீவிரப்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவு இறைமை ஆகியவற்றையும் அச்சுறுத்துகின்றன.

**தவறான தீர்வுகள்**

விவசாய நெருக்கடி ஆழமானது என்பதுடன் சர்வதேச பொருளாதார நிறுவனங்களால் வழங்கப்படும் பரிந்துரைகள் அதனைத் தீர்ப்பதற்குப் பதிலாக மேலும் மோசமடையச் செய்துள்ளன. சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச கடன் வழங்குநர்களுடனான நிகழ்ச்சித்திட்டங்கள் வர்த்தகத் தாராளமயமாக்கல், மானியக் குறைப்புகள் மற்றும் குறைக்கப்பட்ட அரசாங்க செலவினம் போன்ற நிபந்தனைகளை உள்ளடக்குகின்றன என்பதுடன் அவை விவசாயத்திற்கான அரசு ஆதரவை முறைமைசார் விதத்தில் பலவீனமடையச் செய்கின்றன. மானியங்கள் அகற்றப்பட்டு சந்தைகள் முன்கூட்டியே திறக்கப்படும்போது சிறுபற்றுநில உரிமையாளர்களான விவசாயிகள் அதிகம் இழப்பைச் சந்திக்கின்றனர். பின்னர், நெல், வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் பால் பொருட்கள் ஆகியவற்றின் உள்ளூர் உற்பத்தியாளர்களை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில், மலிவான உணவு இறக்குமதிகள் நாட்டின் உணவு இறைமையின் அடித்தளங்களைப் படிப்படியாக அழிக்கின்றன (IMF 2024, உறுப்புரை IV, இலங்கை).

உலகளாவிய ரீதியிலான ஸ்திரமின்மை இந்த கட்டமைப்புசார் அழுத்தங்களை மேலும் சிக்கற்தன்மைக்கு உள்ளாக்கியுள்ளது. ரஷ்யா-உக்ரைன் போர் கோதுமை, சோளம் மற்றும் உரம் ஆகியவற்றின் சர்வதேச வழங்கற் சங்கிலிகளை சீர்குலைத்து, உள்ளீட்டுச் செலவுகளை உயர்த்தியதுடன் இத்தகைய அதிர்ச்சிகளை உள்வாங்குவதற்கான கையிருப்புகளைக் கொண்டிராத சிறு உற்பத்தியாளர்களையும் இந்நிலைக்கு வெளிப்படுத்தியது. இதற்கிடையே, ஐக்கிய அமெரிக்காவிலிருந்து உருவாகும் வர்த்தகப் பதட்டங்கள் மற்றும் மாறிவரும் தீர்வை முறைகள் உலக சந்தைகளின் மாறும் இயல்பினை அதிகரித்துள்ளன. வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களைக் குறைத்து, நிலையான விவசாய இறக்குமதிகளைப் பேணுவதற்கான அல்லது உள்நாட்டு உற்பத்தியாளர்களை வெளிப்புற அதிர்ச்சிகளிலிருந்து பாதுகாப்பதற்கான நாட்டின் கொள்திறனை பலவீனப்படுத்தியுள்ளமையால் இலங்கையின் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதிகளுக்கு இது குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. மிகவும் அண்மையில்,  ஈரான் மீது ஐக்கிய அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடுத்த போரின் விளைவாக உலகளாவிய எண்ணெயின் பெரும்பகுதி போக்குவரத்துச் செய்யப்படும் ஓர் இயற்கை வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. இலங்கைக்கான உரப் பொருட்களின் ஆதாரம் ஒன்றாகவும் வளைகுடா காணப்படுவதுடன், இதன் ஊடான போக்குவரத்திற்கும் இந்த வழியடைப்பு தடை ஏற்படுத்தியது. புதிய பயிர்ச்செய்கைப் பருவத்திற்குள் நுழையும் விவசாயிகள் தடைப்பட்ட விநியோகத்தின் காரணமாக உயரும் விலைகளின் விளைவுகளை உணர்கின்றனர்.

வர்த்தக உடன்படிக்கைகள் மேலும் சிக்கற்தன்மையை சேர்த்துள்ளன. அண்மையில் கையொப்பமிடப்பட்ட இலங்கை-தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (2024) பொருளாதார ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளதுடன், தேயிலை மற்றும் வாசனைத் திரவியங்களுக்கு புதிய ஏற்றுமதி சந்தைகளையும் திறக்கக்கூடும். ஆயினும், சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களுக்கு குறிப்பிடத்தக்களவிலான அபாயங்களையும் இது கொண்டுள்ளது. தாய்லாந்திலிருந்தான மலிவான விவசாய இறக்குமதிகள், உள்நாட்டு நுகர்வுக்காக வளர்க்கப்படும் உணவுவகைகளைப் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் ஏற்றுமதி சார்ந்த பயிர்களை நோக்கியதான காணிகளின் நிலைமாற்றத்தை ஊக்குவிக்கும் அதேவேளை, உள்நாட்டின் மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடும். இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடனும் தெற்காசிய சுதந்திர வர்த்தகப் பிரதேசம் முழுவதுமாகவும் காணப்படும் தற்போதுள்ள தீர்வையற்ற ஏற்பாடுகள், இதேபோன்று உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு விலைகளின் ஸ்திரத்தன்மையைக் குறைக்கின்றன, மரக்கறிகள், பருப்பு வகைகள் மற்றும் சிறு தானியங்கள் போன்றவை இறக்குமதி செய்யப்படும்போது பெரும்பாலும் மலிவாக உள்ளதால், ஏற்கனவே மெலிதாகவுள்ள உள்ளூர் இலாபங்களை அவை மேலும் பாதிக்கின்றன. நிதிக் கருவிகளும் தவறாக சீரமைக்கப்பட்ட முன்னுரிமைகளை பிரதிபலிக்கின்றன. அரசுக்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் அவற்றின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவுகள் ஆகியவை சிறுபற்றுநில உரிமையாளர்கள், மீனவர்கள் மற்றும் பிணையம் அல்லது அளவீடுகளைக் கொண்டிராத பெண் உற்பத்தியாளர்கள் ஆகியோரை விடவும் பாரிய அளவிலான உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த விவசாய வணிகங்களுக்கு சார்பாக செயற்பட முயல்கின்றன. இந்த நிறுவனம் சார்ந்த பாரபட்சம் கடனுக்கான அணுகலில் சமத்துவமின்மையை ஆழப்படுத்துவதுடன், இலங்கையின் உணவுப் பாதுகாப்பு பெருமளவில் தங்கியிருக்கும் உற்பத்தியாளர்களையும் ஒதுக்கி வைக்கின்றது.

காலநிலை நெருக்கடிக்கான பதிற்செயற்பாடுகளும் கூடத் தவறான தீர்வுகளிலிருந்து விடுபடவில்லை. சர்வதேச முகவராண்மைகள் மற்றும் நன்கொடையாளர்களால் ஊக்குவிக்கப்படும் 'காலநிலை விவேகமுடைய விவசாயம்' போன்ற சட்டகங்கள், சிறு உற்பத்தியாளர்களுக்கு உண்மையில் தேவைப்படும் கட்டமைப்பு மாற்றங்களை விட தொழில்நுட்பத் தீர்வுகள், வறட்சி எதிர்ப்பு GMO (மரபணு மாற்றப்பட்ட நுண்ணங்கிகளின்) வகைகள், துல்லியமான விவசாயம் மற்றும் கார்பன் எதிரமைவுச் சந்தைகள் ஆகியவற்றிற்குப் பெரும்பாலும் முன்னுரிமை அளிக்கின்றன. குறிப்பாக, காபன் வர்த்தக திட்டங்கள், காபன் ஒதுக்கம் என்னும் பெயரில் காணிகள் மற்றும் கரையோரப் பாவனை மீது கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் விவசாய மற்றும் மீன்பிடி சமூகங்களை உடைமையிழக்கச் செய்வதற்கான அபாயங்களைக் கொண்டுள்ளன. இது காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை சுமக்கும் சமூகங்களை விட கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் இடைத்தரகர்களுக்கே நிதிப் பயன்களை வழங்குகின்றது. இந்தச் சந்தை அடிப்படையிலான காலநிலைத் தீர்வுகள், விவசாய சூழலியல் மற்றும்

பாரம்பரிய விவசாய முறைகள் ஆகியவை ஏற்கனவே வழங்கும் சூழலியல் மீண்டெழுந்தன்மையை கட்டியெழுப்புவதை விட வெளிப்புற உள்ளீடுகள் மற்றும் கூட்டாண்மைத் தொழில்நுட்பம் என்பவற்றின் மீதான தங்கியிருத்தலை ஆழப்படுத்த முனைகின்றன.

விவசாய நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் பதிலாக, இந்த தவறான தீர்வுகள், வர்த்தக தாராளமயமாக்கல், அரசிறைச் சிக்கனம், சந்தை அடிப்படையிலான காலநிலைச் சட்டகங்கள் மற்றும் அளவை நோக்கி சார்ந்துள்ள நிதி ஆகியவற்றுடன் கூட்டாக அந்நெருக்கடியை வேரூன்றச் செய்துள்ளன.

**அவ்வாறாயின், எமக்கான மாற்றீட்டு, சீரிய உணவு முறைமை எவ்வாறு அமைந்திருக்கும்?**

இதற்கான பதில், ஒரு பல்கலைக்கழகத்தில் தயாரிக்கப்பட்ட வரைபடமாக அல்ல, மாறாக எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள நூற்றுக்கணக்கான விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகளால் கட்டியெழுப்பப்பட்ட ஓர் உயிர்ப்புள்ள அரசியல் கட்டமைப்பாக ஏற்கனவே காணப்படுகின்றது. அதன் பெயர் உணவு இறைமை.

இந்த சொற்பதம், 1996 ஆம் ஆண்டு ரோமில் நடைபெற்ற உலக உணவு உச்சிமாநாட்டில் La Via Campesina இனால் உருவாக்கப்பட்டதுடன் 2007 ஆம் ஆண்டின் Nyéléni பிரகடனத்தில் மிக முழுமையாக உருவாக்கம் செய்யப்பட்டது: உணவு இறைமை என்பது 'சூழலியல் ரீதியாக உறுதி வாய்ந்த மற்றும் நிலைபேறான முறைகளின் ஊடாக உற்பத்தி செய்யப்படும் ஆரோக்கியமான மற்றும் கலாசார ரீதியாக பொருத்தம் வாய்ந்த உணவுக்கான மக்களின் உரிமையும் அவர்களின் சொந்த உணவு மற்றும் விவசாய முறைமைகளை வரையறுப்பதற்கான அவர்களின் உரிமையுமாகும்'. ஒவ்வொரு சொற்றொடரும் கனமானது. உணவு பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கான மக்களின் உரிமையை இது வரையறுக்கின்றது, சந்தைகள் அல்லது நிறுவனங்களினது உரிமைகளை அல்ல. இந்த உணவு ஆரோக்கியமானது மற்றும் கலாசாரரீதியாக பொருத்தமானது என்பதுடன், வெறும் கலோரி எண்ணிக்கையாக மாத்திரமன்றி சமூகத்திற்கு போஷாக்கு அளிப்பதாகவும் அதற்குச் சொந்தமானதாகவும் உள்ளது. உயிர் வாழும் முறைமைகளுக்கு எதிராக அல்லாது அவற்றுடன் இணைந்து செயற்பட்டு, சூழலியல் ரீதியாக உறுதியான வழிமுறையில் உணவு உற்பத்தி செய்யப்படுகின்றது. அடிமட்டத்திலிருந்து, மக்கள் உணவு மீதான தங்கள் சொந்த முறைமைகளை, சனநாயகத்தை வரையறுக்கும் உரிமையைக் கொண்டுள்ளனர்,

நடைமுறையில், ஒன்றோடொன்று இணைந்த பல்வேறு உறுதிப்பாடுகளின் மீது இந்தப் பதிலீட்டு முறைமை தங்கியுள்ளது. முதலாவதாக, ஜனநாயகக் கட்டுப்பாடு: உணவிலிருந்து இலாபம் பெறுபவர்களைப் பார்க்கிலும் உணவை உற்பத்தி செய்து அதனை நுகர்வோரின் கைகளில் தீர்மானங்களை வழங்குதல். ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் மலிவான இறக்குமதிகளிலிருந்து உள்நாட்டு விவசாயத்தைப் பாதுகாப்பதற்கான உரிமையை அரசாங்கங்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் சமுதாயங்கள் தங்களின் காணிகள், நீர் மற்றும் விதைகள் மீதான உண்மையான கட்டுப்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இரண்டாவது விவசாய சூழலியலாகும். இது, மண்ணை அகழ்வதை விட இதனை உருவாக்குகின்ற, உயிரியல் பல்வகைமையைப் பேணுகின்ற, ஊட்டச்சத்துக்களை உள்நாட்டில் சுழற்சிக்கு உட்படுத்துகின்ற, மற்றும் எது சிறந்தது என்பதை அறிவதற்கு கூட்டாண்மை நிறுவனங்களின் உள்ளீட்டு தொகுப்புகளைப் பயன்படுத்தாது பல தலைமுறை விவசாயிகளின் அறிவை பயன்படுத்தும் விவசாயமாகும் மூன்றாவது, எந்தவொரு நியாயமான மற்றும் நிலைபேறான உணவு முறைமையினதும் முதுகெலும்பாக சிறிய அளவிலான விவசாயத்தைத் துடிப்புடன் பாதுகாத்தல். இது கற்பனைக் கோட்பாடு அல்ல. 1970களில் இருந்து பசுமைப் புரட்சியால் சூறையாடப்பட்ட இலங்கை போன்ற ஒரு நாட்டிலும் கூட உணவு இறைமையின் பல்வேறு ஆக்கக்கூறுகளை நாடு முழுவதும் உள்ள சமூகங்கள் ஏற்கனவே பின்பற்றுகின்றன. புத்தளையில் உள்ள ஒரு விதை வங்கி தொடக்கம் ராஜாங்கனையில் உள்ள ஒரு பாரம்பரிய நெல் விவசாயி வரை, விவசாய சந்தைகளை உருவாக்கும் பெண்கள் குழுக்கள் வரை, நாடு முழுவதும் பரவலாக உள்ள சிக்கன, கடனுதவி மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் வரை, இந்த மாற்றீடு கற்பனையானது அல்ல. இது ஏற்கனவே துண்டுதுண்டாக, இணைக்கப்படுவதற்காக காத்திருக்கும் நிலையில் உள்ளது. இந்த அறிக்கையின் துல்லியமான பிரதான இலக்கு: நாட்டின் பல்வேறு மூலைகளிலும் காணப்படும் இவ்வாறான தற்போதுள்ள நடைமுறைகளை ஆவணப்படுத்துதல், மற்றும் மற்றொரு உணவு முறைமை சாத்தியமானது என்பது மட்டுமன்றி அது ஏற்கனவே பின்பற்றப்படுகின்றது என்பதை எடுத்துக் காட்டுதல் என்பதாகும். அதனை வலுப்படுத்துவதற்காகவும், வளர்ப்பதற்காகவும், நிலைநிறுத்துவதற்காகவும் நாம் பணியாற்ற வேண்டும்.

## முறையியல்

நாடு முழுவதிலும் உள்ள மாவட்டங்களில் உள்ள உணவு உற்பத்தியாளர்களுடன் இடம்பெற்ற ஆரம்ப நேர்காணல்களின் தொடர் ஒன்றின் ஊடாக இந்த அறிக்கை தொகுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தற்போதைய உணவு முறைமையின் உருவாக்கத்தின் வரலாற்று மற்றும் அரசியல் சூழமைவைக் கட்டமைப்பதற்காக அறிமுக அத்தியாயங்களில் முன்னைய வெளியீடுகளிலிருந்தான இரண்டாம் நிலைத் தரவுகளும் புள்ளிவிபரங்களும் பயன்படுத்தப்பட்டன.

- **ஆணையாளர்களின் தெரிவு**

பல்வேறு பிராந்தியங்களில் இடம்பெறவிருந்த கலந்துரையாடல் அமர்வுகளை வசதி செய்வதற்காகப் பதினொரு ஆணையாளர்களைக் கருத்திட்டக் குழு தெரிவு செய்தது. ஆய்வு செய்யப்படும் உணவு உற்பத்தித்துறைகளில் ஒவ்வொருவரும் கொண்டுள்ள நிபுணத்துவத்தின் அடிப்படையில் இந்த நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் நீடித்த காலப்பகுதிகளில் உள்ளூர் சமுதாயங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றிய அனுபவங்களையும் வெளிப்படுத்தினர்.

பங்குபற்றுநர்களுடன் இணைந்து, மாற்றீடுகளின் பயனுறுதியை மதிப்பிடுவதற்குத் தேவைப்படும் தொழில்நுட்ப மற்றும் கள அறிவை ஆணையாளர்களும் கொண்டுள்ளனர். பங்குபற்றுநர்களிடம் கேள்விகளைக் கேட்கும் ஆராய்ச்சிக் குழு ஒன்றுடன், ஆணையாளர்களின் வசதிப்படுத்தல் மற்றும் இடையீடுகளும் பெறுமதி சேர்த்தன.

- **களங்கள் மற்றும் மாதிரி**

கொழும்பில் இடம்பெற்ற இரண்டு கலந்துரையாடல்களின்போது, ஆணையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளடங்கிய குழு, களத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் முதன்மை ஆராய்ச்சியின் நோக்கெல்லையை வரையறுத்தது.

குறிப்பிட்ட அமைவிடம் ஒன்றில் உணவு உற்பத்தியின் செறிவு மற்றும் அவற்றின் தொடர்புடைய விசேடத்துவம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வோர் அமர்வுக்கான இடங்களும் தெரிவு செய்யப்பட்டன.

| **கூட்ட அமைவிடம்** | **பங்குபற்றுநர்களின் அமைவிடங்கள்** | **துறைகள்** |
|---|---|---|
| தம்புள்ளை நகரம் | அனுராதபுரம், குருநாகல், பொலநறுவை | நெல், மரக்கறிகள், நன்னீர் மீன்பிடி, உணவு உற்பத்தி |
| மன்னார் நகரம் | மன்னார் | மீன்பிடி, ஏனைய வயற்பயிர்கள் |
| யாழ்ப்பாண நகரம் | யாழ்ப்பாணம் | மீன்பிடி, ஏனைய வயற்பயிர்கள் |
| கண்டி நகரம் | கண்டி, மாத்தளை | ஏனைய வயற்பயிர்கள் |
| ஹட்டன் | நுவரெலியா | தோட்டக் கட்டமைப்பில் மரக்கறிகள் மற்றும் பாலுற்பத்திகள் |
| தெனியாய | தெனியாய | மரக்கறிகள் மற்றும் வயற்பயிர்கள் |
| பட்டஅத்த | அம்பாந்தோட்டை, மாத்தறை, திக்வெல்ல, காலி | நெல், மரக்கறிகள், ஏனைய வயற்பயிர்கள், மீன்பிடி |
| மொனராகலை | பதுளை, மொனராகலை, வெல்லவாய | நெல், ஏனைய வயற்பயிர்கள், வீட்டுத் தோட்டங்கள் |
| தண்ணாமுனை | மட்டக்களப்பு, திருகோணமலை | பாலுற்பத்திகள், மீன்பிடி, உணவு உற்பத்தி |
| ஒலுவில் | அம்பாறை | நெல், பாலுற்பத்திகள், ஏனைய வயற்பயிர்கள், உணவு உற்பத்தி, மீன்பிடி, |

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST), தேசிய காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு இயக்கம் (MONLAR) மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பு (NAFSO) ஆகியவை ஒவ்வொரு அமைவிடத்திலும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பங்குபற்றுநர்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டன. மொத்தம் 272 பேர் விவாதங்களில் பங்கேற்றனர்.முன்னைய பணிகள் அல்லது தற்போதும் இடம்பெற்று வரும் சமுதாயக் கருத்திட்டங்கள் என்பவற்றின் மூலம் அவர்கள் தொடர்பு கொண்ட, மாற்றீட்டு உணவு உற்பத்தி முறைகளில் ஈடுபட்டுள்ள கூட்டிணைவுகள் மற்றும் தனிநபர்களை அவர்கள் அழைத்தனர். எந்தவொரு பங்கேற்பாளரும் இவற்றிற்கு சமுகமளிப்பதற்காக மிக நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய தேவைப்பாட்டினை ஏற்படுத்தாத வகையில், இயலுமானவரையில் வெவ்வேறு இடங்களில் பல அமர்வுகளை நடத்துவதற்கு ஆராய்ச்சியாளர்கள் முயன்றனர். இவ்வாறு, அந்தந்த மாவட்டத்தில் வாழும் உற்பத்தியாளர்கள் மற்றும் மிக அருகில் அமைந்துள்ள மாவட்டங்களில் வசிப்பவர்கள் ஆகியோரே ஒவ்வோர் அமைவிடத்திற்கும் அழைக்கப்பட்டனர்.

- **நோக்கெல்லை**

உணவு முறைமையின் பல்வேறு நிலைகளில் உற்பத்தியாளர்களால் பின்பற்றப்படும் தற்போதுள்ள மாற்றீட்டு முறைகளை ஆவணப்படுத்துவதே இந்தக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். அடுத்தடுத்த பிராந்தியக் கூட்டங்களின்போது அத்தகைய அனைத்து நிலைகளும் கலந்துரையாடப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக ஆணையாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் வினாக்கொத்து ஒன்றினை உருவாக்கினர். உற்பத்தியுடன் ஆரம்பித்து நுகர்வுடன் நிறைவடையும் இந்த வினாக்கள், பங்குபற்றுநர்கள் தங்களது அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வதற்குப் போதுமான நெகிழ்வுத்தன்மையை வழங்கும் அதேவேளை சீரான வீச்சிலான தலைப்புகளை உள்ளடக்குவதற்கும் அமர்வுகளை அனுமதித்தன.

வினாக்களின் பட்டியலை இந்த அறிக்கையின் பின்னிணைப்புகளில் காணலாம்.

- **பிராந்திய அமர்வுகள்**

ஒவ்வொரு கூட்டமும் மாவட்டத்தின் மத்திய பகுதியொன்றிலுள்ள அல்லது நன்கு அறியப்பட்ட மற்றும் இலகுவாக அணுகக்கூடிய இடத்தில் நடத்தப்பட்டது. கருத்திட்ட மற்றும் ஆராய்ச்சிக் குழுவினர் அங்கு சமுகமளித்தோரின் பதிவைப் பேணுவதற்கு உதவும் பொருட்டு, பங்குபற்றுநர்கள் முதலில் மக்கள் தொகை பற்றிய வினாக்களின் தொடர் ஒன்றிற்குப் பதிலளித்தனர். அறிக்கையிடல் நோக்கங்களுக்காக இவை அட்டவணைப்படுத்தப்பட்டன.

மக்கள் தொகை பற்றிய அளவையை இந்த அறிக்கையின் பின்னிணைப்புகளில் காணலாம்.

கருத்திட்டக் குழுவின் உறுப்பினர் ஒருவர், ஆராய்ச்சியின் நோக்கத்தையும் உற்பத்தியாளர்கள் ஏற்கனவே மேற்கொண்டு வரும் மாற்றீட்டு நடைமுறைகளை ஆவணப்படுத்துதல் மீதான அதன் பிரதான கவனத்தையும், அத்துடன் எதிர்காலத்திற்கான அவர்களின் அபிலாஷைகளையும் அறிமுகம் செய்தார். அமர்வின் முழுமையான அறிமுகத்தைத் தொடர்ந்து, பங்குபற்றுநர்கள் தங்களது பிரதான வருமான ஆதாரமாக எதனை அடையாளம் காண்கின்றனர் என்பதன் அடிப்படையில் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். இது, பங்குபற்றுநர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை ஏனைய செயற்பாடுகளினால் எவ்வாறு குறைநிரப்பினர் என்பதைப் பகிர்ந்துகொள்வதற்கு அனுமதிக்கும் அதேவேளை பிரதான உணவுத் துறைகள் ஒட்டுமொத்தமாகக் கலந்துரையாடப்படுவதற்கும் அனுமதிக்கும், சமகாலத்தில் மூன்று கலந்துரையாடல்கள் வரை இடம்பெற்றதுடன், கலந்துரையாடல்கள் இடம்பெற்ற மொத்த நேரம் இரண்டரை மணித்தியாலங்கள் வரையாகவும் அமைந்தது. ஒரு குறிப்பிட்ட துறையில் ஆராய்ச்சி மற்றும் ஆதரித்து வாதிடலில் அவர்கள் கொண்டுள்ள சொந்த அனுபவத்தின் அடிப்படையில், குழுவின் கலந்துரையாடலை இலகுப்படுத்துனர் ஒருவராகச் செயற்படுவதற்கு, ஒவ்வொரு குழுவிற்கும் ஆணையாளர் ஒருவர் குறித்தொதுக்கப்பட்டார்.

துறை சார்ந்த குழுக் கலந்துரையாடல்களைத் தொடர்ந்து அனைத்துப் பங்குபற்றுநர்களும் முழு அமர்விற்குத் திரும்பினர். ஒவ்வொரு குழுவிலும் கலந்துரையாடலை இலகுப்படுத்தின ஆணையாளர், குழுவிடமிருந்தான சரிபார்ப்பிற்காகவும், கூட்டத்திலுள்ள ஏனையோரிடமிருந்தான தெளிவுபடுத்தலுக்காகவும் தங்கள் பிரதான கருத்துக்களை முன்வைத்தார்.

- **தரவுகளின் வகைப்பாடு**

இந்தக் கருத்திட்டத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் மற்றும் குறிப்பு எடுப்பவர்கள் ஒவ்வொரு குழுவிற்கும் குறித்தொதுக்கப்பட்டதுடன், அவர்கள் கலந்துரையாடலையும் பங்குபற்றுநர்களின் பங்களிப்புகளையும் விரிவாகக் குறிப்பெடுத்துக் கொண்டனர். ஒவ்வொரு பிராந்திய அமர்வுத் தொகுதியையும் தொடர்ந்து, இலகுப்படுத்துனரால் பயன்படுத்தப்பட்ட வினா வடிவத்தைப் பின்பற்றி, அமர்வுகளின்போது தாம் எழுதிக்கொண்ட குறிப்புகளை அவர்கள் தட்டச்சு செய்தனர்.

பின்னர், உணவு முறைமையின் பல்வேறு நிலைகள் குறித்த மக்களின் அனுபவங்களை அவர்களுக்குரித்தான இடங்களில் பதிவு செய்து. துறை ஒன்றிற்கான அனைத்து தரவுகளையும் எளிதாகப் பார்க்க அனுமதிக்கும் சட்டகம் ஒன்றினுள் முன்னணி ஆராய்ச்சியாளர் தங்கள் குறிப்புகளை உள்ளீடு செய்தார், மேலும், பல்வேறு பங்குபற்றுநர்களின் பதில்களை மீண்டு வரும் பிரதான கருப்பொருள்கள், அமைவிடங்களின் மேற்குவிவு, மற்றும் தனித்துவமான சந்தர்ப்பங்கள் எனச் சுருக்கி ஒழுங்குபடுத்தும் செயன்முறைக்கும் இது உதவியது.

பங்குபற்றுநர்கள் பின்பற்றும் மாற்றீடுகள் அவர்களின் துறையில் உணவு முறைமையின் அனைத்து நிலைகளிலும் காட்சிப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, கலந்துரையாடலுக்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்பைப் பின்பற்றி அறிக்கை தொகுக்கப்பட்டது. ஆகவே, ஒவ்வோர் அத்தியாயமும் அவர்களுக்கு உரிய துறைகளில் உணவு முறைமைக்கான அவர்களின் நிபுணத்துவத்தையும் அவர்களின் விதப்புரைகளையும் முன்வைக்கின்றது.


Jaffna
යාපනය
யாழ்ப்பாணம்
Kilinochchi
කිලිනොච්චිය
கிளிநொச்சி
Mullaitivu
මුලතිව්
முல்லைத்தீவு
Mannar
මන්නාරම
மன்னார்
Vavuniya
වවුනියාව
வவுனியா
Anuradhapura
අනුරාධපුරය
அனுராதபுரம்
Trincomalee
ත්‍රිකුණාමලය
திருகோணமலை
Puttalam
පුත්තලම
புத்தளம்
Polonnaruwa
පොළොන්නරුව
பொலன்னறுவை
Kurunegala
කුරුණෑගල
குருணாகல்
Matale
මාතලේ
மாத்தளை
Ampara
අම්පාර
அம்பாறை
Batticaloa
මඩකලපුව
மட்டக்களப்பு
Kandy
මහනුවර
கண்டி
Gampaha
ගම්පහ
கம்பஹா
Kegalle
කෑගල්ල
கேகாலை
Badulla
බදුල්ල
பதுளை
Colombo
කොළඹ
கொழும்பு
Nuwara Eliya
නුවරඑළිය
நுவரெலியா
Ratnapura
රත්නපුරය
இரத்தினபுரி
Kalutara
කළුතර
களுத்துறை
Monaragala
මොනරාගල
மொனராகலை
Galle
ගාල්ල
காலி
Hambantota
හම්බන්තොට
ஹம்பாந்தோட்டை
Matara
මාතර
மாத்தறை
N
W
E
S

## அறிக்கை கண்டுபிடிப்புகள்

### 1. நெல்

இலங்கையின் விவசாயச் சூழலிலும் அது தொடர்பிலான விவாதங்களிலும் நெல் ஒரு மையமான அங்கமாகத் திகழ்கிறது. முக்கியமான இரண்டு நிகழ்வுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து வந்த காலக்கட்டத்தில் நெற் பயிர்ச்செய்கை பெருமளவில் அதிகரித்துள்ளதை, இலங்கை மத்திய வங்கி மற்றும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் விளைச்சல் தரவுகள், காட்டுகினற்ன (வொட்ச்டோக், 2022).நெல் பயிர்செய்கைச் செய்யும் நோக்கத்திற்காக, நாட்டின் பிற பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு வறண்ட வலய நிலங்களை மீள் ஒதுக்கீடு செய்யும் மகாவலி அபிவிருத்தித் திட்டம் முதலாவது நிகழ்வாகவும், இரசாயன பசளைகளையும் கலப்பின நெல் வகைகளையும் அறிமுகப்படுத்தி, முழு மக்களுக்கும் உணவளிக்கும் வகையில் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் என்று உறுதியளித்த பசுமைப் புரட்சியை நாடு ஏற்றுக்கொண்டமை இரண்டாவது நிகழ்வாகவும் காணப்படுகினற்ன. இவ்வகையான மாற்றங்களுக்கு மத்தியில், பாரம்பரிய நெல் பயிர்செய்கை முறைகளும் உள்ளூர் விதைகளும் இன்றும் பயன்பாட்டில் உள்ளன.

கண்டி, தம்புள்ளை, தங்கல்லை அம்பாறை, மொனராகலை ஆகிய 5 இடங்களில் 30 நெல் விவசாயிகளை ஆராய்சசியாளர்கள் சந்தித்தனர். அவர்களில் பலர் இந்த பயிர்செய்கை முறைகளின் கலவையைப் பின்பற்றி வருபவர்களாக காணப்படுகின்றனர்.

#### *உற்பத்தியின் போது*

நெல் உற்பத்திக்காக மாற்று வழிகளை பின்பற்றும் பங்குபற்றுனரக்ளில் பலர் விற்பனை மற்றும் நுகர்வுக்காக பாரம்பரிய நெல் வகைகளை உற்பத்தி செய்து வருகின்றனர். ஏனையவர்கள், சந்தைக்காகக் கலப்பின நெல்லை உற்பத்தி செய்யும் அதே வேளை, தங்கள் சமூகத்திற்குள் விற்பனை செய்வதற்கும் குடும்பப் பயன்பாட்டிற்கும் குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் அளவிற்குப் பாரம்பரிய நெல்லைப் பயிரிட்டு வருகின்றனர்.

> என் பெயர் பிரியம்பிக்கா விக்ரமகே, நான் மித்தெனியாவைச் சேர்ந்தவள். நான் சூழலியல் விவசாய முறைகளைப் பயன்படுத்தி கருப்பு சீனாட்டி நெல்லைப் பயிரிடுகிறேன். எனது வயலில், செயற்கை இரசாயனங்களுக்குப் பதிலாக சேதன பசளை, மண்புழு உரம் மற்றும் மீன் கரைசல் போன்ற உயிரியல் உரங்களைப் பயன்படுத்துகிறேன்.
>
> ஆனால் இந்தப் பயணம் ஆரம்பத்தில் எளிதாக இருக்கவில்லை - எங்கள் பகுதியில், பல ஆண்டுகளாக விவசாயம் இரசாயன பசளைகளையும் பூச்சிக்கொல்லிகளையும் பெருமளவில் சார்ந்திருந்தது - நான் இயற்கை விவசாயத்திற்கு மாற முடிவு செய்தபோது, நாங்கள் இயல்பாகக் கருதிய பல நடைமுறைகளை பற்றி கேள்விக்குட்படுத்த வேண்டியிருந்தது, மேலும் இரசாயன பசளைகள் இல்லாமல் விவசாயம் செய்வது சாத்தியமற்றது என்று என் அயலவர்கள் சந்தேகித்தனர் - சில சமயங்களில் நானும் பயத்தையும் நிச்சயமற்ற தன்மையையும் உணர்ந்தேன்.
>
> இருப்பினும், நமது மண், நமது ஆரோக்கியம் மற்றும் நமது எதிர்காலத்தின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பயிரிடும் தேவை எனக்கு ஏற்பட்டது. படிப்படியாக, அனுபவம் மற்றும் கற்றல் மூலம், சூழலியல் முறைகளின் ஆற்றலை நான் புரிந்துகொண்டேன். மண் மெதுவாக ஆரோக்கியமடைவதையும், கருப்பு சீனாட்டி போன்ற பாரம்பரிய விதைகளை கவனத்துடனும் பொறுமையுடனும் எவ்வாறு பயிரிடலாம் என்பதையும் நான் கண்டேன்.

விதைகளுக்காக மண்ணையும் சூழல் அமைப்பையும் தயார் செய்வதற்கு முயற்சி தேவைப்பட்டாலும் .உள்ளூர் நெல் உற்பத்தி நீண்ட கால அடிப்படையில் செலவு குறைவானது என்பதை பல்வேறு இடங்களில் உள்ள விவசாயிகள் ஒப்புக்கொண்டனர். இது கடன்களை அடைக்கவும், வாழ்க்கைக்கான பணம் சம்பாதிக்கவும் முயல்கின்ற ஏனைய பல விவசாயிகளுக்கு ஒரு தடையாகப் பார்க்கப்பட்டது. உள்ளூர் நெல்லைப் பயிரிடும்போது பசளை, பூச்சிக்கொல்லிகள் மற்றும் இயந்திரங்கள் போன்ற

மேலதிக உளளீடுகளுக்கான செலவு குறையும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்ட போதிலும், உள்ளுர் நெல் நல்ல விளைச்சலைத் தருவதற்கு எடுக்கும் நேரத்தை, தற்போதைய சூழ்நிலையில் அவர்களால் செலவிட இயலவில்லை.

இயற்கை அல்லது சூழலியல் விவசாயத்தை மேற்கொள்வதற்காக, பலர் தங்கள் சொந்த பசளைகளை வீட்டிலேயே தயாரித்து வருகின்றனர். மீன் மற்றும் பழ கரைசல்கள், விலங்குக் கழிவுகள் மற்றும் கினிசரீயா போன்ற உள்ளுர் காட்டு இலைகள் ஆகியவை உற்பத்திச் செலவுகளைக் குறைவாக வைத்திருக்கப் பரவலாகப் பயன்படுத்தப்படும் முறைகளாகும்.

அவர்கள் பகிரந்துகொள்ளும் ஒரு முக்கியக் கவலை விவசாயிக்கு இனிமேலும் சுதந்திரம் இல்லை என்பதாகும். ஆரம்பக் காலத்தில் அவர்கள் தங்களின் பாரம்பரிய அறிவு மற்றும் பல ஆண்டுகால விவசாயப் பயிற்சியின் மூலம் 'பூமியையும் அதன் இயல்புகளையும் அறிந்திருந்தனர்' அதற்கேற்ப தங்கள் பயிர்செய்கைகளை அவர்களால் வடிவமைக்க முடிந்த்தது. இப்பொழுது, அவர்கள் அரசாலும் 'சுதந்திரச் சந்தையாலும்' வகுக்கப்பட்ட கட்டமைப்புகள் மற்றும் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். எவ்வளவு பசளை பயன்படுத்தப்பட வேண்டும், எந்தெந்த வகை பசளைகள் பயன்படுத்தப்பட வேண்டும், எப்போது பயிர்செய்கைக்காக நீர் திறந்துவிடப்பட வேண்டும் என்பதை அந்த விதிகள் நிர்ணயிக்கின்றன. இந்த நிலைமைகள் விவசாயிக்கு சிறிதும் ஆதரவளிப்பதில்லை மாறாக, வணிக விற்பனையாளர்கள் மற்றும் பாரிய பொருளாதார தரப்பினரின் வெற்றியை உறுதி செய்கின்றன.

பாரம்பரிய விவசாய முறையில், ஒவ்வொரு விவசாயியும் தங்கள் நிலத்தில் பலவகைப் பயிர்களைப் பயிரிட்டு, ஆண்டு முழுவதும் தங்கள் குடும்பத்திற்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தனர். பருவத்திற்கு ஏற்றவாறு பயிர்கள் பயிரிடப்படட்ன, மேலும் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான அறுவடையும் காணப்பட்டன. நீர்ப்பாசனத் திட்டங்களால் உருவாகக்ப்பட்ட புதிய குடியிருப்புகளில் பயிர்செய்கைகள் கடடுப்படுத்தப்பட்டன. குடியிருப்பை உருவாக்க அனுமதிக்கும் ஆவணங்களிலும், பினன்ர ் வெளியிடப்படட் சுற்றறிக்கைகளிலும், சில குறிப்பிட்ட பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். இது பொதுவாக நெல் மற்றும் மிளகாய், பெரிய வெங்காயம், சோயா அல்லது வாழை போன்ற மற்றொரு வகையாக காணப்படுகின்றது. இந்தத் திட்டமும் தற்போதைய பொருளாதார அமைப்பும் ஆண்டு முழுவதும் ஒரே பயிரை மட்டுமே பெருமளவில் பயிரிட வேண்டும் என்று கோருகின்றன. எனவே, விவசாயிகள் சந்தைக்காக குறித்தப் பருவகாலப் பயிர்களை மட்டுமே பயிரிட முடியும். ஆண்டு முழுவதும் பயன்படுத்தக்கூடிய மற்றும் விவசாயிகளுக்குப் பயனளிக்கும் தேங்காய், மா, பலா போன்ற பல்லாண்டுப் பயிர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

**மதிப்பினைக் கூட்டல்**

விதைகள், பசளை, உழுதல், விதைத்தல் மற்றும் அறுவடைக்காக விவசாயிகள் அதிகப் பணம் செலவிடுகிறார்கள். இவை பெரும்பாலும் கடன்கள் மூலம் வாங்கப்பட்டு, அந்தச் செலவுகள் அறுவடையிலிருந்து மீட்கப்படுகின்றன. அதன் காரணமாக பலர் தங்களது உற்பத்திகளை கூடிய விரைவில், பொதுவாக பதப்படுத்தப்படாத நெல்லாக விற்க விரும்புகிறார்கள். நெல்லை அரைக்கும் இயந்திரங்களுக்குப் பணம் செலவாகும் என்றக் காரணத்தால் தற்போதைய சூழ்நிலையில் தங்கள் அறுவடையை பெரிய ஆலைகளுக்கு விற்பது தங்களுக்கு எளிதாக இருக்கிறது என்றும் விவசாயிகள் கூறுகின்றனர். இந்த நிறுவனங்கள், நெல் சந்தையைக் கடடுப்படுத்தி, விலையை உயர்த்துவதற்காக தானியங்களைப் பதுக்கி வைக்கின்றன. மேலும், பெரும்பாலான விவசாயிகள் தங்களுக்கு நெல்லை விற்பதை உறுதிசெய்யும் மூலதனமும் வளங்களும் குறித்த நிறுவனங்களிடம் உள்ளன. அறுவடை காலத்தில், பெரிய ஆலைகள் வெட்டப்பட்ட நெல்லை நேரடியாக வயலிலிருந்து எடுத்துச் செல்ல வாகனங்களை அனுப்புகின்றன. இதனால் விவசாயி போக்குவரத்துச் செலவை ஏற்க வேண்டியதில்லை என்றபோதும், இது பெரிய ஆலைகளின் வருமானத்தை அதிகரிக்கிறது.

சில உழவர் சங்கங்கள் ஒரு ஆலையை வாங்கியிருந்ததால், அறுவடை செய்யப்பட்ட நெல்லிலிருந்து அரிசியையும் அரிசி மாவையும் தயாரிக்க முடிந்தது. பின்னர், அந்தச் சங்கமோ அல்லது அதன் விவசாயிகளோ அந்த அரிசியைச் சேமித்து வைத்து, விலை உயரும்போது சந்தையில் விற்க முடியும். தற்போது, விவசாயச் சேவைகள் துறை அத்தகைய இயந்திரங்களைச் சங்கங்களுக்குக் குறைந்த பகிரப்பட்ட விலையில் வழங்குகிறது.

மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச சபை பகுதியிலுள்ள முள்ளிமோட்டையில், உணவு உற்பத்தி மற்றும் சந்தைகள் மீதான தங்கள் கட்டுப்பாட்டை நிலைநாட்டும் நோக்கில், விவசாயிகள் ஒன்றிணைந்து முள்ளிமோட்டை விவசாய உற்பத்தியாளர் கூட்டமைப்பை நிறுவினர். அறுவடை செய்யப்பட்ட பச்சை நெல்லை வியாபாரிகளுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்வதற்குப் பதிலாக, அந்தக் கூட்டமைப்பு தனது விளைபொருட்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாகப் பதப்படுத்தத் தொடங்கியது.

காலை உணவாகவோ அல்லது சிற்றுண்டியாகவோ பயன்படுத்தப்படும் சத்தான ஆரோக்கியக் கலவையான "சத்துமா" வை உற்பத்தி செய்வது அவர்களின் முக்கிய முன்னெடுப்புகளில் ஒன்றாகும். இதில் உள்ள ஏறக்குறைய அனைத்து மூலப்பொருட்களும் அந்த சமூகத்தினராலேயே பயிரிடப்படுகின்றன. ஒரே ஒரு மூலப்பொருள் மட்டுமே வெளியிலிருந்து பெறப்படுகிறது. விவசாயிகள் கூட்டாக அந்தப் பொருளைச் சுத்தம் செய்து, வறுத்து, அரைத்து, பொட்டலமிட்டு, சந்தைப்படுத்துகின்றனர்.

அம்பாறையில் உள்ள நெல் விவசாயிகள் தங்கள் கையிருப்பில் ஒரு பகுதியை சமபோ'ா மற்றும் பிற ஊட்டச்சத்துக் கலவைகளைத் தயாரிக்கும் குழுக்களுக்கு - பெரும்பாலும் பெண்கள் தலைமையிலான குழுக்களுக்கு - அவர்களுடைய உற்பத்திக்காக வழங்குகின்றனர்.

**சந்தைப்படுத்தல்**

நாடு முழுவதும் பலரின் உணவில் நெல் ஒரு முக்கிய அங்கமாக காணப்படுகின்றது. பெருமளவில் பயிரிடப்படும் கலப்பின வகை நெல்லுக்கு அதிக தேவை உள்ளது. பாரம்பரிய நெல்லை உற்பத்தி செய்து வந்த விவசாயிகள், தங்களின் நெல் வகைகளுக்கு ஏற்ற ஒரு பெரிய, நிலையான சந்தையைக் கண்டறிவதில் சிரமப்பட்டதாகக் கூறினர். பாரம்பரிய நெல்லில் ஊட்டச்சத்துக்கள் அதிகமாக காணப்படுகின்றன. நீண்ட காலத்திற்கு குறித்த நெல்லையும் மற்ற உள்நாட்டு உணவுப் பயிர்களையும் உட்கொள்வது நோய்களின் பரவலைக் குறைக்கும் என்று விவசாயிகள் நம்புகிறார்கள். இருப்பினும், இந்த சுகாதார நன்மைகள் பரவலாக அறியப்படவில்லை. தற்போது, பெரிய விவசாய வணிக நிறுவனங்கள் உள்ளூர் அரிசியை உற்பத்தி செய்து, பல்பொருள் அங்காடிகளில் அதிக விலைக்கு விற்கின்றன. அதன் நன்மைகள் குறித்த அறிவை விரிவுபடுத்துவது சந்தையை வளர்ச்சிக்கும் சிறு உற்பத்தியாளர்களுக்கு வழியினை அமைத்துக் கொடுக்கும்.

சந்தைகள், பெரிய அரிசி ஆலை நிறுவனங்கள் மற்றும் வணிக விற்பனையாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. சில சமயங்களில், ஒரே வணிகர் அனைத்து முக்கிய பொருளாதார மையங்களிலும் கிளைகளை நடத்திச் செயல்பட முடியும். இந்த நிறுவனங்களால் பற்றாக்குறை உருவாக்கப்படுகிறது, உருவாகக்ப்பட்டும் உள்ளது. அறுவடைக்குப் பிறகு விவசாயிகளுக்கு அரிசிக்கு மிகக் குறைந்த தொகையை மட்டுமே செலுத்தியிருந்தபோதிலும், இது அந் நிறுவனங்களின கையிருப்பை அதிக விலையில் விற்க அனுமதிக்கிறது. எனவே, இந்த "சந்தை" அந்த வணிகர்களுக்குப் பயனளிக்கின்ற அதேவேளை விவசாயிகள் தொடர்ந்தும் கடனால் தவித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

**வளங்கள்**

<u>நிலம்</u>

கூட்டங்களில் பங்கேற்றவர்களிடையே குத்தகை விவசாய முறை பரவலாகப் பின்பற்றப்படுகிறது. இவர்களுள், ஒரு விவசாயி ஒரு பெரிய நில உரிமையாளரிடமிருந்து குத்தகைக்கு எடுத்த நிலத்தில் வேலை செய்கிறார். பின்னர் அந்த விவசாயி, தனது விளைச்சலின் ஒரு பகுதியை நில உரிமையாளருக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார். அந்த நிலத்தில் என்ன பயிரிடப்பட வேண்டும் என்பது குறித்து விவசாயி அல்ல, நில உரிமையாளரே முடிவெடுக்கிறார்.

இலங்கையில், குறிப்பாகப் போர் முடிவடைந்த பின்னர் மிக வேகமாக நடைபெற்ற பேரளவு அபிவிருத்தித் திட்டங்களிலும் நிலப் போராட்டங்கள் பிரதிபலிக்கின்றன. பெரும்பாலும், இந்த நீர்மின்சக்தி மற்றும் நெடுஞ்சாலைத் திட்டங்கள், அப்பகுதியில் உள்ள விவசாயத்தின் மீதான

சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதாரத் தாக்கத்தை முழுமையாக மதிப்பிடாமலேயே, குறிப்பிட்ட பிராந்தியங்களை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன.

மத்திய மாகாணத்தில், மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டம் மழைப்பொழிவு முறைகளைப் பாதித்து, தங்களது பயிர்செய்கைக்கு இடையூறு விளைவிப்பதாக விவசாயிகள் குறிப்பிட்டனர். தெற்கில், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஏக்கர் கணக்கான நெல் வயல்களை ஊடறுத்துச் சென்றுள்ளதுடன், மத்தல விமான நிலையம் யானைகளின் வழித்தடங்களுக்கு இடையூறு விளைவித்த காரணத்தினால் விவசாய நிலங்களில் விலங்குகளின் அச்சுறுத்தல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

<u>நீர்</u>

இலங்கையில் நெல் பயிர்செய்கை இரண்டு பொதுவான காலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. தங்கள் பயிர்செய்கைக்காக மழைநீரை நம்பியிருக்கும் விவசாயிகள், காலப்போக்கில் பருவங்களின் அடையாளங்கள் எவ்வாறு மாறிவிட்டன என்பதைக் குறிப்பிட்டனர். தற்போது மழை எதிர்பார்த்ததை விட முன்னதாகவோ அல்லது தாமதமாகவோ பெய்கிறது, மேலும் இது கடந்த இரண்டு பருவங்களில் கடுமையான பயிர் சேதத்திற்கு வழிவகுத்துள்ளதாக விவசாயிகள் குறிப்பிட்டனர்.

மகாவலி அல்லது கல்ஓயா திட்டங்கள் போன்ற நீர்ப்பாசனத் திட்டங்களுக்குள் தங்கள் வயல்கள் அமைந்துள்ள விவசாயிகள், ஒரு வித்தியாசமான காலப் பிரச்சினையைக் குறிப்பிடுகின்றனர். அதாவது, கால்வாய்களில் நீரைத் திறந்துவிடும் முடிவானது, பருவகாலக் கூட்டங்களின் போது, நீர்ப்பாசன அமைச்சின் தலைமையில், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மின்சார சபை, வனவிலங்கு அமைச்சு மற்றும் சுற்றுலா அமைச்சு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மத்தியக் குழுவால் எடுக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் விவசாய சங்கங்கள் பங்கேற்பதை உறுதிசெய்யும் ஒரு கட்டமைப்பு ஏற்கனவே உள்ளது. இருப்பினும், நேர்காணல்களில் பங்கேற்ற விவசாயிகள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அரசியல் கட்சிகள், அமைச்சகங்கள் அல்லது ஆலை உரிமையாளர்களுடன் நெருங்கிய தொடர்புள்ள சங்கங்களே இந்தக் கூட்டங்களைக் கட்டுப்படுத்துவதாகக் குறிப்பிட்டனர். எனவே, அவர்களின் குரல் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை, மேலும் நீர்ப்பாசனத் திட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவது என்பதற்கும் சாத்தியப்பாடுகள் குறைவாகும்.

மேலும், நீர் திறப்பு முதலில் மின் உற்பத்திக்கும், இரண்டாவதாக சுற்றுலாவுக்கும், மூன்றாவதாகவே விவசாயத்திற்கும் முன்னுரிமை அளிக்கிறது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இந்த ஏற்பாடு தங்களின் உற்பத்திக்கும், அதன் விளைவாக ஒட்டுமொத்த நாட்டின் உணவுப் பொருட்களைப் பெறும் தன்மைக்கும் ஓர் அச்சுறுத்தல் என்று விவசாயிகள் கருதுகின்றனர். இறுதி முடிவு நீர்ப்பாசனத் துறையின் கையில் இருந்தாலும், இந்த முடிவெடுக்கும் செயல்பாட்டில் தங்கள் குரல்களுக்கு மேலும் அர்த்தமுள்ள பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று அவர்கள் முன்மொழிகிறார்கள்.

<u>இயந்திரங்கள்</u>

இயந்திரங்களின் பயன்பாடு குறிப்பாக, சமவெளிகளில் பயிர்செய்கை செய்வதில் பரவலாக உள்ளது. மத்திய மாகாணத்தில் உள்ள விவசாயிகள், மலைகளில் உள்ள படிக்கட்டுப் பாத்திகளில் நெல் பயிரிடுகின்றனர், அங்கு இயந்திரங்களைப் பயன்படுத்த இயலாது. இயந்திரங்களைப் பயன்படுத்தும் விவசாயிகள், பெரும்பாலான மாதிரிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால், உள்ளூர் உற்பத்தித் தொழிலாக உருவாகக் கூடிய நிதியிலிருந்து பணம் வெளியேறுவதாகக் குறிப்பிடுகின்றனர். ஊக்குவிக்கப்பட வேண்டிய உள்ளூர் தொழில்நுட்பத்திற்கு உதாரணமாக, இலங்கை கண்டுபிடிப்பாளரான ரே.விஜேவர்தனவின் கை டிராக்டரை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த இயந்திரத்தையும், விவசாயத்திற்குத் தேவையான பிற உபகரணங்களையும் உற்பத்தி செய்வதற்கான அமைப்புகளை உருவாக்குவது, இலங்கையிலிருந்து பணம் வெளியேறுவதைத் தடுப்பதோடு, மேலும், இயந்திரங்களை நெகிழ்வான முறையில் பழுதுபார்த்து மாற்றவும் முடியும்.

மேலும், உபகரணங்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள பணக்கார வணிகர்கள் அல்லது தனிநபர்களுக்குச் சொந்தமானவையாக காணப்படுகின்றன. அவர்கள் பருவத்திற்கு ஏற்ப, உழுவதற்கோ அல்லது அறுவடை செய்வதற்கோ அவற்றை வாடகைக்கு விடுகின்றனர். இது ஒரு விவசாயியின் உற்பத்திச் செலவை மேலும் அதிகரிக்கிறது. அறுவடை குறைவாகவும், அவர்களுக்கு லாபமற்றதாகவும் இருந்தாலும், அந்த உபகரணத்திற்காகச் செலுத்தப்படும் விலை மாறாமல் அப்படியே இருக்கிறது.

விதைகள்

பாரம்பரிய விதை வகைகளைக் கொண்டு பெரும்பாலும் அல்லது முழுமையாக சூழலியல் விவசாயத்தை பின்பற்றிய விவசாயிகள், ஒவ்வொரு அறுவடையின் போதும் விதைகளைச் சேமித்து வைப்பதற்குத் தனிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டனர். ராஜாங்கனையில், ஒரு கூட்டுறவு அமைப்பு சுமார் 80 உள்ளூர் விதை வகைகளைச் சேமித்து வைத்துள்ளது. தம்புள்ளையில், ஒரு விவசாயி 30 வகைகளின் தொகுப்பைக் கொண்டிருந்தார். உள்ளூர் விதைகளை முயற்சித்துப் பார்க்க ஆர்வம் காட்டிய, தங்களைத் தொடர்புகொண்ட மற்றும் பிற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுடன் அவர்கள் இவற்றைப் பகிர்ந்து கொள்கிறாரகள்.

நிதி

பல தசாப்தங்களாக, இலங்கை விவசாயிகள் நியாயமான நிதி தீர்வுகள் இல்லாததால் போராடி வருகின்றனர். உள்ளூர் வங்கிகள் விரிவான ஆவணங்கள், உத்தரவாததாரர்கள் மற்றும் பிணையங்களைக் கோருகின்றன. ஆனால், பெரும்பாலான விவசாயிகளிடம் அவை இருப்பதில்லை, அல்லது அவசரக் கடன்கள் தேவைப்படும்போது அவற்றை உடனடியாக வழங்க முடிவதில்லை. இது, குறைந்தபட்ச ஆவணங்களுடன், ஆனால் அதிக வட்டியில், விரைவாகக் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெற அவர்களைக் கட்டாயப்படுத்துகிறது. விரிவடைந்து வரும் காலநிலை மாற்றம் விவசாயத்தின் நிலையற்ற தன்மையை அதிகரித்து, அவர்களின் அபாயத்தை மேலும் கூட்டுகிறது.

2020ஆம் ஆண்டில், கொள்ளையடிக்கும் நுண்கடன்களுக்கு எதிராக விவசாயிகள் மிக அண்மைய போராட்டத்தை மேற்கொண்டனர். விவசாய சங்கங்கள், தங்களின் சொந்த சேமிப்பை வளர்ப்பதன் மூலமும், தங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவதன் மூலமும் நுண்கடன் நிறுவனங்கள் போன்ற அமைப்புகளிடமிருந்து விலகிச் செல்ல எப்போதும் முயற்சி செய்து வருகின்றன.

அவர்கள் இதை சில வெவ்வேறு வழிகளில் செய்கிறார்கள். முதலாவதாக, உறுப்பினர் சந்தாக் கட்டணங்கள் மூலம் ஆரம்பிக்கின்றனர். காலப்போக்கில் வசூலிக்கப்படும் இந்தக் கட்டணம், அறுவடைக்குப் பிறகு திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் குறைந்த வட்டி விகிதத்தில், சிறு கடன்களை அதன் உறுப்பினர்களுக்கு வழங்க சங்கத்திற்கு உதவுகிறது. மஹியங்கனய, ராஜாங்கனய மற்றும் சூரியவெவ ஆகிய இடங்களில் உள்ள சங்கங்கள் இந்த நடைமுறையை மேற்கொண்டன. நிறுவனங்கள் வழங்கக்கூடிய பெரிய அளவிலான கடன்களை இவை அனுமதிக்காமல் இருக்கலாம், ஆனால் தேவைப்படும் உறுப்பினரக்ளுக்கு இவற்றால் ஆதரவளிக்க முடிகிறது. அடுத்தது, தங்கள் உறுப்பினர்களின் உற்பத்திகளைக் கொண்டு வாராந்திர சந்தைகளை நடத்துவதாகும். இதில் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் பொருட்களை விற்ற பிறகு, ஒரு பகிரப்பட்ட இலாபம் தக்கவைக்கப்படுகிறது. இந்தச் சங்கங்கள், பணப் பரிவர்த்தனையைத் தாண்டிய வழிகளில் உறுப்பினர்களுக்கு ஆதரவளிக்க ஆக்கப்பூர்வமான வழிகளையும் கண்டறிந்தன. பொலன்னறுவையில் உள்ள ஒரு சங்கம், சுழற்சி முறையில் வழங்கப்படும் பொருட்கள் நிரம்பியக் கூடை ஒன்றை உருவாக்கியிருந்தது, அதாவது, உறுப்பினர்கள் தங்கள் வீடுகளில் உள்ள பொருட்களைக் கொண்டு அதில் பங்களித்தனர். ஒவ்வொரு மாதமும் நிரம்பிய கூடை ஒரு உறுப்பினரால் பெறப்படும்.

ஹிங்குரகொடவில் உள்ள சந்தனபொக்குன கிராமமானது, நுண்கடன் சுமையால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு கிராமமாகும். 2018-ஆம் ஆண்டில், கடன் சுழல்ச்சியிலிருந்து விடுபட்டுத் தங்கள் கிராமப்புறப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக, பாதிக்கப்பட்ட பெண்கள் குழு ஒன்றுசேர்ந்து சந்தனபொக்குன விமுக்தி கிராம விவசாய மகளிர் அமைப்பை உருவாக்கியது. இன்று இந்த அமைப்பில் 30 செயற்திறனான உறுப்பினர்களும், மேலும் 20 பேர் தொடர்ந்து பங்கேற்பவர்களும் உள்ளனர். உறுப்பினர்கள் மாதாந்தக் கட்டணமாக ரூ. 100-ம், ஒவ்வொரு அறுவடைப் பருவத்திலும் ரூ. 1,000-ம் பங்களிக்கின்றனர். இவ்வாறு திரட்டப்பட்ட பணத்தின் மூலம், இந்த அமைப்பு பல மாற்றுப் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்கியுள்ளது.

இதில் ஆண்டுக்குக் குறைந்தபட்ச 6மூ வட்டி விகிதத்தில் கடன்களை வழங்கும் ஒரு சமூகக் கடன் திட்டமாகும். மற்றொரு செயற்பாடானது, ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதி நடைபெறும் அவர்களின் மாதாந்தக் கூட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் தங்களால் இயன்றதை, அதாவது தங்கள் அறுவடையின் ஒரு பகுதி, மரக் கரண்டிகள் போன்ற கைவினைப் பொருட்கள், அல்லது பால் மா, சர்க்கரை போன்ற அன்றாடத் தேவைகள் என அனைத்தையும் கொண்டு வருகிறார்கள். இந்தக் பங்களிப்புகள் அனைத்தும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு ஒரு பொதி பொட்டலம் உருவாக்கப்படுவதுடன், இது ஒவ்வொரு உறுப்பினருக்கும் பரிசாக வழங்கப்படுகிறது. இந்தப் பொருட்களின் மொத்த மதிப்பு பொதுவாக சுமார் ரூ. 16,000 ஆகும், மேலும் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த சீட்டு முறைப்படி பெற்றுக்கொள்கிறார்கள்.

***சேமிப்பு(களஞ்சியம்)/பாதுகாப்பு***

ஹிங்குரக்கொடவில் உள்ள சில விவசாயிகள், தாங்கள் அறுவடை செய்த நெல்லைத் தங்கள் வீடுகளில் சேமித்து வைத்து, பணம் தேவைப்படும்போது அதைப் பயன்படுத்துவதாகக் கூறினர். மொனராகலையில் உள்ள மற்றவர்கள், தாங்கள் அடர்ந்த வனப்பகுதிகளில் வசிப்பதாலும், யானைகள் நெல்லைத் உண்பதற்காக வீட்டைத் தாக்கும் என்பதாலும், தங்களால் இந்த முறையில் நெல்லை வீடுகளில் சேமிக்க முடியவில்லை என்று கூறினர்.

அனைத்து இடங்களிலும், ஒரு கூட்டுறவு சேமிப்பு மாதிரி முன்மொழியப்பட்டது, ஏனெனில் அது நெல்லை விற்கும் செயல்முறையையும் மையப்படுத்தும். கூட்டுறவு சேமிப்பு செயல்முறையை - ஒரு தனி விவசாய சங்க அளவிலோ அல்லது ஒரு வட்டாரத்திற்குள் உள்ள ஒரு கூட்டு அமைப்பிலோ - பிரதானப்படுத்துவது, விவசாயிகளுக்குத் தங்கள் கையிருப்பு மீது அதிகக் கட்டுப்பாட்டை வழங்குவதாக அமையும்.

***நிறுவனங்கள்***

விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக விவசாயத் துறையும், விவசாய சேவைகள் துறையும் முக்கிய நிறுவனங்களாக உள்ளன. இருப்பினும், நேர்காணல் செய்யப்பட்ட விவசாயிகள், அந்த அலுவலகங்களுக்குள் திறன் மேம்பாடு மற்றும் முன்னுரிமை மாற்றம் தேவை என்று நம்பினர். அங்குள்ள பணியாளர்கள், இரசாயன உரங்கள் மற்றும் கலப்பின விதைகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கப் பயிற்சி பெற்றிருந்தனர். ஆனால், பாரம்பரிய விதைகளை வளர்ப்பதற்கு விவசாய சூழலியல் முறைகளைப் பயன்படுத்துவது குறித்து அவர்களுக்கு மிகக் குறைந்த அல்லது எந்த அறிவும் இல்லை. பங்கேற்பாளர்கள் இது தொடர்பாக பரந்த அளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்த முன்மொழிந்தனர், ஏனெனில் இது இயற்கை, உள்ளூர் உணவுக்கான சந்தையை வளர்க்கவும் உதவும்.

விவசாய விரிவாக்க சேவைகள் சென்றடையாத சில இடங்களும் இருந்தன. தங்கள் பகுதிக்குக் குறைந்த கவனமே செலுத்தப்படுவதாக விவசாயிகள் உணர்ந்தனர், மேலும் அதிகாரியும் தவறாமல் வந்து பார்வையிடுவதுமில்லை.

இந்த அமர்வுகளில் பங்கேற்ற விவசாயிகள், கலப்பின மற்றும் பாரம்பரிய நெல் வகைகள் இரண்டையும் பயிரிட்டனர். கலப்பின வகைகளுக்கு, அவர்கள் விவசாயத்துறை மையங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து கலப்பின விதைகளை வாங்கினர். அரசு விதைப் பண்ணைகள் அவர்கள் செயல்பட வேண்டிய திறனுக்குச் செயல்படவில்லை என்று பலர் குறிப்பிட்டனர். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து வரும் விதைகள் பெரும்பாலும் கலப்பின வகைகளாக இருந்தன, அவை சரியாக வளர இரசாயனப் பசளை தேவைப்பட்டது. இவ்வாறு, பசுமைப் புரட்சிக்குப் பிறகு உள்நாட்டு விதைகள் படிப்படியாகக் கிடைக்காமல் போய்விட்டன. விவசாயிகள் பாரம்பரிய நெல் வகைகளை பயிரிட விரும்பினாலும், அவை எளிதில் கிடைக்காததால் அவர்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

**உழைப்பு**

நெற் பயிர்ச்செய்கையில் உழைப்பு பல வடிவங்களில் வெளிப்படுகிறது. சில விவசாயிகள், கூலி ஆட்களை அமர்த்துவதால் ஏற்படும் செலவு காரணமாக, தங்கள் குடும்பத்தினரின் உதவியுடன் வயல்களில் வேலை செய்வதாகக் கூறினர். சிறிய பகுதிகளில், தங்கள் வயல்களைப் பராமரித்து முடித்தவர்கள், பகிரப்பட்ட வேலை முறையின் கீழ், தங்கள் அண்டை வீட்டாரின் அல்லது ஒரு சங்க உறுப்பினரின் வயல்களில் வேலைக்குச் செல்கின்றார்கள்.

இளம் தலைமுறையினர் நகர்ப்புறங்களை நோக்கி நகர்ந்ததால், விவசாயிகள் பெரும்பாலும் அனைத்து பயிர்ச்செய்கை வேலைகளையும் தாங்களே செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டமை ஒரு பொதுவான போக்காக காணப்படுகின்றது. இளைஞர்கள் வேறு இடங்களில் வேலை தேடுவதால், விவசாயிகளால் வழிநடத்தப்படும் பயிர்செய்கையின் எதிர்காலம் குறித்த கேள்விகளை இது எழுப்புகிறது.

இந்த விவசாயிகளில் பெரும்பாலானோர் தங்கள் நெல்லை சூழலியல் விவசாய முறைகளில் பயிரிட்டதால், பெரிய அளவிலான இரசாயன அடிப்படையிலான பயிர்ச்செய்கையை விட இதற்கு குறைவான உழைப்பும் கவனமும் தேவைப்படுவதாக உணர்ந்தனர். இந்த முறைக்கு மாறுவது, ஒரு சிறிய வழியில் “மக்களை மீண்டும் நிலத்திற்கு அழைத்து வருவதற்கான” ஒரு வழியாக இருக்கும் என்று அவர்கள் கருதினர். இரசாயனம் சார்ந்த பயிர்செய்கையில் ஈடுபடும் தொழிலாளர்கள், நீர் மற்றும் மண் காரணமாக நோய்வாய்ப்படும் போக்கைக் கொண்டிருந்தனர், ஆனால் இந்த முறை ஒருவரின் ஆரோக்கியத்திற்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாது என்பது நிரூபிக்கப்பட்டது.

பெரிய அல்லது நடுத்தர அளவில் நெல் பயிரிடும் விவசாயிகள், அதில் ஒரு பகுதியைத் தங்கள் குடும்பத்தின் நுகர்விற்காக வைத்துக் கொள்வதாகக் குறிப்பிட்டனர். நீர்ப்பாசனத் திட்ட நிலங்களில், விவசாயிகளும் அவர்களது குடும்பத்தினரும், நெல் பயிரிடப்படாத தங்களது மற்ற நிலப்பரப்பில் காய்கறிகளையும் மற்ற உணவுப் பயிர்களையும் பயிரிடுகின்றனர். மற்றவர்கள் தங்கள் வீட்டுத் தோட்டங்களிலும் குறைந்த அளவில் காய்கறிகளையும் கீரைகளையும் பயிரிடுகின்றனர். இது, தங்களது சொந்த நிலத்தின் உற்பத்திகளில் இருந்து குடும்பத்திற்கு ஒரு சமச்சீரான உணவை கிடைப்பதை உறுதி செய்ய அவர்களுக்கு உதவுகிறது. வீட்டு உபயோகத்திற்குத் தேவையில்லாத எந்த அளவும் கூடுதல் வருமானத்திற்காக விற்கப்படுகிறது. அவர்கள் தங்கள் பணத்தின் பெரும்பகுதியை இறைச்சி மற்றும் முட்டை போன்ற புரதங்களுக்காகச் செலவிடுகிறார்கள்.

அரிசி நுகர்வைப் பொறுத்தவரை, சில விவசாயிகள் தங்கள் அறுவடை முழுவதையும் பெரிய அளவிலான ஆலைகளுக்கு விற்றுவிட்டு, கடைகளுக்கு வந்தவுடன் அரிசியை வாங்குகிறார்கள். மற்றவர்களுக்குச் சிறிய சமூக அளவிலான அல்லது சுயாதீன ஆலைகளுக்கான அணுகல் இருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில், அவர்கள் அரிசியின் ஒரு பகுதியைத் தங்கள் குடும்பத்திற்காக வைத்துக்கொண்டு, மீதமுள்ளதைச் சந்தைக்கு அனுப்புகிறாரகள்.

## 2. மீன்வளம்

இலங்கை, தேசிய உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் கிராமப்புற வாழ்வாதாரங்களில் முக்கியப் பங்கு வகிக்கும் வளமான நீர்வளங்களைக் கொண்டுள்ளது. இது சுமார் 1,785 கி.மீ நீளமுள்ள கடற்கரையையும், சுமார் 517,000 கி.மீ$^2$ பரப்பளவுள்ள பிரத்தியேகப் பொருளாதார வலயத்தையும் (நுநுணு) கொண்டுள்ளது. மேலும், இலங்கையின் உள்நாட்டு மற்றும் உவர்நீர் அமைப்புகள் ஏறக்குறைய 420,000 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்டுள்ளன. இந்தப் பன்முக நீர்ச்சூழல்கள் பல்வேறு வகையான மீன்பிடி முறைகளுக்கு ஆதரவளிக்கின்றன.

தங்கல்லை, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய 5 இடங்களில், கடலிலும் களப்புகளிலும் மீன்பிடிக்கும் சமூகங்களை ஆணைக்குழு சந்தித்தது.

### உற்பத்தி:

அனைத்து மாவட்டங்களிலும், மீன்பிடித்தல் ஒரு முதன்மை வாழ்வாதாரமாகத் தொடர்கிறது. இதனுடன் வீட்டுத்தோட்டம் அமைத்தல், சிறு அளவிலான உணவு தயாரித்தல், கால்நடை வளர்ப்பு மற்றும் பருவகால கூலி வேலைகள் போன்றவையும் துணைபுரிகின்றன. சமூகங்கள் முக்கியமாக, பல நாள் படகுகள், ஒரு நாள் படகுகள், சிறிய குசீ படகுகள் மற்றும் கையால் வலை வீசும் நுடப்ங்களைப் பயன்படுத்தி, கரையோர மற்றும் களப்பு மீன்பிடிப்பையே சார்ந்துள்ளன. பாரம்பரிய முறைகளைப் பின்பற்றும் சிறு அளவிலான மீன்பிடித் தொழில்கள், உள்ளூர் உணவு முறைகளையும் வாழ்வாதாரப் பழக்கவழக்கங்களையும் பேணுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

பல பகுதிகளில், பருவகால நிச்சயமற்ற தன்மைகளைச் சமாளிக்க, மீன்பிடித்தலுடன் விவசாயமும் இணைக்கப்பட்டுள்ளது.

பிடிக்கப்படும் மீன் வகைகளில் இறால்கள், கணவாய் மீன்கள், நண்டுகள், சாவலை, சுறா, தொண்டன், கீர், கட்டா, வன்னு மற்றும் பல்வேறு காயல் மீன் இனங்கள் அடங்கும். பருவகால சுழற்சிகள் உற்பத்தியை வலுவாக வடிவமைக்கின்றதோடு, ஆறு மாத கால நல்ல வருமானம், ஒரு குடும்பத்தை ஆண்டு முழுவதும் நிலைநிறுத்தப் போதுமானது என்று மீனவர்கள் வலியுறுத்துகின்றனர். மாவட்டங்கள் முழுவதிலுமுள்ள மீனவர்களின் கருத்துப்படி, பாரம்பரிய மீன்பிடிப் பருவங்களில் ஒரு இடையூறு ஏற்பட்டுள்ளது அதாவது மாறிவரும் மழை மற்றும் காற்றின் போக்குகள், மீன்கள் கிடைக்கும் வழக்கமான கால அட்டவணையை மாற்றியுள்ளன.

சில சமூகங்கள் இரசாயனமற்ற மற்றும் நிலையான மீன்பிடி முறைகளைப் பின்பற்றுவதில் ஆர்வம் காட்டின, ஆனால் அவர்களிடம் தொழில்நுட்பமும் பயிற்சியும் இல்லை.

### மதிப்பினை கூட்டல்

மதிப்புக்கூட்டல் முக்கியமாக வீட்டு அளவிலோ அல்லது சமூக அளவிலோ மேற்கொள்ளப்படுகிறது, இதில் பெண்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். மீன்களை உலர்த்துதல் மற்றும் உப்பு சேரத்தல் (கருவாடு), ஊறுகாய், அம்புல்தியல், ஜாடி, பாப்பிகோ மற்றும் மீன் விழுதுகள் தயாரித்தல் ஆகியவை இந்தச் செயல்பாடுகளில் அடங்கும். இவை வீட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்படுவதோடு, புதிய மீன்கள் விற்கப்படும் இடங்களுக்கு அருகிலுள்ள சந்தையிலும் விற்கப்படுகின்றன.

இந்த இடங்களிலிருந்து மீன்கள் வாங்கப்பட்டு, டின்னில் அடைக்கப்பட்ட மீன்களைத் தயாரிக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தத் தொழிற்சாலைகள் தங்களுக்கு அருகில் அமைக்கப்பட்டால், அது வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அப்பகுதியின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் என்று மீனவர் சங்கங்கள் கருதுகின்றன.

சில பகுதிகளில், மீன் சார்ந்த பசளை தாளிப்புக் கட்டிகள், இறால் மற்றும் கணவாய் மீன்களிலிருந்து தயாரிக்கப்படும் தின்பண்டங்கள், பதப்படுத்தப்பட்ட கடற்பாசி.்.கடல் தாமரை போன்ற புதிய தயாரிப்புகளுக்கான சாத்தியக்கூறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும், பயிற்சி இல்லாமை, இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் குறைந்த அணுகல், சீரற்ற தரக்கட்டுப்பாடு மற்றும் தரம் குறைந்த மீன்களைச் சார்ந்திருத்தல் போன்ற பல முக்கியத் தடைகளை மதிப்புக்கூட்டல் எதிர்கொள்கின்றது.

அயல் மற்றும் உள்ளூர் வகைகளைக் கலந்து வளர்க்கப்படும் இறால் பண்ணைகள், சந்தையில் சிதைவுகளையும் சிறு மீனவர்களுக்கு நியாயமற்ற போட்டியையும் உருவாக்குகின்றன.

***சந்தைப்படுத்தல்***

ஒவ்வொரு மாவட்டத்திலும், இடைத்தரகர்களும் தனியார் ஏகபோக நிறுவனங்களும் மீன் கொள்முதலையும் விலையையும் கட்டுப்படுத்துகின்றன. சேமிப்பு வசதி இல்லாததால், மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை உடனடியாக விற்று, குறைந்த விலையைப் பெறுகிறார்கள். இது விவசாயத் தொழில்களிலும் இதே நிலைமையைப் பிரதிபலிக்கிறது.

இடைத்தரகர்கள் பெரும்பாலும் குளிரூட்டப்பட்ட சரக்கு வாகனங்களுடன் நேரடியாகத் துறைமுகத்திற்கே வருவதால், மீனவர்கள் போக்குவரத்துக்காகச் செலவழிக்க வேணடியதில்லை. இருப்பினும், அவர்கள் மிகக் குறைந்த விலையில் மீன்களை வாங்கி, தனியார் வர்த்தகர்களால் நிர்ணயிக்கப்பட்ட கணிசமாக விலையில் விற்கிறார்கள். மீன் பிடிப்பிலிருந்து கிடைக்கும் உண்மையான இலாபம் மீனவர்களுக்குத் திரும்பக் கிடைப்பதில்லை.

இலங்கைச் சந்தையில் இறக்குமதி செய்யப்படும் மீன்களின், குறிப்பாகச் நெத்தலி மீன்களின் அளவு, உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பாதித்து, அவர்கள் எவ்வளவு விற்கவும் சம்பாதிக்கவும் முடிகிறது என்பதைப் பாதிக்கிறது.

சில சமூகங்கள், சமூகத்தால் நடத்தப்படும் ஏலங்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட விலை முறைகள் அல்லது அரசாங்கத்தால் எளிதாக்கப்பட்ட சந்தைகளைப் பரிந்துரைத்தன. யாழ்ப்பாணத்திலிருந்து உலர்த்தப்பட்ட மீன்களைக் குறைந்த அளவில் ஏற்றுமதி செய்யக் குடும்ப வலைப்பின்னல்கள் பயன்படுத்தப்படுகினற்ன.

யாழ்ப்பாணம், காரைநகரில் உள்ள அம்பாள் மீனவர் கூட்டுறவுச் சங்கம், ஒவ்வொரு காலை வேலையிலும் மீன் ஏலம் நடத்தப்படுகிறது. சிறு மீனவர்களுக்கு நீண்ட காலமாக பாதகமாக இருந்து வந்த, இடைத்தரகர்கள் விலை நிர்ணயம் செய்ய அனுமதிப்பதற்குப் பதிலாக, இந்தச் சங்கம் தனது உறுப்பினர்கள் தாங்கள் பிடித்த மீன்களை ஒரு வெளிப்படையான, திறந்த ஏல முறை மூலம் விற்க வழிவகை செய்கிறது. இது ஒவ்வொரு மீனவரும் அன்றைய சந்தை நிலவரத்தை நேரடியாகப் பிரதிபலிக்கும் ஒரு நியாயமான விலையைப் பெறுவதற்கு உறுதி செய்வதோடு, விலை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மீண்டும் மீனவர்களின் கைகளுக்கே ஒப்படைக்கிறது.

ஒவ்வொரு உறுப்பினரின் தினசரி வருமானத்தின் ஒரு பகுதி, பல ஆண்டுகளாகப் படிப்படியாக வளர்ந்து வரும் ஒரு கூட்டுச் சேமிப்பு நிதிக்கு செல்கிறது. இந்த நிதியின் மூலம், சங்கம் தனது உறுப்பினர்களுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன்களை வழங்கவும், மீனவர்களுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை வாங்க கூடியதாகவும் உள்ளது. மேலும், உறுப்பினர்கள் தங்களின் தினசரி மீன்பிடிப்பிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மீன்களை பொதுவானதொரு மீன் சேகரிப்பில் பங்களிக்குமாறு அழைக்கப்படுகிறார்கள். அந்த மீன்களைச் சங்கம் தனியாக ஏலம் விட்டு, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை நேரடியாகக் கூட்டுச் சேமிப்புக்குச் உட்படுத்துகிறது.

இந்த சங்கம் காரைநகரில் உள்ள சுமார் 300 மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

***வளங்கள்***

இயந்திரங்கள் மற்றும் எரிபொருள்

வலைகள், எரிபொருள், பழுதுபார்ப்பு மற்றும் உபகரணங்களின் விலை உயர்வு. இயந்திரங்கள் மற்றும் பனிக்கட்டி ஆலைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல். கடந்த சில ஆண்டுகளில், பல உள்ளூர் உயர்த்தியுள்ளன. இதன் விளைவாக, மீனவர்களால் படகுகளால் கடலுக்குச் செல்ல முடியவில்லை.

இயற்கை வளங்கள்

பரந்த உலகளாவிய காலநிலை மாற்றத்தின் போக்குகளால், கடலோரச் சூழல் அமைப்புகள், சதுப்புநிலக் காடுகள் மற்றும் மீன் இனப்பெருக்க இடங்கள் பரவலாக அழிக்கப்பட்டுள்ளன. மேலும், பிளாஸ்டிக் மற்றும் கழிவுகளால் ஏற்படும் மாசுபாடு போன்ற உடனடியான மனிதனால் உருவாகக்ப்பட்ட பிரச்சினைகள், கடலோர நிலப்பரப்புகளையும் மீன்பிடித் தளங்களையும் அச்சுறுத்துகின்றன. இந்த மாற்றங்களின் சில குறிகாட்டிகளாக, சில குறிப்பிட்ட உயிரினங்களின் (கடல் வெள்ளரிகள், காயல் உயிரினங்கள்) எணணிக்கை குறைந்து வருவதை மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

நிலம் மற்றும் இடங்கள்

வட மாகாணத்தின் கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் இருப்பு, உள்ளூர் மீனவர்களின் பாதுகாப்புக்கும் வாழ்வாதாரத்திற்கும் அச்சுறுத்தலாக விளங்குகிறது. இந்த இழுவைப் படகுகள் உள்ளூர் மீன்பிடி வலைகளை அழிக்கின்றன, அதற்காக எந்த இழப்பீடும் வழங்கப்படுவதில்லை. மேலும், ஒரு பகுதியில் இழுவைப் படகுகள் அதிக அளவிலான மீன்களைப் பிடிப்பதால், உள்ளூர் மீனவர்கள் பிடிக்கக்கூடிய மீன்களின அளவையும் அவை குறைக்கின்றன. பேச்சுவார்த்தை மேடைகளில் சமூகத்தினரையும் ஈடுபடுத்தும் எல்லை கடந்த மீன்பிடி உரையாடல் வழிமுறைகளின் தேவை பங்கேற்பாளர்களால் முன்வைக்கப்பட்டது.

சுற்றுலாத் திட்டங்கள், மணல் அகழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் கடலோரச் சீரழிவால் மீனவ சமூகங்கள் பாதிக்கப்படுகின்றன. நில உரிமைகள் தொடர்பாக சுற்றுலா அதிகாரிகளுடன் மோதல் நிலவுகிறது, இது சில சமயங்களில் அவர்களின் பாரம்பரிய மீன்பிடித் தளங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துகிறது.

வீட்டு வளங்கள்

இவற்றில் பெரும்பாலும் தங்கம், சிறு கால்நடைகள், வீட்டுத் தோட்டங்கள், தச்சுத் திறன்கள் ஆகியவற்றில் செய்யப்படும் சேமிப்புகளும், வெளிநாட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்களிடமிருந்து வரும் பண அனுப்பல்களும் அடங்கும்.

சேமிப்பு மற்றும் பாதுகாப்பு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மிக முக்கியமான குறைபாடுகளில் ஒன்று சேமிப்பு ஆகும். மீனவர்களிடமோ அல்லது மீனவ சங்கங்களிடமோ சொந்தமாக பனிக்கட்டி ஆலைகளோ அல்லது குளிர்பதனக் கிடங்குகளோ இல்லாததால், மீன்களைச் சேமிக்கும் வழக்கம் இல்லை. முறையான குளிரூட்டல் இல்லாததால் மீன்களின் தரம் குறைகிறது, இதனால் அவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை, யார் வாங்கத் தயாராக இருக்கிறார்களோ அவர்களுக்கு முன்கூட்டியே விற்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள்.

மீன்கள் மற்றும் பிற கடல் உணவுப் பொருட்களை உப்பு போட்டு உலர்த்திப் பதப்படுத்தும் முறைகள் உள்ளன. பின்னர் அவை வீட்டிலேயே உட்கொள்ளப்படுவதுடன், சந்தைகளிலும் விற்கப்படுகின்றன.

*நிறுவனங்கள்*

மீன்வளக் கூட்டுறவு சங்கங்கள் இருந்தாலும், அவற்றின் செயல்திறன் பெரிதும் வேறுபடுகிறது. பல சங்கங்கள் உரிமங்களை வழங்குவது அல்லது பொதுவான விடயங்களைப் பற்றி விவாதிப்பதுடன் நின்றுவிடுகின்றன. உறுப்பினர்களுக்கு அவை பலவீனமான நடைமுறை ஆதரவையே அளிக்கின்றன. பயிற்சி, விழிப்புணர்வு மற்றும் சட்ட உதவிக்காக அரசு சாரா நிறுவனங்களை (MONLAR, LST,NAFSO, MSEDO) சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

வாழ்வாதாரப் பிரச்சினைகளைக் கையாள்வதில் மீன்வள அதிகாரிகள் அல்லது ஆய்வாளர்களின் ஈடுபாடு குறைவாகவே இருப்பதாக மீனவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும், விரிவாக்கச் சேவைகள் வடிவில் கல்வி அல்லது தொழில்நுட்பத்தை வழங்குவதில் இந்த அதிகாரிகளுக்கும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் இடையே எந்த ஒருங்கிணைப்பும் இல்லை எனவும் குறிப்பிடுகின்றனர்.

மன்னார் மற்றும் மட்டக்களப்பில், கூட்டமைப்புகள் அல்லது சங்கங்கள் சில சந்தைப்படுத்தல் முறைகளைக் கட்டுப்படுத்துகின்றன, ஆனால் வெளிப்படைத்தன்மை குறைவாகவே உள்ளது.

*உழைப்பு*

மீன்பிடித் தொழில் முதன்மையாகக் குடும்ப அடிப்படையிலானது. கூலித் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படும்போது, "பங்கு" முறை போன்ற இலாபப் பகிர்வு மாதிரிகள் பொதுவானவையாக காணப்படுகின்றன, உதாரணமாக, ரூ. 70,000 வருமானத்தில் பாதி படகு உரிமையாளருக்கும், மீதி குழுவினரிடையேயும் பிரிக்கப்படுகின்றது.

வலைகளை உலர்த்துதல், தரம் பிரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் சரிசெய்தல் ஆகியவற்றில் பெண்களின் உழைப்பு மையமாக உள்ளது, ஆனால் தலைமைத்துவ அமைப்புகளில் அது குறைத்து மதிப்பிடப்படுவதோடு, அரிதாகவே அங்கீகரிக்கப்படுகிறது. பல மாவட்டங்களில் உள்ள கலாச்சார நெறிமுறைகள், பெண்கள் படகுகளைக் கையாளுவதையோ அல்லது இயக்குவதையோ கட்டுப்படுத்துகின்றன.

நுகர்வு  மீனவர்கள் வருடத்தின் பாதி காலத்திற்கு புதிய மீன்களை உட்கொள்கின்றனர். மீன்பிடிக்காத காலங்களில், குடும்பங்கள் சந்தையில் வாங்கும் மீன்கள், உலர்த்தப்பட்ட மீன்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கப்படும் காய்கறிகளைச் சார்ந்திருக்கின்றன. உயர்ந்து வரும் சந்தை விலைகள் சில குடும்பங்களின் வாங்கும் திறனைக் குறைத்துள்ளன. மேலும் குளிரூட்டும் வசதி இல்லாதது, வீடுகளில் உணவு சேமித்து வைப்பதைக் கட்டுப்படுத்துகிறது.

## 3. பிற பயிர்கள்

காய்கறிகள், பழங்கள், தானியங்கள், மசாலாப் பொருட்கள் - நெல் பயிர்செய்கையை கணக்கில் கொண்ட பிறகு, இந்தப் பெரும் குழுக்கள் "ஏனைய உணவுப் பயிர்கள்" என வகைப்படுத்தப்படுகின்றன. இவை பல்வேறு அளவுகளில், சில சமயங்களில் பயிர்களின் கலவையாகவும் பயிரிடப்படுகின்றன. மேலும், பதுமையான உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திகள் பல வடிவங்களில் சந்தைக்குத் தயாராக இருப்பதை உறுதி செய்வதற்காக மதிப்புக்கூட்டல் பணிகளை மேற்கொள்கின்றனர்.

மொனராகலை, தங்கல்லை, யாழ்ப்பாணம், தெனியாய, அம்பாறை, கண்டி மற்றும் ஹட்டன் ஆகிய இடங்களில் பல்வேறு உணவுப் பயிர்களைப் பயிரிடும் சமூகங்களை ஆணைக்குழு சந்தித்தது.

*உற்பத்தி*

ஆணையத்தில் பங்கேற்ற விவசாயிகள், தட்டைப்பயறு, மிளகாய், கத்தரிக்காய், தானியங்கள், தேங்காய், வாழைப்பழம், சேனைக்கிழங்கு மற்றும் மிளகு, இலவங்கப்பட்டை போன்ற தோட்டப் பயிர்கள் உட்பட பலதரப்பட்ட பயிர்களைப் பயிரிடுகின்றனர். காய்கறிகளைப் பொறுத்தவரை, அவர்கள் வசிக்கும் இடத்தைப் பொறுத்து வெங்காயம், லீக்ஸ், காரட், முள்ளங்கி, உருளைக்கிழங்கு மற்றும் பூசணிக்காய் ஆகியவற்றை பயிரிடுகின்றனர். பல விவசாயிகள் சிறு தோட்ட பயிர்செய்கை, சேனைப் பயிர்செய்கை, ஒருங்கிணைந்த கலப்பு விவசாயம் மற்றும் விவசாய காடு வளர்ப்பு முறைகளை மேற்கொள்கின்றனர்.

காய்கறி விவசாயிகள், தங்கள் பயிர்களுக்கு பெரும்பாலும் இரசாயன பசளைகளையே பயன்படுத்துவதாகவும், அவற்றைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். அவர்கள் மெதுவாக இயற்கை விவசாயப் பயிர்களை உற்பத்தி செய்யும் முறைக்கு மாறி வருகின்றனர். அவர்கள் உற்பத்தி செய்யும் குறைந்த அளவிலான இயற்கை உற்பத்திகளை வாங்கியவர்கள், இரசாயன முறையில் விளைந்த பொருட்களை விட அவை சுவையாக இருப்பதாகக் கூறுகின்றனர். அவர்கள் வளர்க்கும் இயற்கை உற்பத்திகளின் அளவு, அவற்றை தங்கள் வீடுகளில் பயன்படுத்த அனுமதிக்கிறது. இருப்பினும், அவர்களால் அதிக அளவில் உற்பத்தி செய்ய முடியவில்லை. தற்போதைய நிலையில் சந்தை விரிவடைந்தால், அவர்கள் சிரமப்படுவார்கள்.

ஊவா பிராந்தியத்தில் சோளப் பயிர்ச்செய்கை பெரும் பங்கு வகிக்கிறது. கலப்பின வகைகளுடன் ஒப்பிடும்போது பாரம்பரிய அரிசியின் நன்மைகளைப் போலவே, உள்ளூர் சோளத்தை வளர்க்கவும் குறைவான பசளையே தேவைப்படுகிறது. எனவே, சில விவசாயிகள் இந்த உள்ளூர் வகைகளைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர்.

ஒருங்கிணைந்த கலப்பு விவசாயம் என்பது பல பிராந்தியங்களில் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். ஒன்றுக்கொன்று “பொருந்தும்” பயிர்களை வளர்ப்பதில் உத்தியுடன் செயல்பட வேண்டியதன் அவசியத்தையும், பயிர்களில் ஏற்படக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் விவசாயிகள் விளக்குகின்றனர். மாறுபட்ட பயிர்களுக்கு வெவ்வேறு பசளைத் தேவைகள் இருப்பதால், அவை கவனமாகச் சமநிலைப்படுத்தப்பட வேணடும். பயிர் பன்முகத்தன்மை மண்ணுக்கு நன்மை பயக்கும். மேலும், கிடைக்கும் விளைச்சலைப் பொறுத்து தேவை மாறுவதாக விவசாயிகள் உணர்வதால், ஒவ்வொரு பருவத்திலும் தாங்கள் பயிரிடும் பயிர்களை மாற்றி, பலதரப்பட்ட உற்பத்திகளை பயிரிடுவது அவர்களுக்கும் நன்மை அளிக்கிறது.

என் பெயர் தேவனந்தன் சத்யவதனி, நான் முள்ளிமோட்டை கிராமத்தைச் சேர்ந்தவன் - நான் முள்ளிமோட்டை விவசாய உற்பத்தியாளர் கூட்டமைப்பின் உறுப்பினராகவும் இருக்கிறேன்.

மீள்குடியேற்றக் காலத்தில், எங்கள் குடும்பத்திற்கு அரை ஏக்கர் நிலம் கிடைத்தது. நாங்கள் அந்த நிலத்தைக் குடும்ப உறுப்பினர்களிடையே மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கொண்டோம். ஒரே ஒரு பயிரில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, நாங்கள் அனைவரும் சேர்ந்து பலவகைப் பயிர்களைப் பயிரிட முடிவு செய்தோம். எங்கள் வீட்டைச் சுற்றி, நாங்கள் கத்தரிக்காய், மிளகாய், போன்ஜி, கீரைகள், காய்கறிகள், மா, பலா, கொய்யா, சீத்தா, நெல்லி, வாழை, நாவல் மற்றும் மூலிகைச் செடிகளை பயிரிடுகிறோம். எங்களிடம் சுமார் 30 தென்னை மரங்களும் உள்ளன. அதோடு, நாங்கள் கோழிகள், ஆடுகள் மற்றும் மாடுகளையும் வளர்க்கிறோம்.

முன்னர், பல குடும்பங்கள் முக்கியமாக ஒரே ஒரு பயிரையே நம்பி இருந்தன. ஆனால், பல பயிர் சாகுபடி செய்வது நம்மை மிகவும் பாதுகாப்பானதாக ஆக்குகிறது என்பதை நாம் கற்றுக்கொண்டோம். ஒரு பயிர் விளைச்சல் தவறினாலோ அல்லது விலைகள் குறைந்தாலோ, பொருளாதார ரீதியாக நம்மை ஆதரிக்க நம்மிடம் மற்ற பயிர்கள், பழங்கள் மற்றும் கால்நடைகள் உள்ளன. இதன் பொருள், கடைகளில் இருந்து காய்கறிகளையோ உணவையோ வாங்குவதற்கு நாம் அதிக பணம் செலவழிக்க வேண்டியதில்லை என்பதாகும், ஏனென்றால் நமக்குத் தேவையானவற்றில் பெரும்பாலானவற்றை நமது சொந்த நிலத்திலிருந்தே பெற்றுக்கொள்கிறோம் என்பதாலாகும்.

வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையில், விலங்குகள் மற்றும் என் கணவரின் உழைப்பு ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் அனைத்தும் சேர்ந்து எங்கள் குடும்பம் முன்னேற்றமடைய உதவுகிறது - பல பயிர் சாகுபடி மூலம், நாங்கள் ஆரோக்கியமான மற்றும் அதிக சுதந்திரமான வாழ்க்கை முறையை உருவாக்கிக்கொண்டு, எங்கள் மன உறுதியையும் குடும்ப வருமானத்தையும் மேம்படுத்தியுள்ளோம்.

***மதிப்பினைக் கூட்டல்***

உணவு அல்லாத பயிர்களைச் சிறு அளவில் பயிரிடுவோர் மற்றும் உற்பத்தியாளர்களால் பெருமளவிலான மதிப்புக்கூட்டல் நடைபெற்று வருகிறது. அவர்கள் தங்களது அல்லது தங்களது சங்கத்தின் திறனைப் பொறுத்து, வெவ்வேறு அளவுகளில் இதைச் செய்கின்றனர். தங்கள் உறுப்பினர்களிடையே போதுமான பணத்தைத் திரட்ட முடிந்த சில குழுக்கள் ஆலைகளை வாங்குகின்றன. அவர்கள் இப்போது அரிசி மற்றும் தானியங்களை மாவாக அரைத்து, அவற்றை கடைகளிலோ அல்லது உள்ளூர் உணவைத் தயாரிப்பவர்களுக்கோ நேரடியாக விற்கின்றனர். ஏனையவர்களுக்கு அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் இதை வாங்க முடிந்தது, மேலும் குறித்த இயந்திரம் ஒரு சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களாலும் பயன்படுத்தப்படுகிறது.

கடலை மற்றும் தானியங்கள் சுத்தம் செய்யப்பட்டு பதப்படுத்தப்படுகின்றனர். அவற்றில் சில தின்பண்டங்கள் மற்றும் மாவு தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. நுகர்வுக்காகப் பயன்படுத்துவது மற்றும் விற்பனை செய்வது தவிர, தேங்காய்கள், எண்ணெய், நார் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. பழங்கள் உலர்த்தப்பட்டு அல்லது பொரித்து பொரியல்களாக கடைகளில் விற்கப்படுகின்றன, ஏனையவை சட்னி அல்லது ஜாமாகத் தயாரிக்கப்படுகின்றன. சிறு குழந்தைகளை இலக்காகக் கொண்ட திரிபோ'ா அல்லது ஆரோக்கியமான தானியக் கலவைகளைத் தயாரிப்பவர்களுக்கு சோளம் வழங்கப்படுகிறது. சமையலறைக் கழிவுகள் அவற்றின் பயிர்ச்செய்கைக்கு இயற்கை உரங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

***சந்தைப்படுத்தல்***

பெரும்பாலான விவசாயிகள் வாராந்திரச் சந்தைகள், கிராமக் கடைகள் மற்றும் சிறு அளவிலான நேரடி விற்பனை மூலம் விற்பனை செய்கின்றனர். சிலர் இணையவழி சந்தைப்படுத்துதலுக்காக சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

காய்கறி விவசாயிகள் உள்ளூர் கடைகளுக்கும், பொருளாதார மையங்களுக்கும் மொத்தமாக விற்பனை செய்வதன் மூலம் வருமானம் ஈட்டுகின்றனர். எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் நாடு முழுவதும் பயிரிடப்படும் காய்கறிகளின் அளவும், அவை புத்துணர்ச்சியுடன் இருககும் குறுகிய காலமும், விவசாயிகள் வழக்கமாக எவ்வளவு சம்பாதிக்க முடியும் என்பதைத் தீர்மானிக்கிறது.

ஒரே பகுதியில் பல விவசாயிகள் இருப்பதால், அவர்களால் தங்கள் விளைபொருட்களை இடைத்தரகர்களுக்கோ அல்லது கடைகளுக்கோ விற்க முடியாத சிக்கல்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர்.

உற்பத்தியின் பெரும்பகுதி தம்புள்ளை பொருளாதார மையத்திற்கு அனுப்பப்படுகிறது. மத்திய மலைப்பகுதி விவசாயிகளுக்கு, பண்டாரவளையும் ஒரு முக்கிய இடமாகும். நுவரெலியா மாவட்டத்தில் காய்கறி விவசாயிகள் அதிக அளவில் பரவிக் காணப்படுவதால் பல விவசாயக் குழுக்கள் தங்கள் உற்பத்திக்காக அப்பகுதியில் ஒரு மையம் அமைக்கப்பட வேணடும் என்று கிராம அலுவலகரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இடைத்தரகர்கள் விவசாயிகளிடமிருந்து பயிர்களைக் குறைந்த விலையில் கொள்முதல் செய்கின்றனர், பெரும்பாலும் அவை பயிரிடப்பட்ட இடத்திலிருந்தே சேகரிக்கப்படுகின்றன. இந்த மையங்களில் உற்பத்திப் பொருட்கள் அதிக விலைக்கு விற்கப்படுவதால், காய்கறி விற்பனையின் முழு லாபமும் விவசாயிக்குக் கிடைப்பதில்லை. முகவர்கள் மற்றும் வணிகர்களால் தன்னிச்சையாக நிர்ணயிக்கப்படும் விலைகளுக்குப் பதிலாக, நியாயமான விலையில் கொள்முதலைச் செய்வதில் அரசுக்கு வலுவான பங்கு இருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

அனுராதபுர மாவட்டம், மரதன்கடவலவில், மூன்று உற்பத்தியாளர் சங்கங்கள் ஒன்றிணைந்து மரனத்கடவலை விவசாய உற்பத்தியாளர் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன - ராஹுல மாவத்த உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பில் காய்கறி மற்றும் நெல் விவசாயிகள் உள்ளனர், அவர்களில் பெரும்பாலோர் இப்போது பாரம்பரிய நெல் ரகங்களைப் பயிரிடுவதுடன், இயற்கை முறையிலான சேதன பசளையில் சாகுபடி செய்கின்றனர் - நாவக்குளம் உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பில் முக்கியமாக மாடுகள் மற்றும் ஆடுகளை வளர்க்கும் பால் பண்ணை விவசாயிகள் உள்ளனர் - பால் பொருட்களைத் தவிர, அவர்கள் ஜீவாம்ருதம் மற்றும் மண்புழு உரம் போன்ற இயற்கை சேதன உள்ளீடுகளைத் தயாரிப்பதுடன் அதை மற்ற இரண்டு சங்கங்களின் நிலங்களில் பயன்படுத்துவதற்காக வழங்குகிறார்கள் - மூன்றாவது சங்கமான ஹல்மில்லேவ விவசாய உற்பத்தியாளர் கூட்டமைப்பு, முக்கியமாக மதிப்புக்கூட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. அவர்கள் மசாலா கலவைகள், ஊறுகாய்கள் போன்றவற்றைத் தயாரிக்கிறார்கள் - மேலும் அவர்கள் மரதன்கடவலவில் உள்ள கூட்டமைப்பின் சில்லறை விற்பனை மையமான மரதன்கடவல சூழலியல் விவசாய உற்பத்தியாளர் மையத்தையும் நிர்வகிக்கிறார்கள்.

இந்தக் கூட்டமைப்பில் சுமார் 70 முதல் 80 உறுப்பினர்கள் உள்ளனர், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்களாவர். மூன்று சங்கங்களில் ஒவ்வொன்றும் அதன் சொந்த உள்ளக சேமிப்பு முறையைப் பராமரிக்கும் அதே வேளையில், கூட்டமைப்பு ஒட்டுமொத்தமாக ஒரு பொது சேமிப்பு நிதியையும் பராமரிக்கிறது.

***வளங்கள்***

<u>நிலம்</u>

நாட்டின் பல பகுதிகளில் நெல் விவசாயிகளுக்கு அவர்களின் நில உரிமையில் “எந்தப் பிரச்சினையும் இல்லை” என்றாலும், சோளம் மற்றும் பிற உற்பத்தியாளர்களுக்கு நிலைமை அவ்வாறு இல்லை என்று விவசாயிகள் உணர்கிறார்கள்.

பரந்த ஏக்கர் பயிர்செய்கை நிலங்கள் இப்போது பாதுகாக்கப்பட்ட வனமாக வரையறுக்கப்படுவது அவர்கள் குறிப்பிடும் ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக காணப்படுகின்றது.. இது, பயிரிடுவதற்கும் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அவர்களின் திறனைக் கட்டுப்படுத்துகிறது. இந்த நிலப் பாதுகாப்புகள் பெரும்பாலும், மக்கள் பல தசாப்தங்களாக நிலத்தைப் பயிரிட்டு வளப்படுத்தி வரும் பகுதிகளில் வரையறுக்கப்படுகின்றன. பாதுகாக்கப்பட்ட வனப்பரப்பின் விரிவாக்கம், பயிர்செய்கைக்கு பயன்படுத்தப்படும் நிலங்களில் மக்கள் வீடுகளைக் கட்ட ஊக்குவிக்கிறது. இது, விவசாயிகள் எங்கு உற்பத்தி செய்ய முடியும் என்பதைக் கட்டுப்படுத்தும் ஒரு சுழற்சியைத் தொடங்குகிறது.

தனியார் நபர்களால் குடியிருப்பு கட்டுமானம் மற்றும் மேம்பாட்டிற்காக நிலம் விற்பனை செய்யப்படுவது மற்றொரு கட்டுப்படுத்தும் காரணியாக காணப்படுகின்றது. தாங்கள் தங்கள் சொந்தப் பயிரச்செய்கையை விரிவுபடுத்த விரும்புவதாகவும், ஆனால் நிலம் இந்த நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதால் தங்களால் அதைச் செய்ய முடியவில்லை என்றும் விவசாயிகள் கூறினர். யாழ்ப்பாணத்தில் நேர்காணல் செய்யப்பட்ட விவசாயிகள், இராணுவமயமாக்கல் தங்கள் பயிர்ச்செய்கையையும் வாழ்வாதாரத்தையும் எவ்வாறு பாதிக்கிறது என்பதை விளக்கினர். படைவீரர்கள், தற்போது படை முகாம்களுக்குள் இருக்கும் பாரம்பரிய குடிமக்கள் நிலங்களில் பயிர்களைப் பயிரிட்டுள்ளனர். மக்கள் பயிரிட்டு வந்த இந்த நிலங்கள் இப்போது அவர்களின் கைக்கு எட்டாத தூரத்தில் உள்ளன. ஆனால், உள்ளூர் உற்பத்தியாளர்களால் வாங்க முடியாத விலையில், உள்ளூர் சந்தையில் இவற்றை விற்பதன் மூலம் படைகள் இலாபம் ஈட்டுகின்றன.

தேயிலைத் தோட்டங்களில் வசித்து, அவற்றிற்கு அருகில் விவசாயம் செய்யும் மலையகத் தமிழ் விவசாயிகள், தங்கள் உற்பத்திகள் மீது தோட்ட நிர்வாகம் செலுத்தும் கட்டுப்பாடு குறித்துப் பேசினர். சில தோட்டங்கள், குறிப்பாக ஒரு குடும்பம் தலைமுறை தலைமுறையாக அங்கு பயிரிட்டு வந்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் காய்கறி பயிர்ச்செய்கை செய்ய அனுமதிக்கின்றன. ஏனையத் தோட்டங்களில், நிர்வாகம் தொழிலாளர்களைக் கூரந்து கண்காணித்து, லயன் அறைகளுக்கு

அருகில் அவர்கள் வளர்க்க முயற்சிக்கும் தென்னை அல்லது வாழை மரங்களை வெட்டுவதற்காக ஊழியரக்ளை அனுப்புகிறது.

இராணுவமயமாக்கல் மற்றும் தோட்ட நிர்வாகக் கட்டுப்பாடு ஆகியவை இந்த அறிக்கையின் ஒரு தனி அத்தியாயத்தில் விவாதிக்கப்படும்.

விதைகள்

மலையக விவசாயிகள், தாங்கள் நீண்ட காலமாகப் பயிரிட்டு வரும் கலப்பின விதைகள் உள்ளூர் ர் மண்ணில் வெற்றிகரமாக விளைவதில்லை என்பதைக் காண்கின்றனர். சிறு விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதைகளைத் தாங்களே உற்பத்தி செய்து, ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே அவற்றை வாங்குகின்றனர். மொனராகலை மற்றும் வட-மத்திய மாகாணத்தின் சில பகுதிகளில் உள்ளூர் விதைகளின் பயன்பாடு வலுவாக உள்ளது, அங்கு விதை பாதுகாப்பு குழுக்கள் செயல்படுகின்றன. அவர்கள் பாரம்பரிய வகைகளைப் பயிரிட்டுப் பாதுகாத்து, அவற்றை வலையமைப்புகளுக்கும் மற்ற விவசாயிகளுக்கும் தங்கள் சொந்த பயிர்ச்செய்கையில் முயற்சிப்பதற்காகப் பகிரந்து கொள்கின்றனர். மேலும், சூழலியல் விவசாய முறைகளுக்கு மாறுவதையும் ஊக்குவிக்கின்றனர்.

மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள விக்கல்ப்பனீ தேசிய மகளிர் சங்கம், இருபது ஆண்டுகளுக்கும் மேலாக, பெண்கள் தலைமையிலான விதை பாதுகாப்பில் சிறப்பு கவனம் செலுத்தி, விவசாயிகளின் விதை இறையாண்மை உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வருகிறது.

விக்கல்ப்பனி உறுப்பினர்கள், வீட்டிலிருந்தே மற்றும் சமூக அடிப்படையிலான விதை வங்கிகளை நடைமுறைப்படுத்துவதோடு, தங்களுக்குள் ஒரு கூட்டு விதை பரிமாற்ற முறையையும் செயல்படுத்துகின்றனர். மேலும், அவர்கள் விவசாயத் திணைக்களத்தின் கீழ், 2003-ஆம் ஆண்டின் விதைச் சட்டம் எண் 22-இன் கீழ் முறையாகப் பதிவுசெய்யப்பட்ட தங்களது விதை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் சங்கம் மற்றும் விதை உற்பத்திப் பண்ணைகளையும் நிர்வகிக்கின்றனர். மொனராகலை மற்றும் புத்தலையைச் சுற்றியுள்ள உறுப்பினர்களிடமிருந்து விதைகள் பெறப்படுகின்றன.

இந்த முயற்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து தரமான விதை உற்பத்தியை உறுதி செய்வதோடு, எதிர்கால சந்ததியினருக்காக உள்ளூர் விதை இரகங்களைத் தீவிரமாக ஊக்குவித்துப் பாதுகாக்கவும் செய்கின்றன.

ராஜங்கனை உள்ளூர் விதை பாதுகாவலர்கள் அடிப்படை விவசாய விளைபொருள் சந்தைப்படுத்தல் சங்கம், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் ராஜங்கனை பகுதியின் விதைகள் மற்றும் மரபணுத் தொகுப்பைப் பாதுகாத்தல் ஆகிய பொதுவான நோக்கங்களுடன் நிறுவப்பட்டது. இச்சங்கத்தில் தற்போது 60 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் கூட்டாக அரிசி, உருளைக்கிழங்கு, பருப்பு வகைகள், காய்கறிகள் முதல் பல்வேறு வகையான வாழைகள் வரை பலதரப்பட்ட ரகங்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

அதன் இளம் உறுப்பினர்களில் ஒருவரான ரசிக்க என்ற விவசாயியும் கல்வியாளரும், இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட 80 நெல் ரகங்களைத் தனிப்பட்ட முறையில் பாதுகாத்துள்ளார். அவர் சங்கத்துடன் இணைந்து, நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுடன் விதைப் பரிமாற்ற நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கேற்று, இந்த நெல் ரகங்களைப் பாதுகாக்கவும் பிரபல்யப்படுத்தவும் உதவுகிறார்.

நீர்

விவசாயிகளின் பதில்களில் நெல் பயிர்செய்கைக்கு அளிக்கப்படும் முன்னுரிமை தெளிவாகத் தெரிகிறது. பெரும்பாலான வளங்கள் "முக்கியப் பயிருக்கு" திருப்பி விடப்படும்போது, காய்கறி உற்பத்திக்கு அவ்வாறு இல்லை என்று அவர்கள் உணர்கிறார்கள். மழைக்காலம் அல்லாத மற்ற காலங்களில், தம்புள்ளை மற்றும் மொனராகலையில் உள்ள விவசாயிகள், பாசனக் குளங்கள் மற்றும் கால்வாய்களில் இருந்து வரும் நீர் முதன்மையாக நெல் வயல்களுக்கே திருப்பி விடப்படுவதாகக் குறிப்பிட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் உள்ள மழைநீர் சேமிப்புத் தொட்டிகள், பிற்காலப் பயன்பாட்டிற்காக நீரைச் சேமிக்க உதவுகின்றன, ஆனால் இது ஒரு சீரான நடைமுறையாக இல்லை.

நிதி

நேர்காணல் செய்யப்பட்ட விவசாயிகள், பல்வேறு நிதி வழங்குநர்களிடமிருந்து நிதி ஆதாரங்களையும் ஆதரவையும் பெற்றுள்ளனர். அவர்களில் சிலர் நுண்நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று, அந்தக் கடனை மெதுவாகத் திருப்பிச் செலுத்த முயன்று கொண்டிருக்கின்றனர். தங்களைப் போன்ற அதிக இடர் உள்ள தனிநபர்களுக்கு அரசு மற்றும் முறையான வங்கி அமைப்புகள் கடன் வழங்குவதில்லை என்றும், அல்லது கடன் பெற ஏராளமான ஆவணங்கள் தேவைப்படுவதாகவும் அவர்கள் கூறினர். இவற்றை வழங்க முடியாததாலோ அல்லது பணம் அவசரமாகத் தேவைப்பட்டதாலோ, பலர் நுண்நிதி நிறுவனங்களை நாடியுள்ளனர்.

அனைத்து விவசாயிகளும் தங்கள் சமூக மட்டத்தில் சேமிப்புக் குழுக்களில் பங்கேற்றுள்ளனர், கடன் வாங்குவதற்கு முன்பும் அவர்கள் இக்குழுக்களில் அங்கம் வகித்திருந்தனர். இந்தக் குழுக்கள் உறுப்பினர் கட்டணம், மாதாந்திர சேமிப்பு ஆகியவற்றிற்காகச் சிறிய தொகைகளைப் பெறுகின்றன. மேலும், அவர்களின் சேமிப்புத் திறனைப் பொறுத்து ரூ. 1,00,000 வரை கடன்களை வழங்குகின்றன. குடும்ப உறுப்பினர் ஒருவர் இறந்தால் அல்லது உறுப்பினர் நோய்வாய்ப்பட்டால், அவர்கள் நிலையான தொகையையும் வழங்கினர்.

இந்தச் சிறிய குழுக்களில் பல, அடிப்படையில் கூட்டுறவு சங்கங்களாகவே செயல்பட்டன. இருப்பினும், பல குழுக்கள், அதனால் ஏற்படக்கூடிய ஆவணப் பணிகள் மற்றும் கண்காணிப்பு குறித்த தயக்கத்தின் காரணமாகக் கூட்டுறவு சங்கங்களாகப் பதிவு செய்யவில்லை. ஆயினும், அவர்கள் கடன்களுக்கு 0.5மூ போன்ற குறைந்த வட்டி விகிதங்களை வழங்கினர், அதே நேரத்தில் தங்கள் உற்பத்தியின் விற்பனையிலிருந்து கிடைக்கும் லாபம் குழு உறுப்பினர்களிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டது. உறுப்பினர் அல்லாதவர்களும் சற்று அதிக வட்டி விகிதத்தில் இந்தக் குழுக்களிடமிருந்து கடன் பெறலாம்,.

**சேமிப்பு /பாதுகாப்பு**

முறையான சேமிப்பு வசதிகள் இல்லாததால், பெரும்பாலான காய்கறிப் பயிர்களை விரைவாக விற்க வேண்டியுள்ளது. மேலும், உள்ளரங்குகளில் சேமித்து வைக்கப்படும் அரிசியின் வாசனையை நுகரக்கூடிய யானைகளால் ஏற்படக்கூடிய சேதத்தின் காரணமாக, நெல் விவசாயிகள் சந்தையில் அதிக விலை கிடைக்கும்போது பயன்படுத்துவதற்காகச் சேமித்து வைக்காமல், உடனடியாக **அரிசியை விற்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள்.**

***நிறுவனங்கள்***

பல்வேறு பிராந்தியங்களில், விவசாயத் துறைகளில் உள்ள அரசு அதிகாரிகளின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. விவசாயிகள் தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ளவும், மேலும் நீடித்த நிலைத்தன்மை கொண்ட முறைகளை முயற்சி செய்யவும் விரும்பும்போது, விவசாய அதிகாரிகள் அதே முறைகளைப் பயன்படுத்தவும், இரசாயன பசளைகளைப் பயன்படுத்தவும் தொடர்ந்து அறிவுறுத்துவதை அவர்கள் காண்கிறார்கள். அரசு சாரா அமைப்புகள், விவசாய சூழலியல் பயிற்சித் திட்டங்கள், சமூகக் கடன் திட்டங்கள் மற்றும் கடனில் உள்ளவர்களுக்கான சட்ட உதவி ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கின்றன. மேலும், மாகாணங்கள் முழுவதும் உள்ள விவசாயிகள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ளவும், விதைகளைப் பகிரந்துக்கொள்ளவும், ஒருவருக்கொருவரின் விவசாய அல்லது உற்பத்தி நடைமுறைகளிலிருந்து கற்றுக்கொளள்வும் அவை வலைப்பினல்களை உருவாகக்கின்றன.

சுய கற்றல் என்பது பல உற்பத்தியாளர்களுக்கு அறிவின் முக்கிய ஆதாரமாக இருந்து வருகிறது. இது யூடியூப் காணொளிகளைப் பார்ப்பது, அந்த முறைகளைத் தாங்களே முயற்சி செய்வது மற்றும் ∴அல்லது பிற விவசாயக் குழுக்களுடன் கலந்தாலோசிப்பது ஆகியவற்றின் மூலம் நிகழ்கிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் அல்லது வலைப்பின்னல்கள் மூலம் பணிபுரியும் விவசாயிகளிடையே அறிவுப் பகிர்வு மற்றும் விதைப் பகிர்வு ஆகியவை அவர்களின் அறுவடையை மேம்படுத்த உதவுகின்றன.

***உழைப்பு***

அனைத்துப் பகுதிகளிலும் உழைப்புப் பகிர்வு முறைகள் உள்ளன. இவை, விவசாயிகள் ஆட்களை வேலைக்கு அமர்த்துவதற்குப் பதிலாக, தங்களுக்குள் வேலைகளைப் பரிமாறிக்கொள்ள அனுமதிக்கின்றன. உற்பத்தி, விதை பாதுகாப்பு மற்றும் சூழலியல் விவசாயம் ஆகியவற்றில் பெண்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இருப்பினும், ஒரு நாள் விவசாய உழைப்பிற்கு வழங்கப்படும் ஊதியத்தில் ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது. ஆண்களை விட பெண்களுக்குக் குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது.

விவசாயத்திலிருந்து இளைஞர்கள் இடம்பெயர்வது, ஒரு குறிப்பிடத்தக்க தொழிலாளர் சவாலாகவும், உண்மையில் உணவு உற்பத்தியின் எதிர்காலத்திற்கே ஒரு பெரும் சவாலாகவும் உள்ளது. இது இரண்டு வடிவங்களில் நிகழ்கிறது. முதலாவதாக, இளைஞர்கள் வேலை வாய்ப்புகளைத் தேடி நகர்ப்புறங்களை நோக்கிச் செல்கின்றனர். இரண்டாவதாக, விவசாயப் பகுதிகளுக்கு அருகிலேயே இருக்க விரும்பும் இளைஞர்கள், பயிர்செய்கையுடன் தொடர்பில்லாத வேலைகளைத் தேடிச் செல்கின்றனர்.

சவால்களில் அடங்குபவை உழைப்புப் பகிர்வு முறைகளுக்கு முறையான அங்கீகாரம் அளிக்கவும், NVQ-நிலை கற்கைகள் மூலம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

***நுகர்வு***

விவசாயிகள் தங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பெரும்பாலான பொருட்களை உட்கொள்கிறார்கள், மேலும் குழுக்களுக்குள் பொருட்களைப் பரிமாறிக்கொள்கிறார்கள். புல்வகைப் பயிர்களைப் பயிரிடுபவர்கள், தங்கள் குடும்பத்தின் பெரும்பாலான ஊட்டச்சத்துத் தேவைகளைத் தங்கள் சொந்த பயிர்ச்செய்கையில் இருந்து பூர்த்தி செய்துக்கொள்ள முடிகிறது.

இளம் தலைமுறையினர் கடைகளில் வாங்கும் உணவுகளையே விரும்புகிறார்கள், இதை விவசாயிகள் ஒரு கலாச்சாரச் சவாலாகக் கருதுகின்றனர். உள்ளூர் உற்பத்திகளின் நன்மைகள் குறித்த பிரச்சாரங்களும் விழிப்புணர்வும், உள்ளூர் பொருளாதாரத்திலிருந்து டொலர் வெளியேறுவதைக் கட்டுப்படுத்துவதோடு, விவசாயிக்கு அதிக செல்வத்தையும் ஈட்டித் தரும் என்று சிலர் குறிப்பாகக் கூறுகின்றனர்.

## 4. உணவு உற்பத்தியுடன் தொடர்புடைய பிற குடும்ப வாழ்வாதாரங்கள்

***அறிமுகம்***

உற்பத்தியின் ஆரம்பக் கட்டங்களைத் தாண்டி உணவு தயாரித்தல் என்பது இலங்கையில் வீடு முதல் தொழிற்துறை வரை பரவலான ஒரு வாழ்வாதார ஆதாரமாக விளங்குகிறது. தம்புள்ளை, மட்டக்களப்பு, மன்னார் மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளில் உள்ள தனிநபர்களும் கூட்டமைப்புகளும் விவசாயத்தைத் தாண்டி, பதப்படுத்துதல், சேமிப்பு, சந்தைப்படுத்துதல் மற்றும் சமூகப் பரிமாற்ற அமைப்புகள் உள்ளிட்ட உணவு உற்பத்தி முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

**உற்பத்தி**

உற்பத்தி நடவடிக்கைகளில் அரிசி, சம்பல், கலவைகள், ஊறுகாய்கள், எண்ணெய்கள், சவர்க்காரங்கள் ஆகியவற்றைச் சிறு அளவில் பதப்படுத்துதல் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை அடங்கும். இங்கு

குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தியாளர் நெற்பயிர்ச்செய்கை செய்கிறார், வீட்டுத் தோட்டம் பராமரிக்கிறார், மற்றும் கால்நடைகளையும் (பசுக்கள், கோழிகள்) வளர்க்கிறார். வாங்கப்பட்ட நெல் மற்றும் வெளி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட அரைக்கும் சேவைகளைப் பயன்படுத்தி, அரிசி பதப்படுத்துதல் சிறு அளவில் இவரால் மேற்கொள்ளப்படுகின்றது.

பெரும்பாலான குடும்பங்கள் காய்கறிகள், பழங்கள், மூலிகைச் செடிகள் மற்றும் கீரைகளுடன் நடுத்தர முதல் பெரிய அளவிலான வீட்டுத் தோட்டங்களைப் பராமரிக்கின்றன. கோவிட்-19 காலத்திலும், பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போதும் வீட்டுத் தோட்டம் அமைப்பது அத்தியாவசியமாக மாறியதுடன், ஒரு நிலையான வாழ்வாதாரமாகவும் உணவு ஆதாரமாகவும் தொடர்கிறது. தோட்டக்கலையுடன், பல பெண்கள் சிறிய அளவிலான வீட்டு அடிப்படையிலான உணவு உற்பத்தியையும் நடத்துகின்றனர்.

இந்த உற்பத்தியாளர்கள் பல்வேறு அளவுகளில் செயல்படுகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிலர் பெரிய அளவில் தொழிலாளர்களைப் பணியமர்த்தும் திறன் கொண்டவர்களாக இருக்கிறார்கள், மற்றவர்கள் ஒரு குடும்பத்திலிருந்து ஒரு வீட்டில் இயங்கும் நிறுவனமாக இருக்கிறார்கள்.

***மதிப்பினைக் கூட்டல்***

உற்பத்தியாளர்கள் பல்வேறு மதிப்புக்கூட்டுத் தயாரிப்புகளில் ஈடுபட்டு, தேவைப்படும் இடங்களில் அதற்கான சான்றிதழ்கள் அல்லது அனுமதிகளைப் பெற்றுள்ளனர். இந்த உற்பத்தியில் பெரும்பகுதி பெண்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இவர்கள் வீட்டு வேலைகளுக்கு இணையாக, அதிகாலை 3 மணிக்கு எழுந்து இந்த வேலையைச் செய்கிறார்கள். பதப்படுத்துதல்: சிவப்பு மற்றும் வெள்ளை அரிசி, அரிசி மாவு, மருத்துவ இலைப் பொடிகள் உணவுப் பொருட்கள்: உலர்ந்த மீன், சம்பல், ஊறுகாய், பொரியல்கள். சுகாதாரப் பொருட்கள்: மூலிகை தலைமுடி எண்ணெய், இயற்கை மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட சவர்க்காரம் சமைத்த உணவுகள்: வட்டலப்பம், கேக்குகள், முறுக்கு, இடியாப்பம், எள் தின்பண்டங்கள்

காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் களுத்துறை உள்ளிட்ட மாவட்டங்களில் 200-க்கும் மேற்பட்ட பெண் மீனவர்களுடன் இணைந்து செயல்படும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், உள்ளூர் உணவுப் பாதுகாப்பு மற்றும் சிறு அளவிலான உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட மாற்று உணவு முறைச் செயல்பாடுகளை ஊக்குவிக்கிறது. அப்பெண்கள் தங்கள் வீட்டுத் தோட்டங்களையும், மீன் அறுவடையையும் பயன்படுத்தி, நீண்ட காலம் பாதுகாக்கக்கூடியதும் அதிக சந்தை மதிப்புடையதுமான உலர்ந்த மீன்கள், ஊறுகாய்கள், மசாலாப் பொருட்கள் மற்றும் பிற உணவுப் பொருட்களைத் தயாரிக்கின்றனர்.

இந்த முன்னெடுப்பு, பெண்கள் தினசரி மீன் விற்பனையை மட்டுமே சார்ந்திருக்கும் நிலையிலிருந்து விலகி, தங்கள் வருமான ஆதாரங்களைப் பன்முகப்படுத்த உதவியுள்ளது. மேலும், சந்தை விலைகளைக் கட்டுப்படுத்தும் இடைத்தரகர்கள் மற்றும் மீன் வியாபாரிகளால் ஏற்படும் சுரண்டல் அபாயத்தையும் இது குறைத்துள்ளது. தங்கள் சமூகங்களிலேயே உணவைத் தயாரித்துப் பாதுகாப்பதன் மூலம், பெண்கள் தங்கள் குடும்ப வருமானத்தை அதிகரிக்கவும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், உள்ளூர் உணவு அமைப்புகள் மீது அதிகக் கட்டுப்பாட்டை உருவாக்கவும் முடிகிறது. இந்த முன்னெடுப்பு பாரம்பரிய அறிவு, கூட்டு அமைப்பு மற்றும் சமூகம் சார்ந்த பொருளாதார மீள்திறனையும் ஊக்குவிக்கிறது.

***சந்தைப்படுத்தல்***

இந்த உற்பத்தியாளர்கள் பயன்படுத்தும் விற்பனை வழிகள் பலதரப்பட்டவை. கிராமத்தில் உள்ள உள்ளூர் கடைகள், வாராந்திர சந்தைகள், தங்களுக்கு அருகிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக ஒழுங்கு செய்வது அல்லது சிலர் வெளிநாடுகளில் இருந்தும் ஒழுங்கு செய்வது ஆகியவை இதில் அடங்கும். தானியக் கஞ்சி மற்றும் திரிபோ' போன்ற ஆரோக்கியமான உணவுகளைத் தயாரிப்பவர்கள் சில சமயங்களில் தங்கள் தயாரிப்புகளை மருந்தகங்களுக்கும் விற்கிறார்கள். மேலும், பலர் தங்கள் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தவும், தொடர்புகளை ஏற்படுத்தவும், விற்கவும் முகநூல் போன்ற இணையவழி தளங்களைப் பயன்படுத்துகின்றனர். மேலும் விநியோகங்கள் அதிகாலையில் செய்யப்படுகின்றன.

சில சந்தைகளில் வாடிக்கையாளர்களைச் சென்றடைவது குறைவாக உள்ளது, மேலும் உற்பத்தியாளர் தங்கள் பொருட்களை அங்கு கொண்டு சென்று வர அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. இடைத்தரகர்கள் ஒரு சதவீதத்தைப் பிடித்துக்கொள்ளாத நிலையில், ஒழுங்கமைக்கப்பட்ட இடங்கள் இல்லாதது சிறு உற்பத்தியாளர்களுக்கு ஒரு சவாலாக காணப்படுகின்றது.

பெரிய அளவிலான வீட்டு உற்பத்தியாளர்கள் வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையை வழங்க முடிவதால், அவர்களுக்கு அதிக சந்தை அணுகல் கிடைக்கிறது. சிறு உற்பத்தியாளர்களால் இந்த வழியில் தள்ளுபடி செய்ய முடியாததால், அவர்களின் வருமானம் குறைவாகவே உள்ளது.

***வளங்கள்***

<u>அறிவு</u>

உற்பத்தியாளர்கள் சமூக வலைப்பின்னல்கள், தனிபப்ட்ட அனுபவம் மற்றும் மற்ற பெண்களுக்கிடையேயான முறைசாரா அறிவுப் பரிமாற்றங்களைச் சார்ந்துள்ளனர். யேுகுளுமு, மகளிர் கிராம மட்ட வளர்ச்சிச் சங்கங்கள் போனற் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், உள்ளூர் சங்கங்களும் சில சமயங்களில் அத்தகைய உற்பத்தியாளர்களுக்கு சுழற்சி முறையில் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை ஏற்பாடு செய்கின்றன.

<u>நீர்</u>

வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை, அப்பகுதியில் கிடைக்கும் மழையைப் பெரிதும் சார்ந்துள்ளது. மக்கள் ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்ய விரும்பினால், மினசாரம் தேவைப்படும் மோட்டார்களையும் குழாய்களையும் நிறுவ வேண்டியிருக்கும் இது அவர்களின் செலவுச் சுமையை அதிகரிக்கும் ஒரு கூடுதல் செலவாகக் கூடும்.

<u>நிதி</u>

பல்வேறு நிறுவனங்களின் நுண்கடன் வட்டி விகிதங்கள் மிக அதிகமாக, சில சமயங்களில் 17மூ வரை காணப்படுகின்றன. பல உற்பத்தியாளர்கள் தங்களின் முந்தைய கடன்களைத் திருப்பிச் செலுத்த, கடன்களை மீண்டும் மீண்டும் வாங்குகின்றனர். முஸ்லிம் பெண்கள், தங்களின் மத நம்பிக்கைகளுக்கு ஏற்ப, கடன்களை முற்றிலுமாகத் தவிர்ப்பதாகக் கூறினர்.

<u>உடல் ரதீயான வளங்கள்</u>

பதப்படுத்துவதற்கான இயந்திரங்கள் போன்ற பௌதீக வளங்களைப் பொறுத்தவரை உற்பத்தியாளர்கள் ஒரு சவாலை எதிர்கொள்கின்றனர். அரைப்பான்கள், கலப்பான்கள், உலர்த்திகள் அல்லது பிற உபகரணங்களின் செலவைப் பகிரந்துகொள்ளும் திறன் கூட்டுறவுகளுக்கு இருந்தாலும், தனிபப்ட்ட உற்பத்தியாளர்கள் இவ்வகைச் சந்தர்ப்பங்களில் சிரமப்படுகின்றனர்

இந்த உற்பத்தியாளர்களில் பலர், தங்கள் தயாரிப்புகளை உருவாக்குவதற்காக விவசாயிகளிடமிருந்தோ அல்லது மீனவர்களிடமிருந்தோ மூலப்பொருட்களை வாங்குகிறார்கள். விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் காரணமாக, இந்த மூலப்பொருட்கள் மிகவும் விலை உயர்ந்ததாகவோ அல்லது அவர்களால் வாங்க முடியாததாகவோ இருக்கும் காலங்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர்.

*சேமிப்பு*

உற்பத்தியாளர்கள் பொருட்களை வீட்டளவிலேயே சேமித்து வைப்பதால், அவர்களால் உற்பத்தி செய்யக்கூடிய அளவு குறைகிறது. மேலும், தங்களுக்கு வருமானம் தேவைப்படும் பிற்காலத்தில் தங்கள் உற்பத்திகளை வாங்கி வைத்து விற்பனை செய்யவும் அவர்களால் முடிவதில்லை. மூலப்பொருட்களையும், தயாரிக்கப்பட்ட பொருட்களையும் சேமித்து வைப்பது ஒரு சவாலாக உள்ளது.

*நிறுவனங்கள்*

ஆணையத்தில் பங்கேற்ற சிறு உற்பத்தியாளர்கள் அனைவரும், பயிற்சி ஆதரவை வழங்கிய உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அல்லது சமூக அடிப்படையிலான அமைப்புகளுடன் இணைகக்ப்பட்டிருந்தனர். நுசுனுளு மூலமான அவர்களின் வலையமைப்புகள், வாடிக்கையாளர்களையும் தங்கள் உற்பத்திகளையும் விற்பதற்கான இடங்களையும் ஓரளவு அணுக அவர்களுக்கு வழிவகுத்தன. இருப்பினும், இந்த அணுகல் சமமற்றதாக இருப்பதுடன், இத்தகைய ஆதரவைப் பெறுவதற்காக அரசால் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் திட்டங்களைப் பற்றி பலருக்குத் தெரியாததால் இந்த நிலைமை மேலும் சிக்கலாகின்றது.

*உழைப்பு*

இந்த வகை உணவு உற்பத்தி பல்வேறு முறைகளில் மேற்கொள்ளப்படுகிறது. சில இடங்களில், மக்கள் கூட்டுறவுகளை உருவாககி, உணவு அல்லது பதப்படுத்தப்பட்ட பொருட்களை ஒன்றாக உற்பத்தி செய்வார்கள். சற்றே பெரிய அளவில் செயல்படும் மற்றவர்களால், இந்த வேலைக்காகத் தொழிலாளர்களை அமர்த்திக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

ஏனைய சில சமயங்களில், தனிநபர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் தங்கள் வீடுகளில் தாங்களே உற்பத்தியை மேற்கொள்கின்றனர். உதாரணமாக, ஒரு பங்கேற்பாளர், வீட்டில் உள்ள இருவரால் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதால், அதிக வேலைப்பளு ஏற்படுவதாகக் கூறினார். உற்பத்தி மற்றும் வீட்டு வேலைகளைச் சமநிலைப்படுத்த அதிகாலை நேர வேலை அவசியமாகிறது.

வீட்டிலிருந்து உணவு மற்றும் மதிப்புக்கூட்டல் பொருட்களை உற்பத்தி செய்யும் இவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்களே. இதன் மூலம், வீட்டு மற்றும் உற்பத்தி ஆகிய இரண்டு பணிகளிலும் பெரும்பான்மையான உழைப்பை அவர்களே சுமக்கின்றனர். கூலிக்கு ஆட்களை அமர்த்துவதற்கோ அல்லது குழந்தைப் பராமரிப்பிற்கோ நிலையான அணுகல் காணப்படுவதில்லை.

*நுகர்வு*

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அரிசி, சம்பல், ஊறுகாய் மற்றும் பால் பொருட்கள் வீடுகளில் உட்கொளள்ப்படுவதோடு, அண்டை வீட்டாருக்கும் விற்கப்படுகின்றன. பங்கேற்பாளர்கள், உணவுப் பொருட்களின் விலை, குறிப்பாக சத்தான உணவு மற்றும் உற்பத்தியின் விலை அதிகரித்து வருவதைக் குறிப்பிட்டனர். எனவே, வீட்டுக் தோட்டங்களைப் பராமரிக்கும் குடும்பங்கள் பெரும்பாலும் தங்கள் சொந்த உற்பத்திகளையே சார்ந்துள்ளன. பெரும்பாலான குடும்பங்கள் ஒவ்வொரு வேளைக்கும் ஒரு காய்கறி குழம்பை உறுதி செய்கின்றன. பண்டமாற்று முறைகள் சமூக உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு, கிராமத்தில் உள்ள பல வீடுகளுக்குப் பலதரப்பட்ட சத்தான உற்பத்திகள் கிடைப்பதையும் உறுதி செய்கின்றன**.**

## முறையான உணவுமுறை மாற்றத்திற்கான கட்டமைப்புத் தடைகள்

ஒரு முறையான உணவுமுறையைக் கட்டியெழுப்புவதற்கான தடைகள் பல உள்ளன. எமது ஆலோசனைகளின் போது, மக்களால் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்பட்ட இத்தகைய சவால்களை ஆணைக்குழு எதிர்கொண்டது. இவை அனைத்துத் தடைகளினதும் முழுமையான பட்டியல் அல்ல, ஆனால் இவை குறிப்பிட்ட ஒவ்வொரு பகுதியிலும் வாழும் மக்கள் தங்களை மிகவும் ஒடுக்குவதாகக் கருதும் கட்டமைப்பு ரீதியான தடைகளை பிரதிபலிக்கின்றன.

இராணுவமயமாக்கல், காலனித்துவ காலத் பெருந்தோட்டக் கட்டமைப்புக்கள் மற்றும் புதிய விவசாய வணிகக் கூட்டமைப்புகள் ஆகியவை மக்கள் உணவு உற்பத்தி செய்வதைத் தடுப்பதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அவற்றின் சொந்த உற்பத்தி சந்தையில் உள்ள உள்ளூர் விவசாயிகளை பாதிக்கிறது. அது அவர்களுடைய நிலங்களிலிருந்து மிகவும் தொலைவில் உள்ள மேல்வர்க்கத்தினர் அல்லது ஏற்றுமதி சந்தைகளை குறிக்கோளாக கொண்டுள்ளது. சமூகங்களும் அவர்கள் பயிரிட்டவைகளில் சிலவற்றை விற்கத் திட்டமிடுகின்றன என்றாலும், உணவு உற்பத்தியுடன் அவர்களுடைய தொடர்பு தினசரி உணவு, குடும்ப வாழ்வு மற்றும் சமூக உறவுகளுடன் சேர்ந்திருப்பதாகும், இது நிறுவன மற்றும் இராணுவ மாதிரிகளோடு இணையாதவை ஆகும். ஆணாதிக்கம் மற்றும் பாலினம் நிலம் மற்றும் விவசாயம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் முக்கியமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன, குறிப்பாக யார் அந்த முடிவுகளை எடுக்கிறார்கள் என்பது. பெண்கள் நீண்ட காலம் உணவு உற்பத்தி மற்றும் பாரம்பரிய அறிவு பாதுகாப்பில் முக்கியப் பங்கு வகித்து வருகிறார்கள், இது விவசாயப் பணியின் பிரதான புரிதல்களில் புறக்கணிக்கப்பட்டுள்ளவை.

1. இராணுவ நில ஆக்கிரமிப்பும் உணவு முறையும்

வட மாகாணத்தில் பெருமளவிலான நிலங்கள் இன்றும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. யுத்தம் முடிவடைந்து பதினேழு ஆண்டுகள் ஆகியும், சில நிலங்கள் விடுவிக்கப்பட்டாலும், பாதுகாப்பு உள்கட்டமைப்புகளை விரிவுபடுத்துவதற்காக புதிய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, வலிகாமம் வடக்கு பிரிவில் உள்ள பலாலியில் மட்டும் சுமார் 3000 ஏக்கர் நிலம் இன்றும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பகுதியில் இருந்த மக்களின் வீடுகள் இடிக்கப்பட்டன. நீதிமன்ற வழக்குகளும், பொது உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவிப்புகளிற்கும் பின்னர், சில வீதிகள் எப்போது மற்றும் யார் அந்த வீதிகளில் பயணம் செய்யலாம் என்ற நிபந்தனைகளோடு விடுவிக்கப்பட்டுள்ளன.

முன்னர் இங்கு வாழ்ந்த மக்கள் நிலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தனர். தென்னை, பலா, மா போன்ற மரங்கள் அவர்களுக்கு ஆண்டு முழுவதும் உணவை வழங்கின. அதைத்த தவிர வாழை, சிறு மரக்கறிகள், மற்றும் மிளகாயையும் பயிரிட்டனர். தற்போது இடம்பெயர்ந்து வாடகை வீடுகளிலும் உறவினர்களுடனும் வாழும் இவர்களுக்குத் தங்களின் நிலத்தை அணுகவோ அல்லது பயிர்ச்செய்கை மேற்கொள்ளவோ வாய்ப்பில்லை. தங்களது சொந்த நிலங்களில் பயிரிட்டு வீட்டுத் தோட்டத்திற்குள் உற்பத்தி செய்து அவர்கள் கொண்டிருந்த நிறைவுத்த தன்மை இடப்பெயர்வினால் காணாமல் போய் விட்டன.

மக்கள் வாழ்ந்த அதே நிலங்களில் தற்போது இராணுவம் சோளம், தென்னை, வாழை, வெண்டை, மிளகாய், மா மற்றும் கத்தரி போன்றவற்றை பயிரிடுவதுடன், கால்நடைகளையும் பராமரித்து தயிர் தொழிற்சாலையையும் நடத்தி வருகிறது. இந்த விளைபொருட்கள் உள்ளூர் சந்தையில் மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுவதால், இடம்பெயர்ந்த உள்ளூர் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. அமர்வில் பங்குபற்றியவர்கள் குறிப்பிட்டதாவது, சில சந்தர்ப்பங்களில், அங்கு ஒரு காலத்தில் இருந்த வீடுகளின் உரிமையாளர்கள் தற்போது தங்கள் சொந்த நிலத்தில் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர், அவர்களிற்கு இராணுவத்தால் நாள் சம்பளம் வழங்கப்படுகிறது. வேலை கிடைப்பது கடினமான ஒரு பொருளாதார சூழலில், சிறிய வருமானத்தை உறுதி செய்வதற்காக மக்கள் இந்த வேலைகளை ஏற்கின்றனர்.

இந்த சமூகங்கள் தங்கள் நிலங்கள் மற்றும் பல பொது இடங்கள் அதாவது பண்ணைகள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றில் இருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்றும் அவற்றினை தாம் மீண்டும் அணுக வேண்டும் என்றும் கோரிக்கைய முன்வைத்து பல தற்காலிக

போராட்டங்களை நடத்தியுள்ளனர். இதற்காக நீதிமன்றங்களில் வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் ஆக்கிரமிப்பு தொடர்கிறது.

பெருந்தோட்ட காணிகள், அரசியல் புறக்கணிப்பு மற்றும் உணவு முறை

மத்திய மலைநாட்டில் ஆலோசனையில் கலந்துகொண்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள், தாங்கள் பயிர் செய்யும் திறன் அவர்கள் வாழும் பெருந்தோட்ட நிர்வாகங்களின் முடிவுகளாலேயே தீர்மானிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். சில தோட்டங்களில், பல தலைமுறைகளாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் பயிர் செய்து வரும் குடும்பங்களும் தனி நபர்களும் அதனைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர். நீண்ட காலமாக இத்தகைய பயிர்ச்செய்கை நடைபெற்று வருவதால், தோட்ட நிர்வாகம் அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க இப்போது அனுமதிக்கிறது. இருப்பினும், ஏனைய தோட்டங்களில், தொழிலாளர்கள் தங்கள் லயன் வீடுகளுக்கு முன்னால் உள்ள சிறிய இடங்களில் ஏதேனும் வளர்க்க முயற்சிக்கும் அதே கணமே விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தொழிலாளர்கள் வாழை அல்லது சிறிய தென்னை மரங்களை வளர்க்க முயன்றாலும், அவை வளரத் தொடங்கியதும் தோட்ட நிர்வாகம் பணியாளர்களை அனுப்பி அந்த மரங்களை வெட்டி, நாற்றுகளை அகற்றுவதாகப் பங்கேற்பாளர்கள் விவரித்தனர்.

இந்தக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் ஒரு வெளிப்படையான இன ரீதியான பாகுபாடு காணப்படுகிறது. தொழிலாளர்கள் பயிர் செய்வதற்கோ அல்லது சிறு வணிகங்களைத் தொடங்குவதற்கோ கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இருப்பினும், தோட்டத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாத வெளி நபர்கள், அதாவது அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள் அல்லது நகரவாசிகள், தோட்டத்திற்குள் தங்களுக்கு விருப்பமான முறையில் பயிர் செய்யவும் கட்டுமானங்களை மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இத்தகைய சூழ்நிலைகளில், மலையகத் தமிழ் தொழிலாளர்கள் தங்கள் வீடுகளுக்கு முன்னால் சில மிளகாய் செடிகளை வளர்ப்பதற்குக் கூட தடை விதிக்கப்படும் அதேவேளை, சிங்கள கிராம மக்கள் தோட்ட நிலங்களுக்குள் தேயிலை பயிரிட அனுமதிக்கப்படுகிறார்கள்.

இக்கதைகள் மத்திய மலை நாட்டின் ஹட்டன் மற்றும் தெற்கு மலை நாட்டின் தெனியாய ஆகிய இடங்களில் நடைபெற்ற அமர்வுகளில் முன் வைக்கப்பட்டன. ஒரு சில பங்கேற்பாளர்கள் தங்கள் வீடுகளுக்கு முன்னால் உள்ள பகுதிகளில் சிறிய அளவில் பயிர் செய்ய அனுமதிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டனர். இவ்வாறு மிளகாய் மற்றும் மரவள்ளிக் கிழங்கு போன்றவற்றை வளர்ப்பது, தங்களின் மாதாந்த வீட்டுச் செலவுகளைக் குறைக்கவும், மட்டுப்படுத்தப்பட்ட வருமானத்தைப் பிற அத்தியாவசியத் தேவைகளுக்காகச் சேமிக்கவும் உதவியதாக அவர்கள் தெரிவித்தனர்.

காணி மற்றும் வீட்டு உரிமை என்பது பல தசாப்தங்களாக மலையகத் தமிழ் சமூகத்தின் அரசியல் கோரிக்கைகளின் மையப்பொருளாக இருந்து வருகின்றது. தலைமுறை தலைமுறையாக லயன் வீடுகளில் வாழ்ந்து உழைத்த போதிலும், தொழிலாளர் வர்க்கத்தின் மீதான தங்களது கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக் கொள்ள விரும்பும் தோட்ட நிர்வாகங்களால் அவர்களுக்கு காணி உரிமை முறையாக மறுக்கப்படுகிறது. இந்த மறுப்பு என்பது வெறும் வீட்டு வசதி சார்ந்த விடயம் மட்டுமல்ல இது உணவு முறையில் அந்தச் சமூகம் முழுமையாகப் பங்கேற்பதைத் தடுக்கும் நேரடியான மற்றும் தொடர்ச்சியான விளைவுகளைக் கொண்டுள்ளது.

இலங்கையில், அரசாங்கத்தினால் நடத்தப்படும் விவசாய சேவை மையங்களில் பதிவு செய்வதற்கு காணி உறுதிப் பத்திரம் வைத்திருப்பது ஒரு முன் நிபந்தனையாகும். இந்தப் பதிவு இல்லாவிடில், ஒரு விவசாயியால் விரிவாக்க சேவைகள், சந்தை தகவல்கள், பயிற்சிகள், மானியங்கள் அல்லது விவசாய அமைப்புகளில் உறுப்பினராகும் தகுதி ஆகியவற்றைப் பெற முடியாது. நீர்ப்பாசன அமைப்புகளும் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளை மட்டுமே ஏற்றுக்கொள்கின்றன. இதன் பொருள் என்னவென்றால், இந்த நிலத்தில் விவசாயம் செய்து தங்களது குடும்பங்களை ஊட்டி வளர்த்த பல மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள், முறையான விவசாய உதவி அமைப்புகளிலிருந்து முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் புறக்கணிப்பானது தோட்டப் பொருளாதாரத்தின் வரலாற்று ரீதியான வடிவமைப்பைப் பிரதிபலிக்கிறது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட

மலையகத் தமிழ் சமூகம், ஒரு சிறைப் பிடிக்கப்பட்ட உழைப்பு சக்தியாகவே தோட்ட அமைப்பிற்குள் உள்வாங்கப்பட்டது. சுதந்திரம் அடைந்து பல தசாப்தங்களாகியும், அந்த ஏற்பாட்டின் கட்டமைப்பு நிலைமைகள் இன்னும் நீடிக்கின்றன: நிலம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது, வீட்டு வசதி வேலைவாய்ப்புடன் பிணைக்கப்பட்டுள்ளது மற்றும் சுதந்திரமாகப் பயிர் செய்யும் திறன் குறைக்கப்பட்டுள்ளது. இது தற்செயலானது அல்ல மாறாக உழைப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான ஒரு திட்டமிட்ட பொறிமுறையாகும்.

இதன் விளைவுகள் உணவுப் பாதுகாப்பிலும் அரசியல் குரலிலும் உணரப்படுகின்றன. விவசாய அமைப்புகள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புகளிலிருந்து புறக்கணிக்கப்படுவது, விவசாயிகள் தங்கள் கவலைகளைத் தெரிவிக்கவும், கொள்கைகளை வடிவமைக்கவும் மற்றும் கூட்டு பேரம் பேசும் சக்தியை உருவாக்கவும் உள்ள இடங்களை இல்லாமல் ஆக்குகிறது. குறிப்பாக, தோட்டங்களிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உணவு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்காற்றும் மலையகத் தமிழ் பெண்கள், இரட்டைப் புறக்கணிப்புக்கு உள்ளாகிறார்கள்: பாலின ரீதியாகவும், சாதி சார்ந்த உழைப்பு படிநிலைகளாலும் அவர்கள் தினசரி விவசாய உழைப்பைச் செய்த போதிலும், “விவசாயிகள்” என்பதற்குப் பதிலாக “கூலித் தொழிலாளர்கள்” என்றே வகைப்படுத்தப்படுகிறார்கள்.

தோட்ட முறையானது, மலையகத் தமிழ் மக்கள் தாங்கள் வாழும் நிலத்தை சொந்தமாக்கிக் கொள்வதைத் தடுத்தது மட்டுமல்லாமல், அவர்களை விவசாயிகளாக அங்கீகரிப்பதையும் தடுத்துள்ளது. இதன் விளைவாக, உணவு உற்பத்தியில் ஆழமாக வேரூன்றியிருந்தும், தங்களின் சொந்த உணவு எதிர்காலத்தை வடிவமைக்க அனுமதிக்கும் உரிமைகள், வளங்கள் மற்றும் நிறுவன ரீதியான அங்கீகாரங்களிலிருந்து முறையாகப் புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகமாகவே அவர்கள் உள்ளனர்.

**விவசாய வணிகம் மற்றும் உணவு முறையின் நிறுவன மயமாக்கல்**

ஊவா மாகாணமானது குளிர்ந்த மலைகள் முதல் வறண்ட சமவெளிகள் வரையிலான பல்வேறுபட்ட சுற்றுச்சூழல் அமைப்புகளைக் கொண்டுள்ளது. மலைப் பகுதிகளில் தேயிலைத் தோட்டங்கள் பொதுவாகக் காணப்பட்டாலும், 1980 - களிலிருந்து சமவெளிப் பகுதிகளில் வணிக ரீதியான விவசாயத்திற்காகப் பெருமளவிலான நிலங்கள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் மிகப் பெரியது, பெல்வத்தை மற்றும் செவனகல பகுதிகளில் சர்க்கரை உற்பத்திக்காக கரும்பு பயிரிட அரசுக்குச் சொந்தமான இலங்கைத் சீனி தொழிற்சாலை மேற்கொண்டு வரும் முயற்சியாகும்.

இந்தத் தோட்டங்கள் இரண்டு வழிகளில் உற்பத்தியை மேற்கொள்கின்றன. தோட்டப் பரப்பளவிற்குள் நிலம் உள்வாங்கப்பட்ட உள்ளூர் விவசாயிகள், ஒரு வெளிப்புற உற்பத்தியாளர் மாதிரியில் பணியாற்றி, தங்களின் அறுவடையை மீண்டும் தொழிற்சாலைக்கே விற்பனை செய்கிறார்கள். பயிர்ச் செய்வதற்காக இப்பகுதிக்கு அழைத்து வரப்பட்ட மக்களுக்கு, நிர்வகிப்பதற்கென ஒரு குறிப்பிட்ட ஏக்கர் நிலம் வழங்கப்படுகிறது. கரும்புப் பயிர்கள் பூமியிலிருந்து அதிக அளவு நீரை உறிஞ்சுவதால், இந்தப் பயிர்ச்செய்கை அப்பகுதியில் வெப்பத்தை அதிகரித்துள்ளதுடன், வறட்சிக்கும் வழிவகுத்துள்ளது. மேலும், கரும்புச் செய்கையைப் பராமரிக்கப் பயன்படுத்தப்படும் அதிகப்படியான இரசாயனங்களின் அளவு, தற்போது வேறு எந்தப் பயிர்ச்செய்கைக்கும் தீவிரமான இரசாயன உள்ளீடுகள் தேவைப்படும் நிலைக்கு மண்ணைத் தள்ளியுள்ளது.

தொழிற்சாலைக்காகப் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு விதிக்கப்படும் நிபந்தனை என்னவென்றால், அவர்கள் தங்கள் நிலத்தில் வேறு எந்தப் பயிரையும் வளர்க்க முடியாது என்பதாகும். சேனைப் பயிர்ச்செய்கையிலிருந்து கரும்பு என்ற ஒற்றைப் பயிர்ச் செய்கைக்கு மாறியுள்ளதால், விவசாயிகளும் குடும்பங்களும் பயிர் பன்முகத்தன்மை இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது அவர்களுக்குச் சமச்சீரான உணவைப் பெறுவதிலோ அல்லது பல்வேறுபட்ட விளைபொருட்களை விற்பனை செய்வதிலோ பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஒற்றைப் பண்டப் பயிரைச் சார்ந்திருக்கும் இந்த நிலை, விவசாயக் குடும்பங்களை விலை மாற்றம், காலநிலை அதிர்ச்சிகள் மற்றும் தங்களால் கட்டுப்படுத்த முடியாத தொழிற்சாலையின் முடிவுகளுக்கு ஆட்பட வைக்கிறது. ஆலோசனைகளின் போது பெண் விவசாயிகள் குறிப்பிட்டது போல, அவர்களின் முந்தைய தலைமுறையில் ஒரு விவசாயக் குடும்பம் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்வது என்பது கேள்விப்படாத ஒன்றாக இருந்தது. ஆனால் இன்று, ஒரே ஒரு பயிரை மட்டும் வளர்க்கும் விவசாயிகள் தங்கள் குடும்பங்களுக்குப் போதுமான உணவை வழங்க முடியாமலும், சந்தையில் நம்பகமான முறையில் விற்பனை செய்ய முடியாமலும் தவிக்கின்றனர்.

கரும்புத் தோட்ட விரிவாக்கத்திற்காக ஊவா மாகாணத்தின் சுற்றுச் சூழலும் விவசாய முறைகளும் மேலும் சீரழிக்கப்படுவதை மக்களின் போராட்டங்கள் தடுத்து நிறுத்தியுள்ளன. இத்தகைய போராட்டங்கள் முதலீடு என்ற பெயரில் நாட்டிற்குத் தேவையான அந்நியச் செலாவணியைப் பாதிப்பதாகப் பெரும்பாலும் எதிர்ப்புகள் கிளம்புகின்றன. இந்த வாதமானது, ஏற்கனவே அதன் பாதிப்புகளைச் சுமந்து கொண்டிருக்கும் சமூகங்களின் மீது தேசியப் பொருளாதாரக் கொள்கையின் சுமையைச் சுமத்துவதுடன், நிறுவனங்களின் நலன்களைப் பொறுப்புக்கூறலிலிருந்து பாதுகாக்கிறது.

ஊவா மாகாணத்தில் நிலவும் இந்தச் சூழல் சர்க்கரைத் துறைக்கு மட்டும் உரியதல்ல இது விவசாய வணிகக் கட்டமைப்புகள் இலங்கையின் உணவு முறைகளை எவ்வாறு வடிவமைக்கின்றன மற்றும் கட்டுப்படுத்துகின்றன என்பதற்கான ஒரு பரந்த முன் மாதிரியாகும். 1960 - களின் பசுமைப் புரட்சிக்குப் பிறகு, இலங்கை விவசாயத்தில் இரசாயனப் பயன்பாடு கடுமையாக அதிகரித்துள்ளது, இது விவசாயிகளை அறிவு சார்ந்த நிலையான முறைகளைக் கைவிட்டு ஒற்றைப் பயிர் முறைகளை நோக்கித் தள்ளியுள்ளது. இதன் விளைவாக மண்ணின் வளம் குறைதல் மற்றும் மலட்டுத்தன்மை, சுற்றுச்சூழல் சீர்குலைவுகள் மற்றும் உலர் வலயத்தில் நிலத்தடி நீர் இரசாயனங்களால் மாசடைவதால் ஏற்படும் நாள்பட்ட சிறுநீரக நோய் போன்ற நோய்களின் பரவல் ஆகியவை ஏற்பட்டுள்ளன.

விதை விற்பனை நிறுவன மயமாக்கப்பட்டமை இந்தச் சார்பு நிலையை மேலும் ஆழப்படுத்தியுள்ளது. ஒரு காலத்தில் விவசாயிகள், குறிப்பாகப் பெண் விவசாயிகள், உள்ளூர் ரக விதைகளைச் சேமித்து பரிமாறிக்கொண்ட வழக்கம் தற்போது முழுமையாக விவசாய வணிக நிறுவனங்களின் கைக்கு மாறியுள்ளது. விவசாயிகள் இப்போது தங்களின் சொந்த சுற்றுச்சூழல் மற்றும் சமூக அறிவைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, ஒவ்வொரு பருவத்திலும் நிறுவனங்களிடமிருந்து இடு பொருட்களை வாங்குகின்றனர். பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டது போல, அதிகமான மக்கள் விதைகள், டிராக்டர் வாடகை மற்றும் பிற தேவைகளுக்காக நிறுவனங்களைச் சார்ந்திருக்கின்றனர் இதனால் பாரம்பரிய விவசாய முறைகள் படிப்படியாக அழிந்து வருகின்றன.

விவசாய வணிகத்தின் செல்வாக்கு கொள்கை வகுப்பிலும் நீடிக்கிறது. தொழில் மயமாக்கல், நகர்ப்புற மேம்பாடு மற்றும் ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கும் பாரிய பொருளாதாரக் கொள்கைகள் உள்ளூர் விவசாயத்தைத் தொடர்ந்து பலவீனப்படுத்தியுள்ளன. இதனால் விவசாயக் களம் வணிக நலன்களால் வடிவமைக்கப்படுகிறது: விவசாயிகள் ஒற்றைப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் ஆலோசனைகளைப் பெறுகின்றனர், மானியக் கட்டமைப்புகள் இரசாயன உள்ளீடுகளை வாங்குவதை ஊக்குவிக்கின்றன, மேலும் சந்தை முறைகள் சிறு உற்பத்தியாளர்களைப் புறக்கணித்து பெரிய நிறுவனங்களின் கைகளில் அதிகாரத்தைக் குவிக்கின்றன. கிராமப்புற விவசாயத்தில் அரசாங்கத்தின் முதலீடு கடுமையாகக் குறைந்துள்ள நிலையில், அந்த இடைவெளியைத் தனியார் நிறுவனங்கள் தங்களுக்குச் சாதகமான நிபந்தனைகளுடன் நிரப்புகின்றன. இது விவசாயிகளின் மீளெழுந்து நிற்கும் திறனைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாகச் சார்புநிலையைத் தீவிரப்படுத்துகிறது. இந்தத் தடைகள் அனைத்தும், உரிமைகளை விட லாபத்தைப் பாதுகாப்பதற்காகவே வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்ட கொள்கைகளின் முடிவுகளாகும்.

**உணவு முறையில் ஆணாதிக்கமும் பாலினமும்**

இலங்கையின் உணவு முறையில் பெண்கள் மிக முக்கியப் பங்காற்றுகின்றனர். பயிர்ச்செய்கை, கால்நடை பராமரிப்பு, உணவு தயாரிப்பு, விதைகளைப் பாதுகாத்தல் மற்றும் பாரம்பரிய அறிவைத் தலைமுறைகளுக்குக் கடத்துதல் எனப் பல்வேறு பணிகளுக்கு அவர்கள் பொறுப்பாக உள்ளனர். தெற்காசியாவில் உற்பத்தியாகும் உணவில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவற்றை பெண்களே உற்பத்தி செய்கின்றனர். இத்தகைய மையமான பங்களிப்பை வழங்கிய போதிலும், உணவு முறைக்குள் அவர்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரம், கௌரவம் மற்றும் வளங்களுக்கான அணுகல் ஆகியவை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டே காணப்படுகின்றன. பெண்கள் “விவசாயிகள்” என்று முறையாக அங்கீகரிக்கப்படுவது அரிதான ஒன்றாகவே உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை, ஒருவரை “விவசாயி” என அடையாளப்படுத்துவது என்பது காணிப் பதிவு, விவசாய உதவிச் சேவைகள், கடன் வசதிகள், சந்தை வாய்ப்புகள் மற்றும் நிறுவன ரீதியான பிரதிநிதித்துவம் ஆகியவற்றைப் பெறுவதற்கான ஒரு திறவு கோலாகும்.

நிலத்திற்கான அணுகல் மற்றும் நில உரிமையே இதற்கான அடிப்படைத் தடையாகும். உலகளவில் பெண் விவசாயிகள் வெறும் 2 சதவீத நிலத்தையே வைத்துள்ளனர் இலங்கையிலும் இதே நிலைதான் நீடிக்கிறது. காணி உறுதிப்பத்திரம் இல்லாததால், அரசாங்க மானியங்கள், விரிவாக்கச் சேவைகள், சந்தைத் தகவல்கள் மற்றும் பயிற்சிகளைப் பெறுவதற்கான நுழைவாயிலான 'விவசாய சேவை மையங்களில்' பெண்களால் பதிவு செய்ய முடிவதில்லை. மேலும், அவர்கள் விவசாய அமைப்புகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகும் தகுதியற்றவர்களாகின்றனர். இது அவர்கள் கூட்டாகச் செயல்படுவதையும், சந்தை விலைகளை பேரம் பேசுவதையும் அல்லது விவசாயக் கொள்கைகளை வடிவமைப்பதையும் தடுக்கிறது. ஆலோசனைகளின் மூலம் கண்டறியப்பட்டபடி, இத்தகைய இடங்களிலிருந்து புறக்கணிக்கப்படுவது என்பது வெறும் பொருளாதார இழப்பு மட்டுமல்ல, அது பெண் விவசாயிகள் தங்களை ஒரு உற்பத்தியாளராக அடையாளப்படுத்திக் கொள்வதையும் மறுக்கிறது.

குறிப்பாக கிராமப்புறப் பெண்கள் மற்றும் பெண் விவசாயிகள், உற்பத்தி மற்றும் குடும்பப் பராமரிப்பு ஆகிய இரு பொறுப்புகளையும் கணக்கில் கொள்ளும்போது, ஆண்களை விட ஒரு நாளில் அதிக நேரம் உழைக்கின்றனர். இருப்பினும், இந்த உழைப்புக்குக் குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது அல்லது அது குறைத்து மதிப்பிடப்படுகிறது. பெண்களின் விவசாயப் பணிகள் பெரும்பாலும் வீட்டு வேலைகளுடன் இணைந்தே செய்யப்படுவதால், அவை ஒரு பொருளாதாரச் செயல்பாடாகக் கருதப்படாமல் "குடும்பப் பொறுப்பாகவே" வகைப்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக, தினசரி விவசாய வேலைகளைச் செய்த போதிலும், அந்தப் பெண்களோ அல்லது அவர்களைச் சார்ந்த சமூகமோ அவர்களை "விவசாயிகள்" என்று அடையாளப் படுத்துவதில்லை.

பெண் விவசாயிகள் வரலாற்று ரீதியாக உள்ளூர் ரக விதைகளைப் பாதுகாப்பவர்களாகவும், பாரம்பரிய விவசாய முறைகளைப் பேணுபவர்களாகவும் இருந்து வந்துள்ளனர். இது ஒரு சுற்றுச் சூழல் மற்றும் கலாசார நடைமுறையாகத் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வந்தது. இருப்பினும், நிறுவனங்களின் தனியுரிமை சார்ந்த இரகங்களில் ஆர்வம் காட்டும் விவசாய வணிக அமைப்புகளின் விதை ஆதிக்கம், பெண்களின் இந்தப் பாத்திரத்தைச் சிதைத்துள்ளது. விதைகளின் மீதான நிறுவனங்களின் கட்டுப்பாடு என்பது பெண்களின் விவசாயப் பணியைப் பறித்தது மட்டுமல்லாமல், அவர்களின் அடையாளம், சமூக அந்தஸ்து மற்றும் தலைமுறைத் தகவல்களைப் பகிரும் வாய்ப்பையும் இல்லாது செய்துள்ளது என ஆலோசனைகளின் போது பெண் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, ஆணைக்குழுவின் ஆலோசனைகளின் போது சந்தித்த பல பெண் விவசாயக் குழுக்கள் "சமூக விதை வங்கிகளை நிறுவியுள்ளன. இவை விவசாயிகளால் கூட்டாக நிர்வகிக்கப்படும் சேமிப்புக் களஞ்சியங்களாகும். இங்கு அவர்கள் உள்ளூர் ரக விதைகளைப் பாதுகாத்துத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றனர். இந்த முயற்சிகள் வெறும் உணவு உற்பத்திக்கான செயல் மட்டுமல்ல நிறுவனங்களின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக தங்களின் விதை இறையாண்மையையும் சமூகத்தின் மீளெழுந்து நிற்கும் திறனையும் நிலைநாட்டும் ஒரு திட்டமிட்ட போராட்டமாகும். எனவே, விதைகளுக்கான பெண்களின் உரிமையைப் பாதுகாப்பது என்பது பாலின நீதி சார்ந்த ஒரு விடயம் மட்டுமல்ல, அது உணவு இறையாண்மை சார்ந்த ஒரு முக்கிய அம்சமுமாகும்.

## விதப்புரைகள்

தற்போதைய உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் ஒழுங்கினுள் நீதி, நிலைபெறுதன்மை, மற்றும் இறையாண்மை ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் இலங்கையின் உணவு முறைமையில் முழுமையான நிலைமாற்றத்தைக் கற்பனை செய்தல் சாத்தியமற்றது. தற்போதைய ஒழுங்கு, உலகளாவிய மூலதனத்திற்கான இலாபங்களை அதிகரித்தலின் மூலம் உந்தப்பட்டு முழு உலகையும் பல்வேறு நெருக்கடிகளுக்குள் தள்ளியுள்ளது.

எமது உணவு முறைமையில் ஆரம்பித்து, இலங்கை போன்ற நாடுகள் முறைமை மாற்றத்தில் முன்மாதிரியாக செயற்பட முடியும். பின்வரும் விதப்புரைகளின் தொகுப்பு அந்த இலக்கை நோக்கிய நாட்டின் பாதையை ஆரம்பிப்பதற்கு உதவும்

1. உணவு, காணி, நீர், விதைகள் மற்றும் பொது வளங்களுக்கான அணுகல் என்பவற்றை **அடிப்படை உரிமைகளாக** இலங்கை அரசாங்கம் அங்கீகரித்தல் வேண்டும்.

2. உணவு இறைமை மற்றும் விவசாய சூழலியற் கோட்பாடுகளின் அடிப்படையில், விவசாயம், மீன்பிடி மற்றும் வர்த்தகம் உள்ளடங்கலான எமது **உணவு முறைமை மீதான கொள்கைக் கட்டமைப்பை** மறுசீரமைப்பதற்கான ஓர் உடனடி செயன்முறை இலங்கைக்குத் தேவைப்படுகின்றது. அனைத்துக் கண்ணோட்டங்களும் கூட்டிணைக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டுப் பின்னூட்டகளைப் பெறுவதற்கான போதிய வழிமுறைகளுடன், உணவு உற்பத்தியாளர்கள், நுகர்வோர், நிபுணர்கள் மற்றும் ஏனைய பங்கீடுபாட்டாளர்களுடன் கலந்தாலோசித்து இந்தக் கொள்கைகளின் வரைவைத் தயாரிப்பதற்கான ஒரு குழுவை அரசாங்கம் நியமித்தல் வேண்டும்.

   கொள்கை மறுசீரமைப்புகளுக்கு இணையாக, உரிய அதிகாரிகள், நிறுவனங்கள் மற்றும் உற்பத்தியாளர் அமைப்புகளை ஒருங்கிணைத்து, உணவு இறைமை மற்றும் விவசாய சூழலியலை மேம்படுத்துவதற்காக ஒன்றுபட்ட நோக்கு, நிகழ்ச்சித்திட்டச் சட்டகம், மற்றும் பல்வேறு பங்கீடுபாட்டாளர்களிடையேயான ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் ஒருங்கிணைந்த செயற்திட்டம் ஒன்றினை அது விருத்தி செய்தல் வேண்டும்.

   இந்த செயற்திட்டம், தேசிய மட்டத்திலிருந்து உள்ளூர் மட்டம் வரையான தகுந்த ஒருங்கிணைப்பை உறுதி செய்வதுடன், துறைகளின் ஆராய்ச்சி, புத்தாக்கம், மற்றும் கல்வி முன்னுரிமைகளுக்கும் வழிகாட்டலை வழங்குதல் வேண்டும். மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஓர் அதிகாரசபை தாபிக்கப்படுதல் வேண்டும்.

3. **விவசாய சூழலியலைப்** பிரதான உணவு உற்பத்தி மூலோபாயமாக மாற்றுவதற்கு அரசாங்கம் அவசியமான பொறிமுறைகளை அமைத்தல் வேண்டும். விவசாயிகள் மற்றும் கிராமியப் பிரதேசங்களில் தொழில்புரியும் ஏனைய மக்களின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின் (ருனேுசுழீ) கையொப்பதாரர் ஒருவராக, அவசியமான சட்ட மற்றும் முறைமைசார் மறுசீரமைப்புகளின் ஊடாக ஒழுங்குவிதிகளைச் சட்டவாக்கம் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

4. உணவு இறைமையின் கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கும் **தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கை** ஒன்றினை அரசாங்கம் விருத்தி செய்தல் வேண்டும். அதனைத் தொடர்ந்து, சமுதாயங்கள் மற்றும் ஏனைய பங்கீடுபாட்டாளர்களுடன் ஓர் அர்த்தமுள்ள கலந்தாலோசனைச் செயன்முறையும் மேற்கொள்ளப்பட வேண்டும். அபிவிருத்திக் கருத்திட்டங்கள், முதலீட்டுக் கருத்திட்டங்கள், பாரிய அளவிலான வர்த்தக ஒற்றைப் பயிர்ச்செய்கைக் கருத்திட்டங்கள் அல்லது நிலைபெறுதகு வலுசக்தி என்பவற்றிற்காக இயற்கை வளங்கள், விவசாய நிலங்கள், புற்தரைகள் மற்றும் மீன்பிடிப் பிரதேசங்கள் ஆகியவற்றின் உரிமையாண்மை மற்றும்.்.அல்லது அழிவு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5. சுற்றுலாத்துறை, மின் உற்பத்தி மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு போன்ற உரிய ஏனைய துறைகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் அதேவேளை, நீர்ப்பாசனத்திற்கான **நீரின்** ஒதுக்கீடு மற்றும் விநியோகத்தில் அரசாங்கம் விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் பொது வளங்களுக்கான உரிமைகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடாது என்பதுடன் சம்பந்தப்பட்ட உள்ளூர் பிரதேசங்களின் சூழலியல் சமநிலையை ஊக்குவித்துப் பாதுகாக்கவும் வேண்டும். பொருத்தமான

சட்டவாக்கச் சட்டகங்களின் ஊடாக நீருக்கான அணுகல் அடிப்படை உரிமை ஒன்றாக உத்தரவாதமளிக்கப்பட வேண்டும் என்பதுடன் இந்த உரிமையை மீறுகின்ற அல்லது இதனை இரத்துச் செய்கின்ற சட்ட அல்லது கொள்கை நடவடிக்கைகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படுதலுமாகாது. மேலும், சம்பந்தப்பட்ட உள்ளூர் பகுதிகளின் பரந்த சூழற்தொகுதி முறைமைகளுடன் உள்ளார்ந்த விதத்தில் இணைக்கப்பட்ட கிராம நீர்ப்பாசன முறைமைகளை வலுப்படுத்திப் பாதுகாக்கும் அதேவேளை, உள்ளூர் விவசாய நடைமுறைகளில் காணப்படும் பல்வகையான பாரம்பரிய நீர்ப் பயன்பாட்டு முறைகளும் அங்கீகரிக்கப்பட்டு உள்ளடக்கப்படுதல் வேண்டும். (உதாரணம்: எல்லங்கா∴ அருவி அமைப்பு முறைகள்).

6. விவசாயிகளைப் **பாரம்பரிய விதை வகைகளின்** பாதுகாவலர்களாக அரசாங்கம் அங்கீகரித்தல் வேண்டும் என்பதுடன், விதைகளை உற்பத்தி செய்வதற்கும், பேணுவதற்கும் அவற்றைப் பரிமாற்றம் செய்வதற்கும் அவர்களுக்கு அனுமதியளித்தலும் வேண்டும். தற்போதுள்ள தேசிய விதை வங்கிகளின் வசதிகள் மற்றும் தொழிற்பாடுகளையும் அது மேம்படுத்தல் வேண்டும். இவை விவசாயிகளுடன் இணைந்து, சுதேச விதைகளின் உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் பரவலாக்கம் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு முழுமையான விதை இறைமையை உறுதிப்படுத்தும் பொருட்டு மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளின் கூட்டாண்மை உடைமையால் உருவாக்கப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்படுதல் வேண்டும்.

7. **புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்** கருத்திட்டங்கள் உணவு இறைமையின் கோட்பாடுகளை மீறுதலாகாது என்பதுடன் சமுதாய அடிப்படையிலான நிலைபெறுதகு வலுசக்தியும் ஊக்குவிக்கப்பட வேண்டும்

8. சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் கடன் வழங்குநர்களின் ஆலோசனைக்கு அமைவாக, ‘அரச-தனியார் பங்காண்மை’ மாதிரியின் கீழ் இயக்கப்படும் அரச பெருந்தோட்டங்கள், பண்ணைகள், மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் என்பவற்றின் குத்தகை மற்றும் **தனியார்மயமாக்கலை** அரசாங்கம் உடனடியாக நிறுத்துதல் வேண்டும்.

9. **சர்வதேச மற்றும் பிராந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில்** கைச்சாத்திடும்போது வாழ்வாதாரங்கள் மற்றும் உணவு இறைமைக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்தல் வேண்டும். இத்தகைய உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் மீது மாத்திரமே உணவு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மேற்கொள்ளப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தப் பொருட்கள் உள்ளூர் விவசாயிகளின் உணவு உற்பத்திச் செயன்முறைகளைப் பாதிக்கின்றன என்பதுடன் தரமான உணவுக்கான மக்களின் உரிமையையும் மீறுகின்றன.

10. உணவுச் சந்தைகளில் இடையீடுகளை மேற்கொண்டு அவற்றை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கம் பிரதான வகிபங்கு ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். உற்பத்திப் பொருட்களுக்குத் **தகுந்த விலைகளையும்** உற்பத்தியாளர்களுக்குக் கட்டுபடியாகும் செலவுகளையும் உறுதிப்படுத்துவதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் போன்ற அரசாங்க நிறுவனங்கள் வலுப்படுத்தப்படுதல் வேண்டும். அதிகபட்ச சில்லறை விலையை (திட்டத்தை) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை ஆண்டு முழுவதும் மிகவும் கண்டிப்புடன் அமுலாக்கம் செய்தல் வேண்டும்.

11. வளங்கள் மற்றும் கொள்திறனைக் கட்டியெழுப்புதல் மூலம் பெண்கள் தலைமையிலான உற்பத்தியாளர் மற்றும் சந்தைப்படுத்தல் குழுக்களுக்கு விசேட கவனமொன்றைச் செலுத்துவதுடன், உற்பத்தியாளர்களின் தலைமையிலான, **கூட்டுறவை அடிப்படையாகக்கொண்ட** செயலாக்க மற்றும் சந்தைப்படுத்தல் முறைமைகளை வலுப்படுத்துவதில் அரசாங்கம் செயலூக்கத்துடன் ஈடுபடுதலும் வேண்டும்.

12. ஒரு சமூகத்தின் உள்ளூர் பொருளாதாரத்தின் மீதான அவர்களின் முகவராண்மை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் என்பவற்றை வலுப்படுத்தும் **சமுதாயக் கடன்** மற்றும் கடன் வழங்கும் முறைகளுக்கு ஆதரவு வழங்கும் பொருட்டு அரசாங்கம் பொறிமுறைகளை உருவாக்குதல் வேண்டும். சமூகங்களால் கட்டியெழுப்பப்பட்ட இந்த சேமிப்பு மற்றும் நிதிச் செயன்முறைகளைப் பாதிக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

13. விவசாய, நீரின மற்றும் கால்நடை உற்பத்தி என்பவற்றிற்கான அரசுக்குச் சொந்தமான செயலாக்க, பேணுகை மற்றும் களஞ்சிய **முறைமைகளை** அரசாங்கம் தாபித்தல் வேண்டும். அதே நோக்கத்திற்காக சமூகத்திற்கு சொந்தமான வசதி நிலையங்களுக்கும் வளங்களை வழங்குதல் வேண்டும். இந்த வசதி நிலையங்கள் தொடர்பான உரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் தேசிய உணவு இறைமைக்கு அத்தியாவசியமானதாகக் கருதப்படல் வேண்டும்.

14. சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் கூட்டிணைவுகள் தங்களது பயிர்ச்செய்கைக்கு ஏற்ற **தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்களை** நியாயமான விலையொன்றில் கொள்வனவு செய்வதற்கான அணுகலைக் கொண்டிருப்பதை அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும். உரிய இயந்திரங்கள் அல்லது பிரயோகங்களுக்குக் கூட்டுறவு உரிமையாண்மை வழங்கப்படுதல் வேண்டும். மேலும், உற்பத்தியாளர்களும் சமுதாயங்களும் தங்கள் சொந்தத் தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கான அறிவைப் பெறுவதற்கான கல்வியையும், அத்துடன் அவற்றை பராமரிப்பதற்கு அவசியமான ஆதரவுச் சேவைகளையும் அரசாங்கம் வசதி செய்தல் வேண்டும்.

**15.** **உணவு சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல்** மீதான வழிகாட்டல்களை அரசாங்கம் தயாரித்து வழங்குதல் வேண்டும். விளம்பரங்கள் அல்லது உற்பத்திகளின் விபரக்குறிப்புகளில் (டுயடிநட) காணப்படுகின்ற, நுகர்வோரின் ஆரோக்கியத்திற்கு அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் தவறாக வழிநடத்தும் தகவல்களை எதிர்கொள்வதற்கான சட்ட நடவடிக்கைகளை அது நடைமுறைப்படுத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, உள்ளூர் உணவுத் தெரிவுகள் மற்றும் அவற்றின் நன்மைகளுக்கு முன்னுரிமை அளிக்கின்ற, நுகர்வோருக்கு அறிவூட்டும் வலுவான பாடத்திட்டம் ஒன்றின் மூலம் ஆரோக்கியமான நுகர்வை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும.

16. உணவு பாதுகாப்பின் மீது **காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்தங்கள்** ஆகியவற்றினால் ஏற்படுத்தப்படும் கடுமையான விளைவுகளை கருத்திற் கொண்டு, விரிவான அனர்த்தத் தயார்நிலை, தணிப்பு மற்றும் மீளக் கட்டியெழுப்புதல் திட்டம் ஒன்றினை அரசாங்கம் உருவாக்குதல்வேண்டும். இந்தத் திட்டம் உள்ளூர் சமுதாயங்களுடனான கலந்தாலோசனையுடன் விருத்தி செய்யப்படல் வேண்டும் என்பதுடன் இதனை நடைமுறைப்படுத்துவதில் அவர்களின் பங்குபற்றலையும் உறுதி செய்தல் வேண்டும். காலநிலை மாற்றம் மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகளுக்கான தேசியப் பதிற்செயற்பாடுகளில் சுற்றாடல், உணவு, மற்றும் வாழ்வாதார முறைமைகளின் மீண்டெழுந்திறன் முன்னுரிமை பெறுதல் வேண்டும்.

17. பராமரிப்புப் பொருளாதாரத்தின் பங்களிப்பை அங்கீகரிப்பதன் மூலமும், வளங்கள் மற்றும் சந்தைக்கான அணுகலுக்கான பாரபட்சமான - சட்ட, கொள்கை, சமூக, நிறுவன, நடைமுறைசார் - தடைகளை நீக்குவதன் மூலமும், உணவு உற்பத்தியைப் பற்றியதான தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறைகளில் பெண்கள் ஒரு பகுதியாக இருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலமும், உணவு முறைமைக்குப் பங்களிப்பு வழங்குவதற்கான **பெண்கள்** அனைவரினதும் உரிமையை உறுதிசெய்யும் செயன்முறை ஒன்றினை அரசாங்கம் கட்டியெழுப்புதல் வேண்டும்.

18. மலையகத் தமிழ் சமூகத்திற்கான சட்டபூர்வ காணி உரிமைகள் அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள சமூகங்களுக்கு இராணுவமயமாக்கத்தின் கீழுள்ள காணிகளை விடுவித்தல் ஆகிய நீண்ட காலக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இந்தக் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான பொறிமுறைகள் உணவு இறைமையையும், கலாசாரம் மற்றும் வாழ்வாதாரங்கள் பேணப்படுவதையும் அத்துடன் கண்ணியமான வாழ்க்கைக்கான அனைத்து தேவைப்பாடுகளையும் ஏற்பாடு செய்வதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

19. அரசாங்கம், உணவு முறைமையின் நிலைமாற்றத்தில் பயனுறுதியுடன் பயன்படுத்தப்படக்கூடிய ஓர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை **இளைஞர்களின்** துடிப்பான **பங்குபற்றலுடன்** விருத்தி செய்தல் வேண்டும். இந்த முன்னெடுப்பு, விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளிலிருந்து விலகிச் செல்லும் இளைய தலைமுறையினரை ஈர்ப்பதற்கும், உணவு உற்பத்தியின் எதிர்காலத் தலைவர்கள் மற்றும் புத்தாக்குநர்கள் என அவர்களின் அடையாளத்தை மீள வடிவமைப்பதற்கும் உதவும்.

## இணைப்புகள்

### 01. ஆணையாளர்களுக்கான நேர்காணல் வழிகாட்டுதல்கள்

ஆணையாளரின் சுருக்கமான விளக்கம் - உணவு முறை என்பது நமது உணவை (மற்றும் பிற விவசாயப் பொருட்களை) உற்பத்தி செய்தல், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் நுகர்வு பற்றியது. தற்போதைய உணவு முறை நுகர்வோருக்கு மலிவு விலையில் நல்ல தரமான, சத்தான உணவை வழங்குவதில் தோல்வியடைந்துள்ளது' உற்பத்தியாளர்களுக்கு கண்ணியமான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதில் தோல்வியடைந்துள்ளது, பல சந்தர்ப்பங்களில், தற்போதைய உணவு உற்பத்தி முறைகள் நமது சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு அழிவுகரமானவை. தற்போதைய அமைப்பிற்குள், உணவு உற்பத்தியாளர்களுக்கு தங்கள் உரிமைகளைப் பெற அரசியல் மற்றும் சமூக சக்தி இல்லை.

நமது உணவு முறையின் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க பங்கேற்பாளர்கள் கடைப்பிடிக்கும் மாற்று வழிகளைப் பற்றி நாங்கள் விவாதிக்கிறோம்.

**உற்பத்தியில்:**

நீங்கள் என்ன உற்பத்தி செய்கிறீர்கள்? பயிர்களை பயிரிடுதல், மீன் பிடித்தல், கால்நடைகளை வளர்ப்பது, மற்றவை - நிலையான (சுற்றுச்சூழல், பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் சமூக ரீதியாக) உறுதி செய்ய நீங்கள் பயன்படுத்தும் மாற்று நடைமுறைகள் என்ன? உதாரணம் - இரசாயன மற்றும் பிற வெளிப்புற உள்ளீடுகளைக் குறைத்தல், சுற்றுச்சூழல் அழிவைக் குறைத்தல், உற்பத்தியைப் பன்முகப்படுத்துதல்

**மதிப்பு கூட்டல்:**

உங்கள் தயாரிப்புகளை பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டலில் நீங்கள் பின்பற்றும் (அல்லது முன்மொழியும்) நடைமுறைகள், இதனால் இடைநிலை சுரண்டல் இல்லாமல் அதிக விலைக்கு அவற்றை விற்க முடியும்? அதற்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் அறிவை நீங்கள் எவ்வாறு பெறுவீர்கள்?

**சந்தைப்படுத்தல்:**

நீங்கள் எப்படி விற்பனை செய்கிறீர்கள்? உங்கள் தயாரிப்புகளை விற்க, சுரண்டலைக் குறைத்து நிலையான வருமானத்தை உறுதிசெய்ய, நீங்கள் என்ன மாற்று சந்தைப்படுத்தல் அமைப்புகளை (தனிநபர் மற்றும் கூட்டு) உருவாக்கியுள்ளீர்கள்

**வளங்கள்:**

நிதி - (கடன், சேமிப்பு மற்றும் கடன்கள்), இயற்கை - (நிலம், நீர், விதைகள்),

தொழில்நுட்பம் - (இயந்திரங்கள், அறிவு) உள்ளிட்ட உள்ளிட்ட வளங்களை உங்கள் உரிமையுடனும் அணுகலுடனும் உறுதி செய்ய நீங்கள் என்ன மாற்று வழிமுறைகளைப் பயன்படுத்துகிறீர்கள் (அல்லது முன்மொழிகிறீர்கள்)?

**சேமிப்பு / பாதுகாப்பு:**

உணவு / விதைகளை சேமிக்க, உணவைப் பாதுகாக்கும் முறைகளுக்கு என்ன நுட்பங்கள் அல்லது வசதிகளைப் பயன்படுத்துகிறீர்கள்?

**நிறுவனங்கள்:**

நீங்கள் எந்த அமைப்புகளில் (சங்கங்கள், கூட்டுறவுகள், அதிகாரிகள்) உறுப்பினராக உள்ளீர்கள், உணவு உற்பத்தியாளர்களின் கூட்டு அமைப்புகளை உருவாக்கி அவர்களின் அரசியல் அதிகாரத்தை செயல்படுத்துவதற்கான உங்கள் திட்டங்கள் (பெண்கள், ஒதுக்கப்பட்ட குழுக்கள் மீது சிறப்பு கவனம் செலுத்துதல்)

**உழைப்பு:**

அனைவருக்கும் கண்ணியமான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கும் உற்பத்தியின் செலவுத் திறனை உறுதி செய்வதற்கும் உழைப்பை எவ்வாறு ஒழுங்கமைப்பது என்பது குறித்த உங்கள் தற்போதைய மாற்று நடைமுறைகள் அல்லது திட்டங்கள்.

**நுகர்வு:**

பெரும்பாலான நேரங்களில், உணவு உற்பத்தியாளர்களிடம் அவர்களின் நுகர்வுக்கு நல்ல தரமான உணவு இல்லை

(குறிப்பாக தோட்டங்கள், பெரிய அளவிலான தொழில்துறை விவசாய விவசாயிகள் போன்றவை). உணவு உற்பத்தியாளர்களின் உணவுப் பாதுகாப்பு ∴ உணவு உரிமையை மேம்படுத்துவதற்கான உங்கள் திட்டங்கள் என்ன?

நிலையான, நியாயமான உணவு முறையை உருவாக்க வேறு ஏதேனும் திட்டம்?

**02. பங்கேற்பாளருக்கான கேள்வித்தாள்**

பெயர்:

இடம் ∴ கிராமம்:

துறை: நெற் பயிர்ச்செய்கை / மீன்பிடி தொழில் / பால் பண்ணை / தோட்டப் பயிர்செய்கை / காய்கறிகள் / உணவுப் பயிர்கள் / ஒருங்கிணைந்த பண்ணை

………………………………………………………………………………………..

உங்கள் முக்கிய வாழ்வாதாரம் என்ன?……………………………………………………

இதைத் தவிர வேறு என்ன வளர்க்கிறீர்கள் ∴ உற்பத்தி செய்கிறீர்கள்?

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………..

நீங்கள் ஏதேனும் அமைப்பு அல்லது சங்கத்துடன் தொடர்புடையவரா?

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

தயவுசெய்து அதற்கு பெயரிடுங்கள்: …………………………………………………...

உங்களுக்கு என்ன வளங்கள் உள்ளன? (நிலம் ∴ இயந்திரங்கள்)

…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………

## 03. விவசாய சூழலியல் கோட்பாடுகள்.

| பொருளாதாரம் | அரசியல் | சூழல் | கலாச்சாரம் சமூகம் |
|---|---|---|---|
| விதைகள், நிலங்கள் மற்றும் பிரதேசங்களின் கட்டுப்பாட்டை மக்களின் கைகளில் ஒப்படைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது | உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் இடையிலான ஒத்துழைப்பையும், நியாயமான மற்றும் விரைவான விநியோக வலைப்பின்னல்களையும் ஊக்குவிக்கின்றது. | விவசாய வருமானத்தைப் பன்முகப்படுத்துவதன் மூலமும் சமூக சுயாட்சியை வலுப்படுத்துவதன் மூலமும் மீள்திறனை அதிகரிக்கிறது. | உள்ளூர் சந்தைகளின் ஆற்றலை அதிகரிப்பதையும் சமூக மற்றும் கூட்டு பொருளாதார தொலைநோக்குப் பார்வை உருவாவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| காலநிலை மாற்றத்திற்கு எதிரான மீள்திறன் மற்றும் தகவமைப்பை ஆதரிக்கிறது. | உணவு அமைப்புகளின் பரவலாக்கப்பட்ட, கூட்டு மற்றும் கூட்டுறவு நிர்வாகத்திற்கான புதிய மற்றும் மாற்று முறைகளின் உருவாக்கத்தை ஊக்குவிக்கின்றது. | ஆதரவளிக்கும் அரசக்கொள்கைகளும் முதலீடுகளும் தேவைப்படுகின்றன. | உணவு உற்பத்தியாளர்களின் முடிவெடுக்கும் செயல்பாட்டில் நுகர்வோரின் வலுவான ஈடுபாட்டை ஊக்குவிக்கின்றது. |
| விவசாயிகளிடையே அனுபவ பகிர்வை ஊக்குவிக்கின்றது. | பல்லுயிர்ப் பெருக்கத்தையும் மண்ணையும் வளப்படுத்துகின்றது | விவசாய இரசாயனங்களின் பயன்பாட்டையும் அதை சார்ந்திருப்பதையும் நீக்குகிறது | விவசாய சூழல் அமைப்புக்களின் வெவ்வேறு பாகங்களின் (தாவரங்கள், விலங்குகள் போன்றவை) ஒருங்கிணைப்பை அதிகரிக்கிறது. |
| | உணவு உற்பத்தியாளர்கள், உள்ளூர் சமூகங்கள், கலாச்சாரம், அறிவு, ஆன்மீகம் ஆகியவற்றை வலுப்படுத்துகின்றது | ஆரோக்கியமான உணவு முறைகளையும், வாழ்க்கை முறைகளையும் ஊக்குவிக்கின்றது. | மக்களிடையே பன்முகத்தன்மை மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதுடன், பெண்கள் மற்றும் இளைஞர்களின் மேம்பாட்டிற்கும் உதவுகிறது. |

உணவு ஒரு பொதுவான வளமாக அல்லாமல், வணிகப் பொருளாகக் கருதப்படும் வரை, பசி என்பது உற்பத்தியில் தோல்வியாக அல்ல, மாறாக அமைப்பின் ஒரு அம்சமாகவே தொடரும். உணவு இறையாண்மைலாப நோக்கு கொண்டதிலிருந்து, மனிதர்களுக்கும் இயற்கைச் சூழலுக்கும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒன்றை நோக்கி. நம்முடைய உணவு அமைப்பை மறுகட்டமைக்கும் வாய்ப்பை வழங்குகிறது .

MONLAR 35 Years for a better world!

NAFSO

LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை